விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 107 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 29, சனிக்கிழமை 12.03.2016

குடும்ப அரசியலால் **அழியப் போகும் ஜனநாயகம்**
பக். 13

## உணவு தவிர்ப்பை நேற்று கைவிட்டனர் கைதிகள்

### சட்டமா அதிபரின் உறுதிமொழியை அடுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 12
உணவு தவிர்ப்பில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகள் 14 பேர் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.
இதனால் குறித்த தமிழ் அரசியல் கைதிகள், கடந்த 18 நாள்களாக முன்னெடுத்து வந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்று நிறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த 14 கைதிகளும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது, சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையாகியிருந்த அரச சட்டவாதி, குறித்த கைதி பக். 06

## வலி. வடக்கில் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி நேற்று உணவு தவிர்ப்பு

### நலன்புரி முகாம் மக்கள் முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 12
மல்லாகம் நீதிவான் முகாமில் வசித்து வரும் மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துமாறு வலியுறுத்தி, முகாமில் நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை அடையாள உணவுதவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். பக். 25

### கிழக்குப் பல்கலை. தமிழ் மாணவர் மீது கடுமையான தாக்குதல்

திருகோணமலை, மார்ச் 12
கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தின் சித்த மருத்துவபீட தமிழ் மாணவர்கள் 9 பேர் நேற்று முன்தினம் இரவு காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குள்ளாகிய நிலையில், கடுங்காயங்களுடன் நிலாவெளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
50 துக்கும் மேற்பட்ட சிங்கள மாணவர்கள் மருத்துவபீடத்தினுள் நுழைந்து தம்மைத் தாக்கினர் என்று தாக்குதலுக்குள்ளான பக். 06

# வலி. வடக்கில் சில இடங்கள் இன்று விடுவிப்பார் மைத்திரி

### பின்னகர்த்தப்படுகின்றது உயர்பாதுகாப்பு வலய வேலி
### காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இன்று நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12
காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மற்றும் காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்கள் என்பன இன்றைய தினம் உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விடுவிக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
இந்த நிலையில், காங்கேசன்துறை வீதியில், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சற்றுத் தொலைவில் அமைக்கப்பட்டிருந்த உயர்பாதுகாப்பு வலயத்துக்கான வேலி பின்னகர்த்தப்படவுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று மணி நேரப் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வருகை தரவுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லமாக இருந்த - தற்போது இராணுவ முகாமாக உள்ள பிரதேசத்தில் உலங்கு வானூர்தி மூலம் ஜனாதிபதி வந்திறங்குவார்.
இதன்போது, உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தின் மாதிரி வீட்டைப் பார்வையிடவுள்ளார். 21 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருத்து வீட்டை (பிறறிங்) பார்வையிட்டு, அதனை வீட்டு பக். 25

## ராஜபக்ச படையணியினர் முதல்தர திருட்டுக் கும்பல்

### சபையில் நேற்றுக் கடுமையாகச் சாடினார் பிரதமர்



கொழும்பு, மார்ச் 12
ராஜபக்ச படையணிதான், உலகிலேயே மிகப்பெரிய திருட்டுக் கும்பல். ராஜபக்ச படையணி எப்படியெல்லாம் திருடியது - திருடப்பட்ட விதங்கள் குறித்து இன்னும் மூன்று மாதங்களில் அம்பலப்படுத்தப்படும். பக். 23

## எரியூட்டப்பட்ட வாகனத்துக்குள் கருகிய நிலையில் 5 சடலங்கள்

### தங்கொட்டுவவில் நேற்றுப் பயங்கரம்



கொழும்பு, மார்ச் 12
நீர்கொழும்பு - தங்கொட்டுவப் பிரதேசத்தில், பாழடைந்த வீதியில் எரியூட்டப்பட்டிருந்த வான் ஒன்றில் இருந்து 5 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
மீட்கப்பட்ட சடலங்கள் மிகவும் கருகிய நிலையில் பக். 25

முச்சந்தி முரளி



எதிர்பார்ப்புகளுடன் உள்ள மக்களுக்கு கருணை காட்டுங்கள்...

## தனியார்துறை ஊழியர்களுக்கு 2 கட்டங்களாகச் சம்பள உயர்வு

### சபையில் நிறைவேறியது சட்ட வரைவு
### நிலுவைக் கொடுப்பனவுக்கும் பரிந்துரை

கொழும்பு, மார்ச் 12
தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் இரண்டு கட்டங்களாக அதிகரிக்கப்படவுள்ளது. சம்பள அதிகரிப்பின் பிரகாரம் கடந்த கால நிலுவைச் சம்பளத்தையும் தொழில் வழங்குநர்கள் ஊழியர்களுக்கு வழங்கவேண்டும்.
இவ்வாறு தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.
வேலையாளர்களின் வரவு - செலவுத்திட்ட நிவாரணப்படி சட்ட வரைவு, வேலையாளர்களின் குறைந்த பக். 26

### எம்பிலிப்பிட்டிய துப்பாக்கிச் சூட்டில் குடும்பப் பெண் சாவு

கொழும்பு, மார்ச் 12
தென்னிலங்கையில் கடந்த சில தினங்களாக ஓய்ந்திருந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் பக். 24

## ஜன்னல் கம்பிகளை உடைத்து 28 பவுண் நகை, பணம் திருட்டு

### மன்னாரில் நேற்று அதிகாலை சம்பவம்

மன்னார், மார்ச் 12
வீட்டின் ஜன்னல் கம்பிகளை உடைத்து வீட்டினுள் புகுந்த திருடர்கள், 28 பவுண் தங்க நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச் சென்ற சம்பவம் நேற்று அதிகாலை மன்னாரில் இடம்பெற்றுள்ளது.
மன்னார் - பேசாலை 8 ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலேயே குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பில் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில், வீட்டின் உரிமையாளர் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது - பக். 23

## சிறைவாழ்வு தான் தமிழரின் தலைவிதியா? அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்!

### வலியுறுத்தி யாழ்.பல்கலை. மாணவர் உணவு தவிர்ப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 12
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும், மகசின் சிறையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் 14 தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் காந்தியின் படுகொலை புலிகள் செய்த மாபெரும் தவறு

## அன்ரன் பாலசிங்கம் ஒப்புக்கொண்டார் என்று எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12
இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை. விடுதலைப் புலிகள் செய்த பெரும் தவறு என்று புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் ஒப்புக் கொண்டார். இவ்வாறு நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பாக மார்க் சோல்ட்டர் எழுதியுள்ள, நூலிலேயே எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்த மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலையில் உள்ள தொடர்பை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மானும், முதலில் மறுத்தனர். 1991 மே 21 ஆம் திகதி அந்தக் கொலை நடந்து சில வாரங்கள் கழித்து அவர்கள் அன்ரன் பாலசிங்கத்திடம் உண்மையை ஒப்புக் கொண்டிருந்தனர்.



ராஜீவ்காந்தி கொலை விடுதலைப் புலிகளின் பெரிய தவறு என்று பாலசிங்கம் ஒப்புக் கொண்டார். தனிப்பட்ட முறையில் அவர், ராஜீவ் காந்தியின் கொலை ஒரு முழுமையான பேரழிவு என்று குறிப்பிட்டார்.

இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்பித் தமிழர்களைப் படுகொலை செய்ததற்குப் பழி வாங்கும் வகையிலும், ராஜீவ் அதிகாரத்துக்கு வந்தால் மீண்டும் படைகளை அனுப்பலாம் என்று கருதியுமே அவரைப் படுகொலை செய்யப் பிரபாகரன் விரும்பினார் என்று பாலசிங்கம் தெரிவித்தார்.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு லண்டனில் தனது இறுதிக் காலத்தைக் கழித்த அன்ரன் பாலசிங்கம்,

அமெரிக்கா - ஐரோப்பாவுடன் இணக்கத்தைஏற்படுத்த முனைந்தாலும், அவரது உண்மையான நாட்டம் இந்தியா மீதே இருந்தது. 2006 ஆம் ஆண்டு தனது வாழ்நாளின் இறுதிக் கட்டத்தில், ராஜீவ் காந்தி படுகொலையின் தவறுக்காக மன்னிப்புக் கோருவதற்கு முயற்சி செய்தார். ஒரு முறை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் போர்ப்பிரபு என்று குறிப்பிட்ட அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளை அரசியல் நிறுவனமாக மாற்ற வேண்டிய தேவை இருப்பதாகவும், என்னிடம் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் தவறுகளை ஒப்புக்கொள்ளும் நேர்மை அன்ரன் பாலசிங்கத்திடம் இருந்தது. காலப் போக்கில் பாலசிங்கத்தை நான் ஒரு உயர்ந்த மனிதனாக - நல்ல நண்பனாகக் கருதினேன், என்றும் எரிக் சொல்ஹெய்ம் அந்த நூலில் தெரிவித்துள்ளார்.

(த-ஜ-5)

## வன்புணர்வு சந்தேக நபருக்கு மறியல் நீடிப்பு

வவுனியா, மார்ச் 12
வவுனியா உக்கிளாங்குளம் பகுதியில் பாடசாலை மாணவியை வன்புணர்ந்து படுகொலை செய்த வழக்கில் கைதான சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றத்தில் நேற்று அவரது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போது அவர் தொடர்பிலான விசாரணைக்கு ஏதுவான மரபணுப் பரிசோதனை அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-ஜ-4)

## மகளிர் தின நிகழ்வு நாளை

கொழும்புத்துறை,மார்ச் 12
யாழ்ப்பாணம் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும், சன சமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் நாவலர் வீதிக் கிளை முகாமையாளர் திருமதி துஷ்யந்தி அருளானந்தம் கலந்து கொள்வார். நிகழ்வில் சமூகப் பணிகளுடன் தொடர்புடைய பெண்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

(த-ஜ-135)

## பனைசார் சுயதொழிலை ஊக்குவிக்க உபகரணங்கள்




யாழ்ப்பாணம், மார்ச் 11
பனைசார் சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் பனங் கைப் பணியாளர்களுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கூட்டுறவாளர் மாநாட்டு மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பிற்பகல் 2.00 மணிக்குப் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர் நிர்மாணம், மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்து சிறப்பித்துள்ளார். பனைசார் சுயதொழிலை மேற்கொள்பவர்களுக்கான மூலவளம் இப்பிரதேசத்திலேயே கிடைக்கப் பெறுகிறது. உற்பத்தி செய்யும் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கும் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதற்கும் பனை அபிவிருத்திச் சபை சேவை ஆற்ற உள்ளது. எனவே பெறப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தைப் பெருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண வாழ்வாதார அபிவிருத்தித் திட்ட நிதியில் யாழ். மாவட்டத்தின் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிலுள்ள இமையாணன் கிராமம் பனங் கைப்பணிக் கிராமமாகப் பனை அபிவிருத்திச் சபையினால் தெரிவு செய்யப்பட்டு 80 வாழ்வாதாரம் தேடும் பெண்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, பனங் கைப்பணி சுயதொழிலை மேற்கொள்வதற்காக உபகரணங்கள் மற்றும் மூலப்பொருள் கொடுப்பனவு என்பன வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுடன் விழிப்புலனற்றோர் 19 பயனாளிகளும்,யாழ் சிறைச்சாலையிலுள்ள 07 பயனாளிகளும், இந்தியாவிலிருந்து மீளக் குடியமர்ந்த 03 பயனாளிகளுமாக மொத்தம் 109 பயனாளிகளுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(த-17)

## பற்றிக் உற்பத்தி நிலையம் பாசையூரில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 12
வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் பாசையூர் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் பற்றிக் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்டின் பரிந்துரைக்கு அமைவாக, வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால், வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்ட பத்து இலட்சம் ரூபா நிதியில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பற்றிக் உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் உற்பத்திக்கான மூலப்பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், கிராம அபிவிருத்தி அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் .இ.சுரேந்திரநாதன், கிராம அபிவிருத்தி அமைச்சின் பிரதம கணக்காளர் திருமதி.அனந்தக்கிருஷ்ணன் மற்றும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-ரி5)

## ரூ.100 லட்சம் பெறுமதியான 600 கிலோ கடலட்டை மீட்பு

### இருவர் கடற்படையினரால் கைது

கொழும்பு,மார்ச் 12
இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கடத்தி வரப்பட்ட, 100 லட்சம் ரூபா பெறுமதியான 602 கிலோ கடலட்டைகளுடன் இருவரைக் கைது செய்துள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கற்பிட்டி கீரிமுந்தளம் பிரதேசத்தில் வைத்து கடந்த 10 ஆம் திகதி இவர்கள் கடற்படைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மிக அரிய வகையான கடலட்டைகள் இவை என்று தெரிவிக்கப்பட்டது.

கற்பிட்டி விஜய கடற்படை முகாமின் கட்டளை அதிகாரியான கப்டன் சிந்தக்க குமாரவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பின்போது கைப்பற்றப்பட்டிருந்த கடலட்டைகள் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் புத்தளம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன.

(த-ஜ-4-22)


## ஈழ அகதிகள் 13 பேர் இலங்கைக்கு வருவர்

கொழும்பு, மார்ச் 12
தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் 13 பேர் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைக்குத் திரும்பி வரவுள்ளனர். இந்தத் தகவலை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இவர்கள் மதுரையிலிருந்து மிகின்லங்கா விமான சேவையூடாக முற்பகல் 10.20 மணியளவில் வருகை தரவுள்ளனர். இந்த அகதிகள் 13 பேரில் 8 ஆண்களும்,5 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் மீள் குடியமர்வதற்காகவே வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# தமிழர்களின் உரிமைக்காக உழைத்தவர் மங்கையர்க்கரசி

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இரங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தமது கணவரது அரசியல் பணிகளில் இரண்டறக் கலந்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைக்காகச் சளைக்காது உழைத்த மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் இறப்பினால் மிகுந்த அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சகோதரி திருமதி.மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் லண்டன் மாநகரில் காலமான செய்தி அறிந்து அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றேன்.

எமது கட்சியின் செயலாளர் நாயகமாகவும், தலைவராகவும் விளங்கியதுடன், 1977 ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டுவரை எதிர்க் கட்சித் தலைவராகவும் செயற் பட்ட எமது தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியாரான திருமதி.மங்கையர்க்கரசி தனது கணவரின் இறப்புக்குப் பின்னர் லண்டன் மாநகர் சென்று தனது இரு புதல்வர்களுடனும் வாழ்ந்து வந்த நிலையில் சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

தலைவர் அமிர்தலிங்கம் அரசியல் நடவடிக்கைகள் காரணமாகக் கைது செய்யப்பட்டு அரசியல் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, ஏனைய தலைவர்களுடன் திருமதி.மங்கையர்க்கரசியும் சிறைவாசம் அனுபவித்தவராவார்.

'மங்கை அக்கா' என நான் மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியின் முன்னணிச் செயற்பாட்டாளர்கள் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர், மிக இனிமையான சுபாவத்துடன் மக்களுடன் அன்பாகப் பழகிவந்த ஒருவராவார். தமிழ் மக்களின் விடிவுக்காக மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டு வந்த அவரது இழப்பு அன்னாரது குடும்பத்துக்கு மட்டுமல்ல, எம் அனைவருக்குமே ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது இரு புதல்வர்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும், எனது சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(த-ஐ-4)


## மணிவிழா நாயகனின் வாழ்த்து

"பொன்மனச் செம்மல்", "மனிதநேய ஈகையாளன்", "கல்விக் காருண்யன்" என்னும் உயர் பட்டங்களைப் பெற்ற, இன்னும் பல உயர் பட்டங்களைப் பெறவிருக்கும் எமது நண்பன்

**லயன் E.S.P நாகரத்தினம் PMJF**

(பிராந்திய தலைவர், சர்வதேச லயன்ஸ் கழகம் 306B1 இலங்கை)



இனிய முகத்துடன், இனிய வார்த்தைகளாலும் எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்கும் இனிய பண்பாளன். இவர் எமது சமூகத்துக்கு கிடைத்த மனித குலத்தின் மாணிக்கம். இவர் பல் வகை செல்வங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ அவரையும் அவர் தன் குடும்பத்தினரையும் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்:

**மணிவிழா நாயகனை வாழ்த்துவோர்.**

- லயன் Dr. க.மு.பத்மநாதன் PMJF (Wesco Pharmacy)
- சர்வதேச லயன்ஸ் கழகம் கொக்குவில்
- வடமாகாண புற்றுநோய் - எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கம்
- வடபிராந்திய யாழ்.ஆங்கில மருந்து வர்த்தக சங்கம்
- வடமாகாண காசநோய் தடுப்புச் சங்கம்
- இலங்கை மனித உரிமைகள் இயக்கம் (யாழ்.மாவட்டம்.)
- சர்வதேச லயன்ஸ் கழக 306 B1 இன் ஆளுநர் சபை உறுப்பினர் யாழ்.மாவட்டம்.
- சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 B1 இன் யாழ்.மாவட்ட கழகங்கள்.

(60765)
(11,17 18 20)

## யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் 22.03.2016 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர், பழைய மாணவர் சங்கம்.**

## SERVICE

We provide Loan, Debt restructuring, Trade finance, Legal and Secretarial Services.

Basic free consultation will be provided by the **Local & Overseas Banking Experts** on weekdays during **9.00 am to 4.00 pm**

**Call us:**
**077 365 6445, 077 703 3348, 077 472 8905**
**B4B**Experts

## அறிவித்தல்
## அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

சங்கத்தானை, சாவகச்சேரி திருமதி கௌரியம்மா காந்தராஜா ஆகிய நான் 22.07.2011 இல் கனடாவிலிருந்து மடத்தடி ஒழுங்கை, சாவகச்சேரி வடக்கு தர்மலிங்கம் வேலுப்பிள்ளைக்கு என்னால் வழங்கிய அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன். திரு.தர்மலிங்கம் வேலுப்பிள்ளை எனது அற்றோணித்தத்துவக்காரராகச் செயற்பட்டு ஏற்படுத்தும் எந்தவித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பல்ல என்றும் அறியத்தருகின்றேன்.

12.பங்குனி 2016 — கௌரியம்மா காந்தராஜா.

## இலவச நீரிழிவு மற்றும் செவிப்புலன் (காது) பரிசோதனை

**இலவச நீரிழிவு பரிசோதனை**

இடம்: **Van West Clinic & Nursing Home**
(கொக்காதரன் வைத்தியசாலை),
இல.60, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
காலம்: நாளை (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி - 10 மணிவரை.

**இலவச செவிப்புலன் (காது) பரிசோதனை**

இடம் : மெட்கோன் செவிப்புலன் பரிசோதனை நிலையம்,
(Micro, PC System மேல்மாடி).
இல.218, 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : 14.03.2016 திங்கட்கிழமை காலை 9 மணி - 12 மணிவரை.

விரும்பும் எல்லோரும் வருகைதந்து பயன்பெறுமாறு பணிவோடு அழைக்கின்றோம்.

அனுசரணை: Medcon (PVT)Ltd
077 012 4415, 021 492 3587


## ஆசிரிய ஆலோசகருக்கான கலந்துரையாடல்

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின், வடமாகாணக் கிளைச் சங்கமாகிய வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்க ஆசிரிய ஆலோசகர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என்று அதன் பொதுச் செயலாளர் என்.பி.ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் தாய்ச் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர்,தேசிய அமைப்பாளர், தமிழ் மொழிப் பிரிவு இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு சேவை உள்ளீர்ப்புத் தொடர்பில் கல்வியமைச்சருடன் நடந்த கலந்துரையாடல் குறித்த விவரங்கள் மற்றும் சட்டப்படி வேலை செய்தல் தொடர்பில் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

முக்கியமாக ஆசிரிய ஆலோசகர்களைப் புதிய சேவையில் உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பான பெயர்ப் பட்டியல் தயாரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு, பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது.

எனவே, வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களிலும் உள்ள ஆசிரிய ஆலோசகர்கள் தவறாது மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களின் பங்களிப்பை நல்குமாறு செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (த-ற-4)

## மண்டலாபிசேகப் பூர்த்தி

சுன்னாகம், மயிலணி முத்துமாரியம்மன் ஆலய மண்டலாபிசேகப் பூர்த்தி மகா சங்காபிசேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆலய பிரதம குரு நா. சிவசங்கரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

நாளைக் காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி, 1009 சங்குகளினால் மகா சங்காபிசேகம் நடைபெற்று, மாலை 5.30 மணி முதல் வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வீதியுலா வருங் காட்சியும் இடம்பெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி.ப. 3.30 மணிக்கு வைரவர் பொங்கல்நிகழ்வு நடைபெறவுள்ளது. (வ-ரி)


## மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல்

மாநகரசபை எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மாநகரசபையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். **15.03.2015 ஆம் திகதியின் பின்னர்** மாநகரசபையில் பதிவு செய்யப்பட்டு அனுமதி பெற்ற நிறுவனங்கள் மாத்திரம் குழாய்க்கிணற்றினை நிர்மாணிக்க முடியும்.

குழாய்க்கிணறு நிர்மாணிக்க உத்தேசிப்பவர்கள் மாநகரசபையூடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் அனுமதி பெற்ற பின்னர் மாநகரசபையில் பதிவு செய்த நிறுவனங்களினூடாக குழாய்க்கிணற்றினை நிர்மாணிக்க முடியும் என்பதுடன் மாநகரசபையின் அனுமதியின்றி குழாய்க்கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

VACANCIES
IN A
## PROJECT MANAGEMENT TEAM
FOR A PRESTIGIOUS PROJECT IN
## JAFFNA

| | |
|---|---|
| PROJECT MANAGER cum SITE ENGINEER (Structural/Civil) | Civil/Structural Engineer with 8 years experience in project management, site supervision, project monitoring, compiling progress reports, & reporting to Consultant's head office. |
| SITE ARCHITECT | B.Arch or equivalent with 3 years experience including at least 1 year site supervision experience |
| SITE MEP ENGINEER | BSC Eng. with 3 years experience in Building Services installation or supervision , or NDT/HNDE with 5 years experience in Building Services installation or supervision |
| SITE QUANTITY SURVEYOR | BSC QS with 3 years experience in Building Projects or IQSSL Technical Membership |

APPLY WITH CV BY 23RD MARCH 2016 TO:

TA.vacancies@gmail.com

team architrave

TEAM ARCHITRAVE CHARTERED ARCHITECTS, 55, 5TH LANE, COLOMBO 03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகைக்கட்டு நோய்த் தாக்கம் அதிகரிப்பு

## தடுப்பூசி ஏற்றுமாறு அறிவுறுத்து

நாட்டில் கூகைக்கட்டு நோய் பாடசாலை மாணவர்கள் உட்பட பலரைத் தாக்கி வருவதால் பாதிக்கப்படும் மக்கள் அதற்கான தடுப்பூசி மருந்துகளை ஏற்றிக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவினர் அறிவித்துள்ளனர். இந்த நோயின் தாக்கம் நாட்டில் பெருமளவில் இல்லையென்றாலும் இடையிடையே பாதிப்புக்களை ஏற்படுத்திவருகிறது குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிகள் போன்றோரைத் தாக்குகின்றது. நோயின் அறிகுறியாக மெல்லிய காய்ச்சல்,உடல்உளைவு தலையிடி, பசியின்மை போன்றவை காணப்படும், 48 மணி நேரத்தில் கன்னச்சுரப்பிகளில் வீக்கம் ஏற்படும். சிலருக்கு கன்னம் வீங்காத நிலை காணப்படும். பரிசோதனைகள் மூலம்இவற்றைக் கண்டு பிடிக்க முடியும்.

உரிய காலத்தில் சிகிச்சை பெறாவிடில் மூளை அழற்சி, ஆண் பெண் உறுப்புகளில் தாக்கம், மூட்டு வாதம், கணையச் சுரப்பித் தாக்கம், இதயச் சுரப்பித் தாக்கம் ஆகி யவை ஏற்படலாம்.

கர்ப்பிணிப்பெண்களுக்கு கூகைக் கட்டுஏற்பட்டுஉரிய சிகிச்சை பெறாவிடின் கருச் சிதைவு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் மாதாந்த அறிக்கையில் பிரதம தொற்று நோயியல் வைத்திய கலாநிதி பீ.பாலிஹாவதன குறிப்பிட்டுள்ளார். (த-ற-ஐ-9)

### புதிய கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், திருவடிநிலை சைவத்தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது. பாடசாலை அதிபர் து.சிவஞானம் தலைமையில் நடை பெறவுள்ள நிகழ்வில், புதிய கட்டடத்தை வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா ஆகியோர் திறந்து வைப்பர். (த-ஐ-ரி5)

### விற்பனைக்கு

Suzuki 500 - 50 cc மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 177 6499

### நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு

Lion German Sheperd இன 1½ மாதம் நிரம்பிய பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

075 626 8997 (சாவகச்சேரி)

### வீடு காணி விற்பனைக்கும் கடை வாடகைக்கும் உண்டு

சுன்னாகம் கிழக்கில் வீடு மற்றும் காணி விற்பனைக்குண்டு. அத்துடன் ஒரு கடையும் வாடகைக்குண்டு.

075 042 1719, 077 440 0642

### காணி விற்பனைக்கு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு முன்னால் உள்ள 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 843 5356

### தொலைந்துவிட்டது

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் பிரதான வீதிச் சந்திக்குமிடையில் பெண்கள் துவிச்சக்கரவண்டி ஒன்று (Raliegh Made in England) தொலைந்துவிட்டது. இது தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (10,000 ரூபா சன்மானம் வழங்கப்படும்)

077 489 6306

### விற்பனைக்கு

புறொயிலர் சுத்தம் செய்தது 1 Kg - 440/= அத்தோடு கல்பேட், பேரன்ஸ், ஊர்ச்சேவல் விற்கப்படும். (69599) (14,18,20)

தாசன் பாம்
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

### அனெக்ஸ் வாடகைக்கு

ஆனைப்பந்தியடியில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

371/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### AUTO CAD

Auto Cad மூலம் கட்டடப் படங்கள் வரையக் கூடியவர்கள் யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் மாத்திரம் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும்.

ந.தவேந்திரம்
568/1, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

கணினியும் பிறிண்டரும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

077 010 3617

### காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி A9 வீதி, பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகில் ஒன்பது அறைகள் (3 இணைந்த குளியலறை) சமையலறை, பொது குளியலறைகளுடன் கூடிய 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

077 738 5999

### தென்னந்தோட்டம் விற்பனைக்கு

பளைக்கும், தர்மக் கேணிக்கும் இடையில் உள்ள 20 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு.

072 525 4133
0047 970 29322 - நோர்வே

### வேலையாள்கள் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை

1. விற்பனைப் பிரதிநிதி
2. கூலி ஆள்

077 386 7696

### வேலையாள்கள் தேவை

கொழும்பில் உள்ள வியாபார நிறுவனம் ஒன்றுக்கு,
*பணம் வசூலிப்பவர்
*மேற்பார்வையாளர் தேவை. (யாழ்ப்பாணத்தில்)
*பெண் சமையலாளர் தேவை.

தொடர்பு:
077 342 7132
54, பலாலி வீதி, திருநெல்வேலி.

### மணமக்கள் தேவை

*1983இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 17¼ பாவமுடைய அமெரிக்க பிரஜா உரிமை பெற்ற ஆக்கிரெக்காகப் பணிபுரியும் மணமகளுக்கு இஞ்சினியர், எக்கவுண்டர் மணமகன் தேவை.

*1979இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 14 பாவமுடைய வேக்டொமிற் விசாவில் உள்ள லண்டன் மணமகனுக்கு லண்டனில் Student விசாவுள்ள மணமகள் தேவை.

*1981இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 27 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு Student விசாவிலுள்ள மணமகள் தேவை.

*1982இல் பிறந்த 8இல் செவ்வாய் 75 பாவமுடைய ஜேனலிஸ் சைவ மணமகனுக்கு சைவ மணமகள் தேவை.

*1986இல் பிறந்த 12இல் செவ்வாய் 30 பாவமுடைய சிவில் இஞ்சினியர் சைவ மணமகனுக்கு, இஞ்சினியர், டாக்டர், பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62,இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி.

077 607 0862

### ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி



**Spoken English**
Fluency Diploma

10% Discount

விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
முதல் இணையும் 20 மாணவர்கள் 10% கட்டணக்கழிவுடன் இணையலாம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Sat, Sun 1.30 p.m.<br>Sat, Sun 3.30 p.m.<br>Mon, Fri 3.30 p.m. | Sat, Sun 2.30 p.m.<br>Mon, Fri 8.30 a.m. | Tue, Thu 7.00 a.m<br>Tue, Thu 11.00 a.m. | Mon, Wed, Fri<br>2.30 p.m. | Sat, Sun 7.00 a.m<br>Sat, Sun 11.00 a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

DMI COMPUTER EDUCATION

**IELTS** | IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்

**DMI COMPUTER EDUCATION**

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சமுர்த்தி தோமஸ் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222-4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5355 |

### அறநெறிப் பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 12
மார்க்கண்டு சுவாமிகள் சபையின் இந்து அற நெறிப் பாடசாலைக்கான கட்டடத்திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சபையின் ஸ்தாபகர் நவரத்தினராஜா தலைமையில் பிரான்பற்றில் நடைபெறவுள்ளதாக தலைவர் ந. சண்முகராஜா தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

சிவமயம்
SIVA POOMI

பளை, இயக்கச்சி
## சிவபூமி கோட்டம்
## திறப்புவிழா அழைப்பு

காலம்
12.03.2016 சனிக்கிழமை
பி.ப. 3.22 - 4.55 வரையுள்ள சுபவேளையில்

இடம்
கொற்றாண்டார்குளம் வீதி, இயக்கச்சி, பளை.

தலைவர்
செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன்
(தலைவர், சிவபூமி, அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்:
ஆன்மீகச்சுடர் ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகள்
(அமெரிக்கா)
அவர்களால் சிவபூமி கோட்டம் திறந்து வைக்கப்படும்.

சிவபூமி அறக்கட்டளையின் எதிர்கால வாழ்வாதார முயற்சியாக பளை, இயக்கச்சியில் நிலம் கொள்வனவு செய்யப்பட்டு விவசாயப்பணி நடைபெற்று வருகிறது. இயக்கச்சி வாழ் சிறார்களின் நன்மை கருதி அவர்களுக்கான அறநெறி வகுப்புகளை நடத்தும் பொருட்டும் சில சமூகப்பணிகளை மேற்கொள்வதற்காகவும் இந்நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. உங்கள் அனைவரது ஆசிகளையும் நல்லாதரவையும் வழங்கி பணி சிறக்க அன்புடன் அழைக்கின்றோம்.

தலைமை அலுவலகம்
சிவபூமி
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

நிர்வாகசபை,
சிவபூமி அறக்கட்டளை.

(6919) (13.17.18.20)

## நூல் வெளியீட்டு விழா அழைப்பு



திரு.ஜெ.சத்தியேந்திரன் - J.P
(NDT. Agriculture
சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்) எழுதிய
"நவீன தென்னைச் செய்கை"
"Modern Coconut Cultivation"

| | |
|---|---|
| இடம் | - தியாகி அறக்கொடை நிறுவன மண்டபம் 527, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| காலம் | - 13.03.2016 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | - காலை 9.30 மணி |

தலைவர்
திரு.தே.வைகுந்தன், பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,யாழ்ப்பாணம்.

பிரதம விருந்தினர்கள்
திரு.N.வேதநாயகன் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.
திரு.கபில யகன்டவல - தலைவர், தென்னைப் பயிர்ச்செய்கை சபை, கொழும்பு.

சிறப்பு விருந்தினர்கள்
திரு.K.D.L. தர்மசிறி, பொதுமுகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச்சபை,கொழும்பு
திரு.சி.சிவகுமார், மாகாணப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி நிரல்
* இறை வணக்கம் *மங்கல விளக்கேற்றல்
*வரவேற்புரை - திரு.க.தனிநாயகம், ஓய்வுநிலை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்
*வரவேற்பு நடனம் *ஆசியுரை *தலைமையுரை
*வில்லுப்பாட்டு : "நவீன தென்னைச் செய்கை" AVM வில்லிசைக்குழு, கொடிகாமம்.
*நூல் அறிமுகம்- நவீன தென்னைச் செய்கை- திரு.ஜெ.சத்தியேந்திரன் .J.P தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்.(நூல் ஆசிரியர்)
*நூல்வெளியீட்டு நிகழ்வு - முதற்பிரதி வழங்கல் நிகழ்வு
*ஆணைப் பத்திரிகை பதிவேடு கையளித்தல் நிகழ்வு
*கௌரவ, சிறப்பு, பிரதம விருந்தினர்கள் உரை * மதிப்பீட்டு உரை
*நூலாசிரியர் ஏற்புரை - திரு.ஜெ.சத்தியேந்திரன்- J.P சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்
*நன்றியுரை - திரு.S.ஜெயநாதன் - சிரேஷ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

நூல் ஒன்றின் விலை ரூபா 1000/=

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, இந்த நிகழ்வில் தென்னைச் செய்கையாளர்கள் உட்பட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டுக் குழு

(69116)(11,18,20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுடில்லிப் பயணத்தைக் கைவிட்டார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 12
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனபுதுடில்லிக்குமேற்கொள்ள விருந்த பயணம், இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் திடீர் முடிவால் கைவிடப்பட்டுள்ளதாக, புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.
வாழும் கலை அமைப்பு புதுடில்லியில் ஏற்பாடு செய்துள்ள உலக கலாசார விழாவில், பங்கேற்க ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, நேபாள ஜனாதிபதி பிஜந்தியா தேவி பண்டாரி, சிம்பாப்வே ஜனாதிபதி ரோபேர்ட் முகாபே, ஆப்கானிஸ்தான் பிரதம நிறைவேற்று அதிகாரி அப்துல்லா அப்துல்லா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன.
இந்த நிகழ்வில் பங்கேற்பதை இவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர். இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியும் இந்த நிகழ்வில் பங்கேற்கவிருந்தார்.
ஆனால், இந்த நிகழ்வுக்காக மரங்கள் அழிக்கப்பட்டதாக தொடரப்பட்ட குற்றச்சாட்டு மற்றும் நீதிமன்றத் தலையீடுகளை அடுத்து, நிகழ்வில் பங்கேற்க இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி மறுத்துவிட்டார்.
இந்தியக் குடியரசுத் தலைவர் நிகழ்வில் பங்கேற்க மறுத்தால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நான்கு வெளிநாட்டுத் தலைவர்களும் இராஜதந்திர நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு, இந்த நிகழ்வில் இருந்து விலகியுள்ளனர்.

(த-ஜ-5)

# திருகோணமலையில் பரவிவரும் சிறுநீரக நோயால் பெரும் பாதிப்பு

## திருமணம் செய்வோர் விகிதமும் குறைவு

திருகோணமலை,மார்ச் 12
திருகோணமலையில் பல பகுதிகளிலும் பரவி வரும் சிறுநீரக நோயால் திருமணம் செய்து கொள்ள விரும்புவோர் விகிதத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று திருகோணமலை பிரதேசச் சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் திருமதி அனுசியா ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.
அண்மையில் இடம்பெற்ற திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டத்தில் வைத்து, திருகோணமலை மாவட்டத்தில் சிறுநீரக நோய் பரவி வருவது சம்பந்தமாகக் கருத்து வெளிப்படுத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டம் குழுவின் இணைத்தலைவர்களான எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன், பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் ஆகியோரின் தலை மையில் இடம்பெற்றது.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
திருகோணமலையின் கோமறன் கடவல, பதவியா மற்றும் ஸ்ரீபுர பிரதேசங்களிலேயே சிறுநீரக நோயாளர்கள் செறிந்து காணப்படுவதோடு, பதவியா, ஸ்ரீபுர பிரதேசத்தில் மாத்திரம் தற்போது 315 பேர் வரையிலான சிறுநீரக நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.
கோமரன்கடவல பிரதேசத்தில் 137 நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதைவிட கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வான்எல பிரதேசத்தில் 76 நோயாளர்கள் இனம் கண்டறியப்பட்டுள்ளனர்.
இந்த நோய்க்கான காரணத்தைக் கண்டறியும், ஆய்வுச் செயற்பாடுகள் இன்னமும் பரிசீலனை மட்டத்தில் இருந்தாலும்கூட, சுத்தமான குடிதண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளாதிருத்தல், விளைச்சலை அதிகரித்துக் கொள்வதற்காகப் பயிர் வகைகளுக்கு அதிகளவில் இரசாயன உரங்களை இடுவது, நோய் சம்பந்தமாகச் சரியான தெளிவொன்று இல்லாதிருப்பது மற்றும் நவீன வாழ்க்கை முறை போன்றவை இந்த நோய் மாவட்டத்தில் வேகமாகப் பரவி வருவதற்குக் காரணிகளாகியுள்ளன.- என்று அவர் தெரிவித்தார்.

(ற-ஜ-22)

### கண்ணீர் அஞ்சலி



திருமதி பராசக்தி சந்திரசேகரி
(ஓய்வுபெற்ற ஆசிரியை)
எமது முன்னாள் செயலாளரும், இணுவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு செயற்பட்டவருமாகிய
திருமதி ச.பராசக்தி ஆசிரியை
அமரராகிய செய்தி அறிந்து
எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.
இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி நம்பிகை நிதியத்தினர்
இணுவில். (69178) (13.18)

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
திருமதி E.சத்தியவாணி
அவர்களின் தந்தையார்
அகஸ்ரீன்
மனுவேல்பிள்ளை
அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை. (69177) (13.18)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சோதிலிங்கம்
சுபகரி (சுபா)
மண்ணுலகில்
06.02.1971
விண்ணுலகில்
22.02.2015

ஆண்டொன்று ஆனதம்மா - உங்கள்
ஆன்மா எம்மை விட்டுப் பிரிந்தின்று
உங்கள் ஆயுளை அரைவாசியில் அழிப்பதற்காகவா
அனைவரிடத்திலும் நீ அன்பு காட்டினாய்
காதலித்து கரம் பிடித்த உங்கள் கணவர்
கதி கலங்கி நிற்கிறார்
பாசத்திற்காக ஏங்கும் உங்கள் பிள்ளைகள்
பரிதவித்து நிற்கிறார்கள்
பத்து மாதம் உங்களைச்சுமந்து பிரசவித்த
உங்கள் தாய் பட்டினியாய்க் கிடக்கிறாள்
உங்களோடு பிறந்த உங்கள் இரத்த
உறவுகள் உருக்குலைந்து நிற்கிறார்கள்
உங்கள் மாமன் மாமி மைத்துனர்மார்கள் நண்பர்கள் என உங்கள்
உறவுகள் அத்தனையும் அங்கலாய்த்து நிற்கிறார்கள்
சுப காரியங்கள் என்றால் சுபா - ஆனால் சுபம் என ஆண்டவன் - எம்
சுமையை அதிகரித்து விட்டான்.
நாம் வாழும் காலம் மட்டும் - உங்கள் நினைவுகள் மாறாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
உங்கள் உறவுகள்.

7/1, புகையிரத வீதி.
கந்தர்மடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி

நாகராசா நவரத்தினராசா
(ஓய்வுபெற்ற சிறப்பு தலைமை கிராம அலுவலர்)




மக்கள் சேவைக்கென்றே மண்ணில் உதித்த நவமே
உதவி கேட்டவுடன் ஓடோடிவரும் உன் கால்தனை
காலன் அவன் ஏன்தான் ஒடித்தானோ
நின் மகத்தான சேவை கண்டு சிவராத்திரி நன்நாளில்
சிவன்தான் உனை அழைத்தானோ!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சிங்கம்ஸ் பார்மஸி
கோண்டாவில். (69199) (11,18,20) சிங்கம்ஸ் இல்லம்
கோண்டாவில்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
செல்லையா
செல்வராசா



அன்னையின் மடியில்:
12.12.1950
அப்பனின் பாதவிந்தங்களில்
22.02.2015
திதி: சதுர்த்தி

ஆண்டு ஒன்றல்ல பல நூறும் ஆகலாம் மாறாது
உங்கள் நினைவுகள் என்றும் உங்கள் நினைவுகளுடன்
குறிப்பு: அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று முற்பகல் 11 மணியளவிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]
யாழ்ப்பாணம். (69194) (11,17,20) குடும்பத்தினர்.

### உணவு

களுக்கு எதிராக, எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர், உரிய நடவடிக்கை எடுப்பதாக திறந்த நீதிமன்றில் தெரிவித்தார்.
இதில் குறித்த கைதிகளுக்கு எதிராக, 4 வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன. அதாவது சிலர் விடுதலை செய்யப்படவுள்ளனர். மற்றொரு பகுதியினர் பிணையில் விடுவிக்கப்படவுள்ளனர். மேலும் சிலர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். ஏனையவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அரச சட்டவாதி நீதிமன்றில் அறிவித்தார்.
இதனையடுத்து குறித்த அரசியல் கைதிகள் 14 பேரும், எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் தாம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்த உணவு தவிர்ப்பைக் கைவிடுவதாக, கைதிகள் அறிவித்தனர்.
இதன்படி நீதிமன்றிலிருந்து, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகசின் சிறைச்சாலைக்குச் சென்றதும், அங்கு வருகை தந்த சிறைச்சாலைகள் ஆணையாளர், மென்பானம் வழங்கி கைதிகள் முன்னெடுத்து வந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடித்து வைத்தார்.
வழக்குத் தொடுக்காமல், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாது, இருந்துவந்த அநுராதபுரம் சிறையிலுள்ள 2 கைதிகள், மகசின் சிறையிலுள்ள பெண் கைதி உட்பட மொத்தம் 17 கைதிகள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வந்தனர்.
இவர்களில் அநுராதபுரம் சிறையிலிருந்த 2 பேருக்கு எதிராக விரைவில் வழக்குத் தாக்கல் செய்வதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருந்தமையால், அவர்கள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டனர். பின்னர் மகசின் சிறையிலிருந்து ஒருவர் விடுவிக்கப்பட்டார். மகசினில் உள்ள ஏனைய கைதிகளான பெண் உள்ளிட்ட 14 பேரும் தொடர்ச்சியாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வந்த நிலையில், அவர்கள் நேற்று தமது போராட்டத்தை நிறைவு செய்துள்ளனர்.

(த-வ-4)

### கிழக்குப்

மாணவர்கள் தெரிவித்தனர்.
இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு மாணவனும், தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
தங்களுக்கிடையில் நீண்டநாள்களாக இருந்துவந்த பகை முற்றியதன் காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது என்று காயமடைந்த மாணவர் ஒருவர் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் குறித்து நிலாவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-வ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகுசாதன விற்பனை நிலையம் உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 12
அழகு சாதனப்பொருள் விற்பனை நிலையமொன்றின் முன் கதவைஉடைத்துஉள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சிவராத்திரி தினமான கடந்த 7 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி தெற்குப் பகுதியில் அமைந்துள்ள குறித்த அழகு சாதனப்பொருள் விற்பனை நிலையத்தின் முன்கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள், வாசனைத் திரவியங்கள், அன்பளிப்புபொருள்கள்மற்றும் போலி நகைகள் என் பவற்றைத் திருடியுள்ளனர். இது தொடர்பில் கடை உரிமையாளர் அச்சுவேலிப்பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ற-4-107)

## மகளிர் தினம் நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 12
சர்வதேச மகளிர் தினத்தை நினைவுகூரும் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மகளிர் கலை பண்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளது.

"மனைக்கு விளக்கு ஆயினள்"எனும் கருப்பொருளில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி சாந்தி நடராஜனும், சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் கலைக்கோயில் இயக்குநர் திருமதி லீலாம்பிகை செல்வராஜாவும், கொக்குவில் கலாபவனம் இயக்குநர் திருமதி சாந்தினி சிவனேசனும், உடுவில் நாட்டிய கலாகேந்திரா இயக்குநர் திருமதி கிருசாந்தி ரவீந்திராவும், உரும்பிராய் கலைக்கோயில் இயக்குநர் திருமதி பத்மினி செல்வேந்திரகுமாரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் நூல் வெளியீடு இடம்பெறவுள்ளதோடு, அரங்கேறிய தமிழ்வேதம் எனும் ஆடல் அரங்கமும் நடைபெறவுள்ளது. (த-ஜ-ரி)

# காணி உரிமையாளர்களின் சம்மதத்துடன் திருவடி நிலையில் காணி சுவீகரிப்பு

## மீனவர்களின் எதிர்ப்பையும் மீறி நில அளவை முன்னெடுப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 12
கடற்படையினருக்குக் காணி வழங்குவதற்கு மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோதும், காணி உரிமையாளர்கள் அதற்கான சம்மதத்தை வழங்கியுள்ளனர். இதனால் காணி சுவீகரிப்புச் செய்வதற்காக நில அளவை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் மேற்கு, திருவடிநிலை கடற்கரைப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 5 ஏக்கர் காணியில் கடற்படையினர் நீண்ட காலமாக நிலை கொண்டுள்ளனர். இந்தக் காணி தமக்குத் தேவை என்று கடற்படையினர் கோரியிருந்தனர். அதற்கமைய அதனைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காணி சுவீகரிப்புக்கு முன்னோடியாக, நில அளவை மேற்கொள்வதற்கான அறிவித்தல் காணி உரிமையாளர்களுக்கு விடுக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை நில அளவைத் திணைக்களத்தினர் காணிகளை அளவீடு செய்வதற்கு அந்தப் பகுதிக்கு வருகை தந்தனர்.

இதன்போது அங்கு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி.மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சனி ஐங்கரன் ஆகியோரும் பிரசன்னமாகிருந்தனர்.

"கடற்படையினருக்குக் காணி வழங்குவதால் இந்தப் பகுதியில் பாரம்பரியமாக கடற்றொழிலில் ஈடுபடும் தாம் பெரும் பாதிப்புக்குட்பட வேண்டிவரும். ஏற்கனவே "கடற்கரைப் பகுதியில் சுமார் இரண்டு கிலோமீற்றர்வரையிலான பகுதியில் தொழிலில் ஈடுபடுவதற்கு கடற்படையினர் தடை விதித்துள்ளனர். இதனால் நாம் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாதுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் கடற்படையினருக்கு நிரந்தரமாகக் காணியை வழங்குவதால் காலங் காலமாக - பரம்பரையாக இந்தப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடும் நாம் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்"என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், "இந்தப் பகுதியில் வசிக்காமல் வெளியிடங்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழ்வோர் சொந்த மண்ணில் வாழும் எங்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திலெடுக்காமல் மேற்கொள்ளும் இவ்வாறான செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது.

காணிகளின் உரிமையாளர்கள் அதனை எங்களிடம் வழங்கட்டும். காணிகளுக்கு உரிய பெறு மதியைக் கொடுத்து கடற்றொழில் சங்கம் சார்பாக வாங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம்" எனவும் அங்கு திரண்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இருப்பினும் காணி உரிமையாளர்கள், கடற்படையினருக்கு காணி சுவீகரிப்புக்குச் சம்மதம் வழங்கியமையால் நில அளவை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (த-ஜ-5-101)

## துண்டி மயானத்துக்கு மின்சார வசதி

யாழ்ப்பாணம்,மார்ச் 12
கொழும்புத்துறை, துண்டி இந்து மயானத்துக்கு மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டு மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இரவு வேளையில் மக்கள் சடலங்களைத் தகனம் செய்யும் வசதிக்காகவும் மற்றும் மயானப் பாதுகாப்புக் கருதியும் இந்த மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக மயானப் பரிபாலன சபையின் தலைவர் எஸ்.நடராசா தெரிவித்துள்ளார்.

ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, கொய்யாத் தோட்டம், சுண்டிக்குழி, மணியம் தோட்டம், கொழும்புத்துறை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்த மயானத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் மயானத்துக்கான அத்தியாவசிய தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பழைமை வாய்ந்த இந்த இந்து மயானம் தற்போது புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. (த-ஜ-17)

## யாழ். இந்துக் கல்லூரி அதிபரின் கார்க் கண்ணாடி மீது கல் வீச்சு

### மாணவர் குழுக்களே காரணம் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபரின் தனிப்பட்ட காரின் முன்பக்கக் கண்ணாடி கல் எறிந்து சேதமாக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். மாணவர் குழுக்கள் இதனைச் செய்திருக்கலாம் என்று முறைப்பாட்டில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த சிவராத்திரி தினத்தன்று இடம்பெற்றுள்ளது.

பாடசாலையில் உயர்தரவகுப்பு மாணவர்களுக்கும் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடு ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் மாணவர்கள் முரண்பட்டதாகவும், அந்த மாணவர்களுக்கு எதிராகக் கல்லூரி அதிபர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முற்பட்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுக்கள், பாடசாலை முதல்வரின் அலுவலகத்துக்குள் சென்று அவரை ஒளிப்படம் எடுத்து மிரட்டும் வகையில் நடந்து கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் அதிபரின் விடுதி முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது பிரத்தியேக காரின் கண்ணாடி கல் எறிந்து உடைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் சிறு குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-ற-4-107)

(ந-ம-து)



கரைச்சி, புளியம்பொக்கணை
நாகதம்பிரான் ஆலய
பங்குனி உத்தர



பொங்கல் விழாவின்போது வியாபாரம்
மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கான அறிவித்தல்

எதிர்வரும் 23.03.2016 புதன்கிழமை நடைபெறும் பங்குனி உத்தர பொங்கல் விழாவின்போது வியாபாரம் மேற்கொள்ளும் வியாபாரிகளுக்கான, தற்காலிக வியாபார நிலைய ஏல விற்பனை எதிர்வரும் 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. கலந்து கொள்ளும் வியாபாரிகள், துவிச்சக்கர வண்டி காப்பாளர்கள் ஏலத்தைப் பெற்று, முழுப்பணத்தையும் செலுத்தி, பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- உணவக, குளிர்பான உரிமையாளர்கள் P.H.I பகுதியினருடைய அனுமதிப் பத்திரத்துடன் சமூகமளிக்கவும்.

ஆலய பரிபாலன சபை,
நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் பறிபோகும் கிராமங்கள் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் மௌனம்

## மாவட்ட மக்கள், பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

வடக்கு மாகாணத்தில் வலிகாமம் வடக்குப் பகுதி மற்றும் கிழக்கு மாகாணத்தின் சம்பூர் பிரதேச மக்களின் பிரச்சினைகள் மட்டும் இன்று உச்சரிக்கப்படுகின்றனவே தவிர, முல்லைத்தீவு மாவட்டத்தில் பறிபோய்க் கொண்டிருக்கும் கிராமங்கள் தொடர்பில் அரசியல்வாதிகள் எவரும் வாய் திறப்பது கிடையாது. எனவே அதற்கான உரிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

குறித்த பிரச்சினை தொடர்பாக அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட்டதாகவும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர் மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள்.

குறிப்பாக மாவட்டத்தின் கேப்பாப்பிலவு, வட்டுவாகல், கொக்குத்தொடுவாய், நாயாறு பிரதேசங்களும் பொலர்பாம், கென்ற்பாம் பகுதிகளும் பறிபோகும் கிராமங்கள் பட்டியல்களில் இணைந்து கொண்டிருப்பதை மாவட்டத்தில் நாம் வாக்களித்த அரசியல்வாதிகள் முதல் கட்சித் தலைவர்கள் வரை மறந்து விட்டனர்.

கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின்போது வட்டுவாகலில் கடற்படை வசமுள்ள 617 ஏக்கர் தொடர்பில் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி பதில் அளிக்கப்படும் என்று அவர் உறுதியளித்துச் சென்றார்.

இருப்பினும் தற்போதைய தகவல்களின் பிரகாரம் குறித்த நிலப்பரப்பில் இருந்து எந்த நிலப்பரப்பையும் விடுவிக்கக் கடற்படை மறுப்புத் தெரிவிப்பதால், மக்களின் காணிகளை விடுவிக்கமுடியாது எனப் பாதுகாப்பு அமைச்சும் கைவிரித்துள்ளது.

காலத்துக்குக் காலம் இவ்வாறு ஏமாற்றும் படலம் தொடரும் நிலையில், இந்த நல்லாட்சி அரசின் ஆட்சிக் காலத்தில் எமது நிலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் கேள்விக்குறியாகவே ஆகி வருகிறது. எனவே இது தொடர்பில் அரசியல்வாதிகள் அவசர கவனம் செலுத்தவேண்டும் என குறித்த நில உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களின் குற்றச் சாட்டுக்கள், கோரிக்கைகள் தொடர்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசாவைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கொக்கிளாய், கேப்பாப்பிலவு, நாயாறு, முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் உள்ள காணிப் பிரச்சினைகளை முன்மொழிந்ததுடன், நான் அதனை உரிய இடங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். அவற்றைப் படிப்படியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. காணிப் பிரச்சினைகள் மற்றும் மீன்பிடிப் பிரச்சினைகள் தொடர்பாக முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன். எமது பகுதியில் உள்ள மீன்பிடிப் பிரச்சினை தொடர்பாக நேற்றும் கதைத்திருக்கிறேன்-என்றார்.

வடக்கு மாகாணசபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த நிலம் தொடர்பில் நான் அக்கறை செலுத்திய வண்ணமே உள்ளேன், குறித்த பிரதேசத்தில் எனக்குச் சொந்தமான நிலமும் உண்டு. அதேவேளையில் இந்த நிலம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர் கூட்டம் வைத்து பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு நடவடிக்கை எடுக்கின்றேன் எனக் கூறிச் சென்றார்.

ஆனால் பிரதேச செயலருக்கு மட்டும் வாய் மூலமாக அந்த நிலங்களை விட முடியாது எனக் கூறியுள்ளதாக அறிகின்றோம். அவ்வாறெனில், இவர்கள் காலத்துக்குக் காலம் எம்மை ஏன் கூட்டங்கள் வைத்து ஏமாற்றுகின்றனர் எனப் புரியவில்லை. அதே நேரம், இது தொடர்பில் கட்சி ரீதியில் எவரும் கவனம் செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை நான் முழுமையாக மறுக்கவில்லை. ஏனெனில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரம் பறிபோகின்ற சமயத்தில் மாகாணத்தின் எல்லையே மாற்றம் அடைகின்றது என்ற உண்மையை எவரும் மறந்து விடக்கூடாது. -என்றார்.

வடக்கு மாகணசபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவிக்கும்போது, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, கேப்பாப்பிலவு மக்களின் வாழ்வாதார நிலங்கள் பறிக்கப்பட்டதை வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற அமர்வுகளில் தெரிவித்திருந்தேன்.

இது தவிர என்னைச் சந்திக்கும் தூதுவர்களுக்கும் இந்த விடயங்கள் தொடர்பாக ஆதாரத்துடன் தெரிவித்திருந்தேன். மிக அண்மையில் வட்டுவாகல் கோத்தபாய கடற்படைமுகாம் அகற்றப்படவேண்டும் என்றும், அதில் 617 ஏக்கர் நிலப்பகுதி உள்ளடக்கப்பட்டிருப்பது பற்றியும் கதைத்திருக்கிறேன்.

கேப்பாப்பிலவு மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்று மக்கள் உண்ணாவிரதப் போராட்டத்துக்குத் தயாரான வேளை அதனை வடக்கு மாகாண சபையில் கதைத்திருக்கின்றேன். வலி.வடக்கு காணிப் பிரச்சினை போன்று எங்கள் பகுதிக் காணிப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டைக் கூட நான் வடக்கு மாகாண சபை அமர்வுகளில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

இப்படியாக எங்களுடைய மக்களின் வயல் நிலங்கள் குறித்தோ, குடியிருப்பு நிலங்கள் குறித்தோ, வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களின் பிரச்சினைகள் குறித்தோ, கடற்றொழிலில் உள்ள பிரச்சினைகள் குறித்தோ என்னைப் பொறுத்த மட்டில் எனது குரல் ஒலித்துக் கொண்டே தான் இருக்கும் - என்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மாவட்ட அரச அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, இந்த நிலங்கள்கள் தொடர்பில் இன்று வரை எந்தவிதமான உத்தியோகபூர்வமான பதில் ஏதும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

(ரு-ஐ-21-101-ரி7)

கிளிநொச்சி
கொஸ்மோபொலிடன்
ரோட்டரிக் கழகம்

**கிளிநொச்சியில் இலவச செயற்கைக் கை (அசையக் கூடிய விரல்களுள்ள) வழங்குதல்**

ஆஸ்திரேலிய ரோட்டரிக் கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அசையக் கூடிய விரல்கள் பொருந்திய செயற்கைக் கைகள் ஆஸ்திரேலிய நிபுணர்களால் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி கிளிநொச்சியில் இலவசமாகப் பொருத்தப்படும். உங்களுக்கு அல்லது உங்களுக்குத் தெரிந்த யாருக்காவது இக்கைகள் தேவைப்படின் உடனடியாகக் கீழ்க்கண்ட விலாசதாரியுடன் தொடர்பு கொள்ளவும். எந்தவிதமான கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**ரோட்டரிக் கழகம்**
**38, 3 ஆம் குறுக்குத்தெரு,**
**கனகபுரம், கிளிநொச்சி.**
**021 320 8447, 077 205 0866**

### இளைஞர் தொழில் வழிகாட்டல் நிகழ்வு

வவுனியா, மார்ச் 12

வவுனியா வடக்கு பிரதேச செயலகம், கிராம அபிவிருத்தி நிறுவனம் மற்றும் உலக கனேடிய பல்கலைக் கழகம் என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட வவுனியா மாவட்ட இளைஞர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம், நேற்று வவுனியா கனகராயன் குளம் பண்டிதமணி கணபதிப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்தத் தொழில் வழிகாட் டல் நிகழ்ச்சித் திட்டம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகள் மத்தியில் விளையாட்டு நிகழ்வுகளின் மூலம் தொழிலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் விழிப்புணர்வு செயற்றிட்டமாக அமைந்திருந்தது.

நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலர், பிரதேச செயலக ஊழியர்கள், மகளிர் அமைப்புக்கள், பொது மக்கள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(தி-ற-ஐ-21)



### தூயநீர் சுத்திகரிப்பு நிலையம் நவகம கிராமத்தில் திறப்பு

வவுனியா,மார்ச் 12

உலக சிறுநீரக தினத்தை முன்னிட்டு வவுனியா நவகம கிராமத்தில் தூய நீருக்கான நீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி ஆகியோரால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது.

வவுனியா பிரதேசத்தில் அதிகரித்துச் செல்லும் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியாக, சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதியின் வேலைத் திட்டத்தின் கீழ் குறித்த தூய நீர் சுத்திகரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

நாளொன்றுக்கு 2 ஆயிரத்து 500 லீற்றர் தூய நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இந்த நவீன நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பூனாவை கடற்படை முகாம் அதிகாரிகளின் உதவியால் பெற்று கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதற்கான ஜனாதிபதி வேலைத்திட்டத்தின் வடக்கு மாகாணத்துக்கான இணைப்பாளர் சமிந்த வாசல, ஐக்கிய தேசிய கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் பி.ஏ.கருணாதாச, கடற்படை அதிகாரிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ரு-ஐ-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கல்வி அமைச்சின் பணியாளர் சம்பளத்துக்கு 10 ஆயிரம் மில்லியன் ரூபா

## இவ்வாண்டு ஒதுக்கீடு என்கிறார் அமைச்சின் செயலர்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

வடக்கு மாகாணத்தின் 984 பாடசாலைகள் , 12 வலயங்கள், கல்வி அமைச்சு உட்பட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின். சகல பணியாளர்களுக்கும் இந்த ஆண்டுக்கான மொத்தச் சம்பளமாக 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ் வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் மொத்தம் 984 பாடசாலைகள் உள்ளன. இங்கு மொத்தம் 2 லட்சத்து 52 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களின் கல்விச் செயற்பாட்டுக்காக 12 வலயங்கள் மற்றும் மாகாண திணைக்களம், மாகாண அமைச்சு என அனைத்திலும் மொத்தமாக 18 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

இவ்வாறு பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்குமாக ஓர் ஆண்டுக்கான சம்பளப் பணம் மட்டும் வருடத்துக்கு 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஆகும். இங்கு மூலதனச் செலவாக 2 ஆயிரம் மில்லியன் ரூபா செல விடப்படுகின்றது. எமது மாகாண மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அது செலவு செய்யப்படுகின்றது. இருப்பினும் கடந்த ஆண்டு ஜி.சி.ஈ. சாதரணதரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில், இலங்கையில் உள்ள 97 கல்வி வலயங்களுள் தீவக வலயம் தான் 97 ஆவது இடத்தில் உள்ளது. துணுக்காய் கல்வி வலயம் 93 ஆவது இடத்திலும், முல்லைத்தீவு கல்வி வலயம் 92 ஆவது இடத்திலும் உள்ளன.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் கல்வித் தரத்தை வளர்த்து மாகாணத்தின் கல்வி வளர்ச்சி வீதத்தை வளர்க்க இன்றையதினம் ஆசிரிய நியமனம் பெறுபவர்களும் பாடுபட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-ஐ-4-10)

> வடக்கு மாகாணத்தில் மொத்தம் 984 பாடசாலைகள் உள்ளன. இங்கு மொத்தம் 2 லட்சத்து 52 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களின் கல்விச் செயற்பாட்டுக்காக 12 வலயங்கள் மற்றும் மாகாண திணைக்களம் , மாகாண அமைச்சு என அனைத்திலும் மொத்தமாக 18 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

## 14 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ்ப்பாடத்துக்கு ஆசிரியர்

யாழ்ப்பாணம்,மார்ச் 12

14 ஆண்டுகளாகத் தமிழ்ப் பாட ஆசிரியர் இன்றிக் கிளிநொச்சி கிராஞ்சியில் இயங்கி வரும் தமிழ்ப் பாடசாலைக்கு நேற்றைய தினம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின் கீழ் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் பூநகரிக் கோட்டத்தின் கீழ் உள்ள கிராஞ்சிப் பாடசாலையில் கடந்த 14 ஆண்டுகளாகத் தமிழ்ப் பாட ஆசிரியர் எவரும் நியமிக்கப்படவில்லை எனப் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. குறித்த கிராஞ்சியில் இயங்கி வரும் தமிழ்ப் பாடசாலைக்கு நேற்றைய தினம் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின் கீழ் பளையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பாடசாலைக்குத் தமிழ் ஆசிரியரை நியமிக்குமாறு பிரதேச வாசிகள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்ததோடு வடக்கு மாகாண சபையிலும் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-101)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள்



யாழ்ப்பாணம்,மார்ச் 12

வடமாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற் காகப் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வடமாகாணக் கல்விஅமைச்சில்வைத்து நேற்று வழங் கப்பட்டன.

வடக்கு மாகாணத் தமிழ் மொழிப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு முஸ்லிம் ஆசிரியர்கள் 21 பேர் உட்பட 111 ஆசிரியர்களும், சிங்கள மொழிப் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 8 பட்டதாரிகளுமாக 119 ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

அவற்றில் நேற்று 5 பேர் நியமனக் கடிதங்களைப் பெறவந்திருக்கவில்லைஎன்று கல்வி அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாணப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

மாவட்ட ரீதியில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் குறித்த பட்டதாரிகள் நியமனம் வழங்கப்பட்டது. குறித்த ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வழங்கினார். (த-ஐ-4-10)

## ஐந்து வர்த்தகர்களுக்கு நீதிமன்று அபராதம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்ட திட்டத்தை மீறி வர்த்தகர்களை ஏமாற்றும் நோக்கில் பொருள்களை விற்பனை செய்த 5 வர்த்தகர்களுக்கு மல்லாகம் நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டது. 10 கிலோகிராம் நாட்டரிசி மூடையில் இருவேறு உற்பத்தித் திகதி மற்றும் காலவதியாகும் திகதியை அச்சிட்டு விற்பனை செய்த அச்சு வேலிப் பகுதியைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளருக்கு ஆயிரத்து 500 ரூபாவும், காலவதியான பிஸ்கட், கேக், மற்றும் இரண்டு லீற்றர் மென்பானத்தை விற்பனை செய்த சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மூன்று வர்த்தகர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. விலைப் பட்டியல் காட்சிப்படுத்தத் தவறிய வர்த்தகர் ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. (த-ஐ-4107)

## மரண அறிவித்தல்

### திருமதி பியாற்றிஸ் ஜேசுதாசன்

பிறப்பு
28
.
12
.
1944



இறப்பு
09
.
03
.
2016

யாழ்.குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பியாற்றிஸ் ஜேசுதாசன் 09.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்வராசா - லூத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், ஜேசுதாசனின் (ஜேசீலன்)அன்பு மனைவியும், தேன்மொழி, எடிசன், அன்புமொழி, ஜெபர்சன், அருள்மொழி, கலைச்செல்வன், ஜேசுநேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,சின்னமணி, சின்னக்கிளி, லெபோன்சியஸ், கிறேசியன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அமல்ராஜ், மேரி, யூலி, சொபியா, சகாயன், லக்சியா ஆகியோரின் அன்பு மாமியாரும், செபஸ்ரியன், ஸ்ரைபான்,ஜென்சிக்கா, ஜெசிக்கா, ரிதன், ஜெனார்த்தன், ஜிலக்ஷன், ஜெப்ஷன், ஜில்சன், ஜெபியா, ஜெவின்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பவளம், தங்கம், ஜேபாலன்,ஜேசுரெட்ணம், காலஞ்சென்ற தோமஸ், ஜேசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக அவரது இல்லத்திலிருந்து இன்று (12.03.2016) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் குருநகர் யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/7, முதலாம் குறுக்குத்தெரு,
தண்ணீர்த்தாங்கி வீதி, குருநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(69185)(11,18,20)

077 804 2611

# பிணையில் விடுதலையானவர் பிறிதொரு வழக்கில் கைதானார்

வவுனியா, மார்ச் 12

வவுனியா, மகாறம்பைக்குளம் கிராம அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட சந்தேக நபருக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தால் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் பிறிதொரு பணமோசடி முறைப்பாட்டையடுத்து குறித்த நபரைக் கைது செய்து விசாரணையை மேற்கொண்டு வருவதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த மாதம், வவுனியா மகாறம்பைக்குளம் கிராம அலுவலகத்தைக் குறித்த நபர் தாக்கிச் சேதம் விளைவித்தார் எனக் குற்றச்சாட்டி வவுனியா பிரதேச செயலர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டிருந்தார்.

எனினும் பொலிஸார் சந்தேக நபரைப் பல நாள்களாகத் தேடி வந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த நபர் சட்டத்தரணிகளின் உதவியுடன் நீதிமன்றத்தில் முன்னிலையானார். ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அவரைப் பிணையில் விடுவிக்க நீதிமன்று அனுமதி வழங்கியது.

எனினும் அவர் மீது பண மோசடி தொடர்பான பிறிதொரு வழக்கு நிலுவையிலுள்ளதனால், விசாரணைக்காக அவர் வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு பின்னர் அவரைத் தம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப்போரின்போது 400 கிலோ தங்கம் மீட்பு

## பெருந்தொகை நகை ராஜபக்சாக்களால் கொள்ளை ; உண்மைகளைப் போட்டுடைத்தார் சரத் பொன்சேகா



கொழும்பு, மார்ச் 12
இறுதிப்போரின்போது 400 கிலோக்களுக்கு மேற்பட்ட தங்கம் மீட்கப்பட்டதாகத் தகவல் வெளியிட்ட பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா, இவற்றுள் பெருந்தொகையான தங்கத்தை ராஜபக்சவினர் கொள்ளையடித்து விட்டனர் என்றும் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார்.

இறுதிப்போரின்போது வடக்கிலிருந்து 150 கிலோ கிராம் தங்கம் மீட்கப்பட்டதாகத் தனக்குத் தகவல் தரப்பட்டதாக, பிரதமர் ரணில் கடந்த புதன்கிழமை தகவல் வெளியிட்ட நிலையிலேயே, சரத் பொன்சேகா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தத் தகவலை வெளியிட்டார். நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற நிதிச் சட்டவரைவு தொடர்பான விவாதத்தில் தனது கன்னி உரையை நிகழ்த்தியபோதே அமைச்சர் பொன்சேகா இந்தத் தகவலை வெளியிட்டிருந்தார்.

வடக்கில் 150 கிலோகிராம் தங்கம் கிடைக்கப்பெற்றதாகப் பிரதமரால் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பிரதமருக்கு வழங்கப்பட்ட தகவலும் திரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஏனெனில், இறுதிப் போரில் நான் இராணுவத் தளபதியாகப் பதவி வகித்தபோது 220 கிலோ கிராம் தங்கம் மீட்கப்பட்டது. இந் தத் தங்கத்தில் பெயர், விவரம் என்பன குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அப்போது ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட பசில் ராஜபக்ச 110 கிலோ கிராம் தங்கம் மீட்கப்பட்டதாகக் குறிப் பிட்டார். தங்கம் மீட்கப்பட்ட சந்தர்ப் பத்திலேயே நூற்றுக்கு 50வீதம்கொள்ளையடிக்கப்பட்டு விட்டது.

அதன்பின்னர் நான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகிய பின்னர் பெருந்தொகைத் தங்கம் மீட்கப்பட்டது. சுமார் 400 முதல் 500 கிலோ தங்கம் மீட் கப்பட்டது. இவை அனைத்தும் ராஜபக்சவினரால் கொள்ளையடிக்கப்பட்டன. எனவே, இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் - என்றார். (து-ஜ-5)

## நாளை தேசிய துக்கதினம்

கொழும்பு, மார்ச் 12
கண்டி வைத்தியசாலையில் புதன்கிழமை இரவு காலமான அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்கர் வணக்கத்துக்குரிய கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி தேரரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன. அந்தத் தினத்தை தேசிய துக்கதீனமாக அரசு பிரகடனம் செய்துள்ளது.

இதேவேளை, மஹாநாயக்க தேரரின் இறுதிக் கிரியையைப் பூரண அரச மரியாதையுடன் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய தரப்பினர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

காலம்சென்ற மஹாநாயக்க தேரரின் மறைவை அறிந்து, தான் ஆழ்ந்த கவலையுற்றதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, தேரர் சமூகத்துக்கும், நாட்டுக்கும், சாசனத்துக்கும் அவர் வழங்கிய மிகப்பெரும் சேவைகள் இலங்கை மக்களாலும் உலகெங்கிலும் வாழும் பௌத்த சமூகத்தாலும் பெரிதும் பாராட்டப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (து-ஜ-5)

## அனுமதியின்றித் தங்கியிருந்த இந்தியர்கள் எட்டுப் பேர் கைது

கொழும்பு, மார்ச் 12
கொழும்பு, வெள்ளவத்தை புளூமவுண்டன் சொகுசு வீட்டுத் தொடரின் , ஏழாவது மாடியில் உள்ள வீடொன்றில் நுழைவிசைவுச் சீட்டின்றித் தங்கியிருந்த 8 இந்தியப் பிரஜைகள் கொழும்புக் குற்ற விசாரணைப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த எட்டு இந்தியப் பிரஜைகளும் கடந்த இரண்டு மாதங்கள் வரையில் இங்கு தங்கியிருந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறுநீரகங்களை விற்பனை செய்யும் தரகர்களினால் ஒரு லட்சம் ரூபா வரையிலான வாடகை செலுத்தப்பட்டு, இவர்களுக்காக இந்த வீடு வாடகைக்கு வழங்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள எட்டுப் பேரும் 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட நபர்களெனவும், இவர்கள் அடிக்கடி இலங்கைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, பாமன்கடைப் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்த இந்தியப் பிரஜைகள் இருவரும், இவர்களது தரகர்களே எனவும், இந்த இருவராலுமே இவர்கள் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த எட்டுப் பேரில், ஐவரின் வயிற்றுப் பகுதிகளில் வெட்டுக் காயங்களின் தழும்புகள் காணப்படுவதாகவும், அவை சிறுநீரகங்கள் அகற்றப்பட்டதால் ஏற்பட்ட வெட்டுக் காயங்களா அல்லது வேறு காரணங்களினால் ஏற்பட்டுள்ள காயங்களா என்பதைத் தெரிந்து கொள்வது தொடர்பாகச் சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப் படுத்தப்படவிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றவிசாரணைப் பொலிஸ் பிரிவு இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (து-ஜ-22)

## பொலிஸாரின் பதவி உயர்வுகளில் இனிமேல் புதிய நடைமுறைகள்

கொழும்பு, மார்ச் 12
பதவி உயர்வுகளை வழங்கும் விடயத்தில் சேவைக் காலத்தை மாத்திரமன்றி, பொலிஸ் உத்தியோகத்தர்களது திறனாற்றல்கள் உள்ளிட்ட கல்வித் தகைமைகளையும் கருத்திற் கொண்டு தரப்படுத்தலொன்றை மேற்கொண்டு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந்தப் புதிய முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காகவே, அண்மையில் மேற்கொள்ளப்படவிருந்த நீண்ட காலச் சேவையை மட்டும் கவனத்தில் கொண்ட பதவி உயர்வுகளை வழங்குவது, தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டதாக பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளரான ஆரியதாஸ கூரே தெரிவித்துள்ளார்.

நீண்ட காலச் சேவை அடிப்படையின் கீழ் பதவி உயர்வுகளை வழங்கும் நடைமுறை ஒழுங்கை நடைமுறைப் படுத்தும் போது திறனாற்றல்களைக் கொண்டுள்ள பொலிஸ் உத் தியோகத்தர்கள் விரக்திக்கு உள்ளாவது பொலிஸ் ஆணைக் குழுவுக்குத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகப் பெருந் தொகையான பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து பொலிஸ் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் முன்வைக்கப் பட்டிருந்தன. எவ்வாறான போதிலும் புதிய முறைமை தொடர்பாக எதிர்வரும் 17 ஆம் திகதி கூடும் பொலிஸ் ஆணைக்குழுக் கூட்டத்தில் தீர்மானமொன்று மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-ஜ-22)

## ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டம் அங்குரார்ப்பணம்

கொழும்பு, மார்ச் 12
மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் மலையக அபிவிருத்திக்கான ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்விமான்கள் எனப்பல தரப்பினரும் கலந்து கொண் டனர்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிலையத்தின் பங்களிப்புடன் இந்த அபிவிருத்தித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து-ஜ-5)

## பண்டிகைக்கால முற்பணத்தை ரூ.10 ஆயிரமாக அதிகரியுங்கள்

### இலங்கைப் போக்குவரத்து ஊழியர் சங்கம் ஜனாதிபதி மைத்திரியிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 12
இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்களுக்கு பண்டிகைக்கால முற் பணமாக இதுவரையில் வழங்கப்பட்டு வரும் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்குப் பதிலாக, இந்த ஆண்டின் ஏப்ரல் மாத புத்தாண்டுக் கொண்டாட்டத்தை முன் னிட்டு 10 ஆயிரம் ரூபாயைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டிலும் பண்டிகைக் கால முற்பணத்தொகையாக 10 ஆயிரம் ரூபா கோரப்பட்டிருந்த போதிலும், ஊழியர்களுக்கு 2,500 ரூபாவே வழங்கப் பட்டது.

போக்குவரத்து அமைச்சின் கீழுள்ள ரயில்வே திணைக்களத்தின் ஊழியர்களுக்கு முறைப்படியான சுற்றறிக்கை ஒன்றின் மூலமாக பண்டிகைக் கால முற்பணமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும் நிலையில், இலங்கைப் போக்குவரத்துசபை ஊழியர்களுக்கு 2,500 ரூபா என்ற சிறிய தொகையை வழங்குவது பெரிதும் நியாய மற்றதும், நீதியற்றதுமான செயல் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (து-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள உலகக் கோஷ்டியினரின் வழக்குகள் விசேட நீதிமன்றுக்கு

## சிறைச்சாலைகள் திணைக்களம் ஆராய்கிறது

கொழும்பு, மார்ச் 12
கொழும்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த நபர்கள் சம்பந்தப்பட்ட வழக்குச் செயற்பாடுகளை, வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகத்தில் அமைந்துள்ள விசேட நீதிமன்றத்தில் மேற்கொள்வதற்குச் சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வெலிக்கடை, மகசீன் மற்றும் கொழும்பு விளக்கமறியல் ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த சந்தேகநபர்கள் வழக்கு விசாரணைகளுக்காக வெளியில் உள்ள நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பங்களின்போது அவர்கள் மீது வேறு பாதாள உலகக் கோஷ்டியினால் தொடுக்கப்படும் எதிர்பாராத தாக்குதல்களைத் தவிர்ப்பது குறித்தும், மேற்படி பாதாள உலகச் சந்தேக நபர்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பிடியிலிருந்து தப்பித்துச் செல்வதற்கு எத்தனித்தல் போன்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டே சிறைச்சாலைகள் திணைக்களம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

> பாதாள உலகக் கோஷ்டியினால் தொடுக்கப்படும் எதிர்பாராத தாக்குதல்களைத் தவிர்ப்பது குறித்தும் பாதாள உலகச் சந்தேக நபர்கள் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பிடியிலிருந்து தப்பித்துச் செல்வதற்கு எத்தனித்தல் போன்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டே சிறைச்சாலைகள் திணைக் களம் இந்த நடவடிக் கைகளை மேற்கொள்ளத் தீர்மானித் துள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகமான நிசான் தனசிங்கவால் இது சம்பந்தமாகச் சிறைச்சாலைகள் அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதோடு அதுசம்பந்தமாக அந்த அமைச்சினால் நீதி அமைச்சுக்கு எழுத்து மூலமாகத் தெரியப்படுத்தப் பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்து வழங்கிய சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரான ஆணை யாளர் துஸர உபுல் தெனிய, தமது திணைக்களத்தின் இந்தக் கோரிக்கை சம்பந்தமாக சிறைச்சாலைகள் அமைச்சு மற்றும் நீதியமைச்சு சாதகமான பிரதிபலிப்பொன்றைக் காட்டுமேயானால் மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தின் செயற்பாடுகளை மிக விரைவாக ஆரம்பிப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தயாராகவுள்ளது எனத் தெரிவித்தார். (த-ஜ-22)



## மனித உரிமை ஆர்வலர் ஹென்றி மலேசிய நீதிமன்றால் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 12
இலங்கையின் இறுதிப் போர் தொடர்பான 'போர் தவிர்ப்பு வலயம்' ஆவணப் படத்தை அனுமதியின்றி வெளியிட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்ட மனித உரிமை ஆர்வலர் லீனா ஹென்றி, மலேசிய நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

போர் தவிர்ப்பு வலயம் ஆவணப் படத்தைத் தணிக்கைச் சபையின் அனுமதியின்றி வெளியிட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டு லீனா ஹென்றிக்கு எதிராகக் கடந்த 2013 ஆம் ஆண்டு மலேசியப் பொலிஸார் திரைப்பட தணிக்கைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கின் குற்றச்சாட்டின் அடிப்படைத் தன்மைகளை வழக்குத் தொடுநர்கள் நிரூபிக்கத் தவறிவிட்டதாக, மலேசிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் லீனா ஹென்றி மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டையும் எதிர்கொள்ள நேர்ந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசிய நீதிமன்றத்தின் தீர்ப்பை லீனா ஹென்றியும், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதிப் பணிப்பாளர் பில் றொபேட்சனும் வரவேற்றுள்ளனர். (த-ஜ-5)

## வீதி மின் சமிக்ஞைகளுக்கு விசேட மின் விநியோகம்



கொழும்பு, மார்ச் 12
வீதிப்போக்குவரத்தின்போது மோட்டார் வாகனங்களைக் கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் ஒளிச் சமிக்ஞைகளுக்கு மின்சாரத்தை வழங்கும் புதிய முறையொன்றை கட்டமைப்பது குறித்துக் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

மின்சார விநியோகம் தடைப்படும் சந்தர்ப்பங்களில் மோட்டார் வாக னங்களைக் கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் ஒளிச் சமிக்ஞைகள் செய லிழந்து போவதோடு, அத்தகைய சந்தர்ப்பங்களின்போது, அந்த ஒளிச் சமிக்ஞைத் தொகுதிக்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்கான முறை யொன்று கட்டமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய மின்சாரத் தொகுதியில் இருந்து நேரடியாக அவற்றுக்கு மின்சார விநியோகத்தை வழங்காமல் ஒளிச் சமிக்ஞைத் தொகுதிக்கு தனியானதொரு விதத்தில் மின்சாரத்தை வழங்குவதால் மின்சார விநியோகம் தடைப்படும் சந்தர்ப்பங்களில் வீதிப் போக்குவரத்து நெரிசலெதுவும் ஏற்படமாட்டாது எனவும் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைவடைகிறது

### மின்சார உற்பத்தியில் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 12
மத்திய மலையகத்தின் மேற்குப் பிரதேசங்களில் அமைந்துள்ள காஸல்ரீ, மவுஸக்கலை, மேல்கொத்மலை மற்றும் கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் தற்போது வேகமாகக் கீழிறங்கி வருவதன் காரணமாக ஏராளமான நீர்மின் உற்பத்தி நிலையங்களின் மின்சார உற்பத்தியில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

தற்போது காஸல்ரீ நீர்த் தேக்கத்தின் நீர் மட்டமானது வான் மட்டத்திலிருந்து முப்பது அடிகளும் , மவுஸக்கலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம், வான் மட்டத்திலிருந்து இருபது அடிகளும் கீழிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்த்தேக்கங்களுக்குத் தினந்தோறும் வந்தடையும் நீர்மட் டத்துக்கு அமைவாகவே, கெனியோன், லக்ஷபான, புதிய லக்சபான, பொல் பிட்டிய மற்றும் விமல சுரேந்திர, கொத்மலை மற்றும் மேல் கொத் மலை ஆகிய நீர்மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி இடையிடையே மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அந்த நீர்த்தேக்கங்களின் நீர் மட் டம் குறைந்து வருவதன் கார ணமாக நீர்த்தேக்கங்கள் உரு வாக்கப்பட்ட போது மூழ்கிப்போன முன்னைய கிராமங்கள் தீவுகள் சிலவும் தற்போது பார்வைக்குப் புலப்பட ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-22)

## பாடசாலை சார்ந்த விவரம் அறிக்கையிடுவதற்குக் குழு

### கல்வியமைச்சர் நியமித்தார்

கொழும்பு, மார்ச் 12
நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் அவற்றில் உள்ள ஆசிரியர்கள், மாணவர்களின் தொகைகள் போன்ற சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசத்தால் அறுபேர்கொண்டகுழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது இலங்கையில் உள்ள அரச பாடசாலைகளின் எண்ணிக்கை, அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கல்விபயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை, வருடாந்தம் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர்களின் எண்ணிக்கை போன்ற விடயங்கள் குறித்து ஒரு மாத காலத்துக்குள் அறிக்கையொன்றைத் தயாரிக்கும் பொறுப்பு அந்தக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், கல்வியமைச்சில் துறைசார்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்றிருந்த கூட்டமொன்று நடத்தப்பட்டது. அதன் போது அமைச்சரால் மேற்படி துறைகள் தொடர்பான விவரங்கள், தரவுகள் கோரப்பட்டிருந்தபோது, சரியான தரவுகள், புள்ளி விவரங்களை வழங்கப்படவில்லை.

இதனையடுத்துதே கல்வியமைச்சர் காரியவசம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. (த-ஜ-22)

## ஓட்டோ சாரதிகள் பாதுகாப்புக்கு இருக்கைப் பட்டி அவசியமானது

### புத்திஜீவிகள் சபை பரிந்துரை

கொழும்பு, மார்ச் 12
வாகனம் செலுத்திச் செல்லப்படும் வேளையில், ஓட்டோ சாரதிகளின் பாதுகாப்புக்கு இருக்கைப் பட்டிகள் பயன்படுத்தப்படல் அவசியமென உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் அடங்கிய சபை பரிந்துரை செய்துள்ளது.

வீதிச் சட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய சட்டங்களைக் கட்டமைக்கும் யோசனைத் திட்டம் தொடர்பாக இந்தப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

பிரதானமான எட்டுவிடயங்களை உள்ளடக்கியுள்ள இந்த யோசனைத் திட்டம், வீதிகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தலைவரான வைத்தியர் சிசிர கோதாகொடவினால் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச் [illegible] கொழும்பில் வைத்து கடந்த வாரம் கையளிக்கப்பட் டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு மற்றும் வீதிகள் பாதுகாப்புத் தொடர்பாக தேசிய சபையின் ஒழுங்கு படுத்தலில் காலிமுகத்திடல் ஹோட்டலில் இடம் பெற்றிருந்த புத்திஜீவிகள் மாநாட்டில் கலந்து கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களினால் இந்த யோசனைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தென்னாசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தற்போது கடைப் பிடிக்கப்பட்டு வரும் வீதிச் சட் டங்கள் மற்றும் செயன்முறை செயற்பாடுகள் இந்த யோச னைத் திட்டத்தைத் தயாரிப் பதற்குப் பயன்படுத்தப்பட் டிருப்பதாக வீதிகள் பாது காப்பு சம்பந்தமான தேசிய சபை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த யோசனைத் திட்டத்தில் வாகனமொன்றைச் செலுத்திச் செல்லும் சாரதியொருவரால் அருந்தக் கூடியதாகவுள்ள மதுசாரத்தின் அளவுப்பிரமாணம் 0.5இல் இருந்து 0.45 வரையில் குறைத்து விடப்படுதல் மற்றும் சாரதிகளைப் பரிசோதிக்கும் முறைமைகள் தொடர்பாக நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல், பாதுகாப்புத் தலைக் கவசங்கள் தொடர்பாக தர நிர்ணயமொன்றை ஏற்படுத்தல், இலங்கையின் பிரதானமான நகரங்கள் மற்றும் அதிகரித்த விபத்துக்கள் இடம் பெறும் இடங்களில் சீ.சீ.ரீ.வி. கமராத் தொகுதிகளைப் பொருத்தி சட்டங்களை மீறுவோருக்கு கடுமையான தண்டனைகளைப் பெற்றுக் கொடுத்தல், வாகனங்களில் சிறுபிள்ளைகளைக் கொண்டு செல்லும்போது விசேடமான பாதுகாப்பு முறைமைகளைக் கட்டமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. (த-ஜ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் எழுத்தில் இடித்துரைக்க வேண்டும்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பு, போரினால் பாதிப்புற்ற தமிழ் மக்களின் மீள்குடியமர்வு, காணாமற் போனவர்களின் விவகாரம் ஆகியவற்றில் இலங்கை அரசு அசமந்தமாகவே செயற்படுகிறது.

மேற்கண்டவாறு இந்த நாட்டின் அரசு மீது காட்டமான கண்டனத்தை வெளிப்படுத்தி உள்ளார், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன்.

இந்த மாத முற்பகுதியில்- மார்ச் முதலாம் திகதி- ஐ.நா.மனித உரிமைகள் மாநாட்டில்-ஆணையாளர் இலங்கை தொடர்பில் வாய்திறக்காமல் இருந்தமை குறித்து, இதே பத்தியில் காத்திரமாக, காரசாரமாகக் கண்டித்திருந்தோம்.

தமக்கான வாய்ப்பைத் தாம் தக்கவாறு பயன்படுத்தவில்லை என்ற தமது குற்ற உணர்வைத் தாங்க முடியாமல், நேற்று முன்தினம்(10.03.2016 இல்) ஐ.நா.மனித உரிமைகள் சபையின் முப்பத்தோராவது அமர்வில், மேற்குறிப்பிட்ட விவகாரங்கள் குறித்து விஸ்தாரமாகக் கருத்து வெளிப்படுத்தி உள்ளார் சையிட் அல் ஹுசேன்.

இலங்கைத் தமிழ் மக்களது சிக்கல்கள் தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டிருப்பது, முக்கியமான செயற்பாடாகக் கொள்ளத்தக்கதாகும்.

நல்லிணக்கத்துக்கான சக்தி வாய்ந்த அடையாளமாக, குறித்த விடயங்கள் குறித்து விரைவான செயற்பாடுகளின் அவசியத்தைச் சுட்டிக் காட்டி உள்ள, மனித உரிமைகள் ஆணையாளர்--

இராணுவத்தின் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பது, தடுப்புக் காவலில் உள்ள தமிழர்களின் வழக்குகளை மீளாய்வு செய்வது, (காணாமற் போனவர்களின் இல்லை இல்லை, காணாமற் போகச் செய்யப்பட்டவர்களின்) விவகாரம் மற்றும் பல விடயங்களில் முன்னேற்றகரமான, செயற்பாடுகளுக்கு வேக வேகமாக செயல்வடிவம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

அதேவேளை--

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் இந்த நாட்டு அரசுக்கு இடித்துரைத்துள்ளார்.

மிகக் குறிப்பாக, அச்சுறுத்தல், கண்காணிப்பு எதுவும் இல்லாத சூழலில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அவர் அழுத்திக் கூறி உள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குரல்கள் அச்சத் தொனியில் ஒலிக்காது உண்மைகளை வெளிப்படுத்த வகை செய்யப்பட வேண்டும் என்பதனையும் அவர் ஊன்றித் தெரிவித்திருக்கிறார்.

அந்த வகையில்--

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமற் போனோர் விவகாரம், தமிழ் மக்கள் தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியமர்தல், உட்பட--

போர்க்குற்றங்கள் குறித்த உள்ளக விசாரணைப் பொறிமுறை பக்கச் சார்பற்றதாகவும், சுயாதீனமாகவும் அமைய வேண்டும் என்றும்-அதுவே ஆணைக்குழுவுக்கு ஏற்புடையதாக அமையும் என்றும்-அவர் வெறும் வாய்ச் சொற்களால் அன்றி, ஐ.நா.மனித உரிமைகள் சபையின் அமர்வில், இலங்கை அரசுக்கு மிகக் கடுமையாக அழுத்தித் தெரிவிக்க வேண்டும். எழுத்து மூலம் பதிப்பதும் அதி அவசியம். நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாமா..?

# நல்லிணக்கம் உருவாவதில் இளைஞர்களின் பங்கு

வந்தியத்தேவர்



இலங்கைக்கு இப்போது தேவைப்படுவது இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமே. இந்த நாட்டில் இதுவரை நிலவி வந்த துன்பகரமான சூழ்நிலையில் இருந்து விடுபடத் தேவைப்படும் நல்லிணக்கம், தெற்கில் இருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது இங்கே பல தடவைகளில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நல்லிணக்கத்தின் ஆரம்பம் தெற்கிலிருந்தே வர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். போரில் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களே. பெரும் துயரங்களையும் இழப்புக்களையும் எதிர்கொண்ட அந்த மக்களின் மனங்களில் ஏற்பட்ட காயம் ஆறாத வடுவாக இன்றும் உள்ளது. அந்த வடுக்களை நீக்கி, தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியவர்கள் இனங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட மூலகாரணமாக இருந்த தென்பகுதி அரசியல்வாதிகளும் அதற்குக் கரம் கோர்த்து உதவிய தென் பகுதி மக்களுமே. எனவே நல்லிணக்கத்தை ஏற்படுத்த நேசக் கரம் நீட்ட வேண்டிய தார்மீகப் பொறுப்பு அவர்களுக்கானதே. சகல மக்களுக்குமிடையில் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டில் மீண்டும் நல்லாட்சியைத் தோற்றுவிக்கும் குறிக்கோளுடன், மைத் திரிபால சிறிசேன தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டது. நாட்டில் ஒரு நீதியான அரசு அமைய வேண்டும் என்பதில் தமிழ்ச் சிறுபான்மை இனங்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கியதால் ஆட்சி மாற்றம் உருவான போதிலும் இன்னமும் சுட இனங்களுக்கு மிடையிலான நல்லி ணக்கம் ஏற்பட்டதாக இல்லை. தென்பகுதியில் உள்ள இனவாதக் குழுக்கள் இனங்களுக் கிடை யிலான நல்லிணக்கத்துக்குத் தடைக் கற்களாக இருந்து வருகின்றன.

### தடைக்கற்களாக விளங்கும் இனவாதக் குழுக்கள்

மைத்திரிபால சிறிசேன சிறுபான்மை மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்க முடியாதவராகத் திண்டாடிக் கொண்டிருக்கிறார். தென் பகுதியில் உள்ள இளைய தலைமுறையினரின் மனங்களில் இது விடயத்தில் நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் நம்பு கிறார். வயதானவர்களின் மனங்களில் நல்லிணக்க விதைகளை விதைக்க வேண்டும் என்பதும் அவரது கருத்தாகும்.

தென்னிலங்கையில் உள்ள இளந்தலைமுறையிடம் நல்ல மாற்றம் தென்படுவதாகக் கூறப்படுவது வரவேற்கப்பட வேண்டியதே. ஜனாதிபதியின் கூற்று உண்மையானால், நல்லிணக்கத்துக்கு ஆதரவாகச் செயற்படும் அந்த இளந்தலைமுறையினர் தமது சிந்தனைகளை மக்கள் முன்கொண்டுசெல்ல வேண்டும். தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக கடந்த காலங்களில் நடத்திய அகிம்சை வழிப்போராட்டங்களையும், அதற்கு எதிராக அடக்குமுறைகளைக் கையாண்ட தமது அரசியல்வாதிகளின் சுய நலன்கள் கொண்ட நோக்கங்

> ஆட்சி மாற்றம் உருவான போதும் இன்னமும்சுட இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் ஏற்பட்டதாகத் இல்லை.

களையும் அப்பாவிச் சிங்கள மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். தமிழ் மக்களின் கல்வி, தொழில்வாய்ப்புக்கள் தொடர்பில் சிங் கள இனவாதத் தலைமைகள் மேற்கொண்ட அநீதிகளை வெளிப்படுத்த வேண்டும். தமிழர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு வித்திட்டவர்கள் சிங்கள அரசியல்வாதிகளே என்பதைத் தயக்கமின்றி எடுத்துக் கூறவேண்டும். மொத்தத்தில் கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக இந்த நாடு இருண்டு கிடந்ததற்கு தென் பகுதி அரசியல்வாதிகளும் அவர்களுக்குத் துணை போன தென் பகுதி அப்பாவி மக்களுமே பொறுப்பு என்ற உண்மையை அந்த மக்கள் மத்தியில் அதாவது தமது உறவுகளிடத்தில் தெளிவுபட எடுத்துக் காட்டுவதுடன் தொடர்ந்தும் இனவாதத் தலைமைகளின் சுயநல அரசியல் நோக்கங்களுக்காக அவர்கள் பலிக்கடாக்களாக ஆகிவிடக்கூடாது என்பதை அவர்களது மனங்களில் பதிய வைக்க வேண்டும்.

### இளந் தலைமுறையினரின் பரப்புரைகள்


அந்நிய ஆதிக்கத்தில் இருந்து இந்த நாடு சுதந்திரம் பெற தமிழ் மக்கள் ஆற்றிய பணியை சிங்கள மக் கள் நினைவு கூரத்தக்கதாக தென்பகுதி இளந்தலைமுறையினர் தமது பரப்புரைகளை முன்னெடுக்க வேண்டும். இளந் தலைமுறையினரது நல்லிணக்க சிந்தனைகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதன்





# குடும்ப அரசியலால் அழியப்போகும் ஜனநாயகம்

ஜனநாயக நாடொன்றில் குடும்ப அரசியல் தலைதூக்கி நிற்பதால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை இந்த நாடு அனுபவித்து வருகின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்த குடும்ப அரசியல்தான் தழைத்தோங்கிக் காணப்படுகின்றது. நாட்டின் முதலாவது பிரதமராகப் பதவி வகித்தவர் மறைந்த டி.எஸ்.சேனநாயக்க. இவரது மகனான டட்லி சேனநாயக்கவும் பின்னர் இந்தப் பதவியில் அமர்ந்து கொண்டார். இதேவேளை இனவாதத்தை மூலதனமாகக் கொண்டு அரசியலில் இறங்கிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்க, இந்த நாட்டில் இனவாதத் தீ கொழுந்து விட்டு எரிவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர். இவரது மறைவுக்குப் பின்னர் இவரது, மனைவியான ஸ்ரீமாவோ பதவிக்கு வந்தார். இவரது ஆட்சிக் காலமும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குச் சார்பானதாக இருக்கவில்லை. மாறாக கணவரின் கொள்கைகளையே அவர் முற்றுமுழுதாகப் பின்பற்றி நடந்தார். இவ ரது பிள்ளைகளும் அரசியலில் நுழைந்து முக்கிய பதவிகளிலும் அமர்ந்திருந்தனர். மகன் அனுரா அமைச்சராகவும், சபா நாயகராகவும் பதவி வகித்துள்ளார். மகள் சந்திரிகா நாட்டின் உயர் பதவியான ஜனா திபதிப் பொறுப்பில் அமர்ந்து இந்த நாட்டை ஆட்சி புரிந்துள்ளார். ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ ஆகியோரின் நேரடி வாரிசுகள் அவர்களது காலத்தில் அரசியலில் பிரவேசிக்காத போதிலும், பின்னர் அரசியலில் பிரவேசித்த பிரேமதாசவின் மகன் சஜித் இப்போதும் அரசியலில் இருந்து வருகிறார்.

**குடும்ப ஆட்சிக்கு எடுத்துக்காட்டான மகிந்த**

குடும்ப ஆட்சி என்பதற்கு முழுமையான எடுத்துக் காட்டாக விளங்கியவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் என ஏராளமானவர்கள் ஆட்சியில் பங்கு கொண்டிருந்தனர். அவரது மூத்த சகோதரரான சமல் ராஜபக்ச சபாநாயகராக நியமிக்கப்பட்டார். தம்பிகளில் ஒருவரான பசில் ராஜபக்ச நாட்டின் பொரு ளாதாரத்தையே கட்டுப்படுத்தும் வகையில் முக்கியமான அமைச்சுப் பதவியில் அமர்த்தப்பட்டார். இன்னொரு தம்பியான கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸாரை முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதான பாதுகாப்புச் செயலர் பதவியில் அமர்த்தப்பட்டார். பாதுகாப்புத் தொடர்பான சகல அதிகாரங்களும் இவர் வசம் இருந்ததால் ஜனாதிபதிக்கு வலதுகரமாக இவர் திகழ்ந்தார். சிலவேளை ஜனாதிபதியின் அதிகாரத்தை மீறும் வகையிலும் இவர் நடந்து கொண்டார். ஆனால், மகிந்த அதைக் கவனத்தில் கொள்ளவில்லை. மகிந்தவின் மூத்த புதல்வர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்க இன்னொரு மகன் கடற்படை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். மகிந்தவின் மனைவிகூட நிறுவனங்கள் சிலவற்றில் முக்கிய பொறுப்புக்களை வகித்தார். இதைவிட மகிந்தவுக்கு வேண்டியவர்கள் அரசில் முக்கியமான பொறுப்புக்களில் அமர்ந்து கொண்டனர். மகிந்த, ஜனநாயக நாடொன்றின் ஜனாதிபதியாகப்பொறுப்பு வகிக்கவில்லை. சர்வ அதிகாரங்களும் கொண்ட ஒரு மன்னராகவே அவர் தன்னை மாற்றிக் கொண்டார். போரைக் காரணம் காட்டிக் காட்டியே அவர் தமது காரியங்கள் சகலதையும் சாதித்துக் கொண்டார். குடும்ப ஆட்சியினால் ஒரு நாடு எதிர்கொள்கின்ற மோசமான அவலங்களுக்கு மகிந்தவை விட வேறு எவரையும் உதாரணமாகக் கூறுவது பொருத்தமாக இருக்கமாட்டாது.

> “மகிந்த ஜனநாயக நாடொன்றின் ஜனாதிபதியாகப்பொறுப்பு வகிக்கவில்லை. சர்வ அதிகாரங்களும் கொண்ட ஒரு மன்னராகவே அவர் தன்னை மாற்றிக் கொண்டார்.”

**இந்தியாவிலும் குடும்ப ஆட்சி**

எமது அண்டை நாடான இந்தியாவிலும் குடும்ப ஆட்சிக்கு முக்கியத்துவம் வழங்குவதைக் காண முடிகின்றது. இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவ ஹர்லால் நேருவின் மகளான இந்திரா காந்தி அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்துள்ளார். அவரது மறைவுக்குப் பின்னர் மகனான ராஜீவ் காந்தி நாட்டின் தலைவரானார். இவருக்குப் பின்னர் இவரது மனைவியான சோனியா நாட்டின் தலைமைப்பொறுப்பில் அமராத நிலையிலும் முழுஅதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தார். ராஜீவின் மகனான ராகுலும் தற்போது காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் பதவியை வகிப்பதோடு அரசியலிலும் முக்கியபங்கைவகித்துவருகின்றார். தற்போது மேலைநாடுகளிலும் இந்த வியாதி தொற்றிவிட்டதைப் பார்க்க முடிகின்றது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்ரனின் மனைவியான ஹிலாரி அந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கான முழு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். புஷ் குடும்பத்தில் தகப்பனும், மகனும் அமெரிக்காவின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்திருந்துள்ளனர்.

## விபத்துக்களைக் குறைப்பதற்கு சில ஆலோசனைகள்

கடந்த மாதம் திருநெல்வேலியில் நடந்த வாகன விபத்தில் உயிரிழந்த 6 வயதுச் சிறுவனின் இறுதிச் சடங்கு நடைபெற்ற தினத்துக்கு மறுநாள், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி, வடக்குமாகாண முதலமைச்சர், வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர், யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு மனுக்கள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. மறுநாளே பருத்தித்துறை வீதியில் மினி பஸ்ஸும் இ.போ.ச.பஸ்ஸும் ரேஸ் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்ததை அவதானித்தேன். நீங்கள் என்னதான் மனுக் கொடுத்தாலும், ஆர்ப்பாட்டம் செய்தாலும் நாங்கள் அப்படித்தான் இருப்போம் என்றுதான் நடக்கிறார்கள். நாய்வாலை நிமிர்த்த முடியாதென்பார்கள். இது இவர்கள் விடயத்தில் சரி போன்று இருக்கிறது. எனவே பின்வரும் விடயங்களைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1.பஸ்தரிப்பிடங்களில் மட்டுமே பஸ்கள் பயணிகளை ஏற்றவும் இறக்கவும் வேண்டும். யாழ்.பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் சகல இ.போ.ச பஸ்களும், மினிபஸ்களும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலிருந்து வேம்படிச் சந்தி வரை திடீர் திடீர் என பஸ்களை நிற்பாட்டிப் பயணிகளை ஏற்றுகிறார்கள். இதனால் பஸ்ஸின் பின்னால் வரும் வாகனங்கள் நிலை தடுமாறுகின்றன. போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. மேலும் வடமாகாணம் முழுவதுமே சகல பஸ்களும் பஸ்தரிப்பிடமில்லாத இடங்களில் பயணிகளை ஏற்றுவதற்கு, இறக்குவதற்கு திடீர் என நிற்பாட்டப்படுவதும் விபத்துக்கள் ஏற்படக் காரணமாகிறது. அதனையும் விட பஸ் நிற்கிறது தானே என்று பின்னால் வரும் வாகனங்கள் அதனைத் தாண்டிச் செல்ல முற்படும் போது நின்ற பஸ்களும் அவசரமாகப் புறப்படுகின்றன. இவற்றாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. முன்பு மினிபஸ்கள் இல்லாத காலத்தில் இ.போ.ச.பஸ்ககளை பஸ்களை தரிப்பிடங்களில் மட்டுமே பயணிகளை ஏற்றவும், இறக்கவும் நிற்பாட்டினார்கள். தற்போது அவர்களும் எல்லா இடங்களிலும் நிற்பாட்டுகிறார்கள். எனவே பஸ் தரிப்பிடங்களில் மட்டும் பஸ்கள் நின்று பயணிகளை ஏற்றவோ, இறக்கவோ வேண்டுமேயொழிய ஒவ்வொரு வீட்டுப் படலையிலுமல்ல என்பதைச் சாரதிகள் கடைப்பிடிக்கும் வகையில் கண்காணிக்கப்பட்டு தவறுவோரிடம் தண்டப்பணம் அறவிடப்படல் வேண்டும்.

2. யாழ். தனியார் பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் சகல மார்க்க பஸ்களும் ஊர்ந்து ஊர்ந்து சென்று ஆரியகுளச்சந்தியிலிருக்கும் பஸ்தரிப்பிடத்திலும், சிவன் கோயில் சந்தியிலிருக்கும் பஸ்தரிப்பிடத்திலும் நிறுத்தப்பட்டு நடத்துநர்கள் பஸ்ஸின் பின்னால் வந்து நின்று பார்ப்பார்கள். இ.போ.ச.பஸ் வருகிறதா என்று. வரும் பஸ் கண்களில் தென்பட்டதும் உடனேயே ஓடி ஏறி 'அண்ணை எடுங்கோ' என்று கத்தி ரேஸ் ஓடத் தொடங்கிவிடுவார்கள். பயணிகள் இறங்கும் இடங்களில் அவசரமாகப் பயணிகளைத் தள்ளி இறக்கிவிடுவார்கள். அண்மையில் கூட பாடசாலை மாணவனை பஸ் ஓட ஓடத் தள்ளி இறக்கி அந்த மாணவன் விழுந்து காயமடைந்ததாக உதயன் பத்திரிகை மூலம் அறிந்தேன். இவ்வாறான செயற்பாடுகளினாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. பஸ்தரிப்பிடங்களில் மட்டுமே பயணிகளை ஏற்றவும் இறக்கவும் நிறுத்த வேண்டுமென்று வடமாகாண போக்குவரத்து அமைச்சு தங்களின் நியதிச் சட்டத்தில் உள்ளடக்கி நடைமுறைப்படுத்த வேண்டும். தவறும் பஸ் சாரதிகளிடம் உடனடித் தண்டப்பணம் அறவிடப்படல் வேண்டும்.

3. பாதசாரிகளுக்கான மஞ்சள் கடவை ஒன்று இருப்பதாக வாகனம் ஓட்டுபவர்கள் (முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் உட்பட) அனைவருமே அறிந்துகொள்ளவில்லை என்பது போலத்தான் யாழ்.நகரில் பயணிக்கும் சகல வாகனங்களும் செல்கின்றன. மஞ்சள் கடவையின் இருபக்கத்திலும் நெளி நெளியாக கோடுகள் வரைந்து நேர் கோடு ஒன்றிருக்கும். பாதசாரிகள் மஞ்சள்கடவையைக் கடக்கும் போது அந்த இடத்தில் செல்லும் வாகனங்கள் நிற்பாட்டப்படல் வேண்டும் என்பது விதி. மேலும் பாதசாரிகள் மஞ்கள் கடவையில் கடப்பதற்குத் தயார் நிலையில் இருக் கும்போது செல்லும் வாகனங்கள் அந்த இடத்தில் நிற்பாட்டப்படல் வேண்டும். ஒருவருமே நிற்பாட்டுவதில்லை. பாதசாரிகள் கடக்க முயற்சித்து கால் வாசித்தூரம் வந்தால் கூட வாகனங்களை நிற்பாட்டாமல் பாதசாரிகளை 'என்ன வீட்டில் சொல்லிற்று வந்தனியா' என்று வசைபாடிச் செல்வார்கள் ஓட்டுநர்கள். இதன் அர்த்தம் அவர்கள் ஒழுங்காக வாகன அனுமதிப்பத்திரம் பெறவில்லை என்பதுதான் பாதசாரிகள் கடப்பதற்கு வாகனங்களை நிறுத்தி இடமளிக்கவேண்டுமென்று வாகன அனுமதிப்பத்திர பயிற்றுவிப்பாளர்களுக்கு கூடத் தெரியவில்லை. காரணம் நான் அவதானித்திருக்கிறேன். பயிற்றுவிப்பாளர்கள், பயிற்றுனர்களுக்கு பயிற்சி கொடுத்த பின்பு தங்கள்சொந்தத் தேவைக்கு வாகனங்களைச் செலுத்தும் போது மஞ்சள் கடவையில் மேற்கண்ட இடத்தில் நிற்பாட்டுவதில்லை. அவர்களும் அந்த வேகத்தில் தான் பாதசாரிகள்மஞ்சள் கடவையில் நின்றாலும் பயணிக்கிறார்கள். பயிற்றுவிப்பாளர்களே இப்படியென்றால் அவர்களால் பயிற்றுவிக்கப்படுபவர்களிடம் மஞ்சள் கடவையில் பாதசாரிகள் நின்றால் நிற்பாட்ட வேண்டுமென்பதை எப்படி எதிர்பார்க்க முடியும்? எனவே இவைகளைக் கண்காணிக்க, நடவடிக்கை எடுக்க போக்குவரத்து பொலிஸினால் முடியாது. வடமாகாண போக்குவரத்து அமைச்சு நியதிச்சட்டத்தில் உள்வாங்கி இவற்றைக் கண்காணித்து நடவடிக்கை எடுப்பதற்கென்று அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுத்தால் என்ன?

ஆ. மைக்கல், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜப்பானில் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதியன்று இடம்பெற்ற சுனாமி இடரில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு ஜப்பானியர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர். இந்த இடரில் ஏறக்குறைய 18 ஆயிரத்து 500 பேர் காணாமற்போனதுடன், பலர் உயிரிழந்தனர். கடந்த கால் நூற்றாண்டில் ஏற்பட்ட மோசமான பேரழிவு இது என வர்ணிக்கப்பட்டுள்ளது. நேற்றைய தினம் இடர் இடம்பெற்ற நேரமான பிற்பகல் 2:46 மணிக்கு, நாட்டின் தலைவர்களும் அஞ்சலி செலுத்தினர். (த-ரி4)

## பங்களா
## அமெரி
## இணைய

டாக்கா, மார்ச் 12
அமெரிக்க பெரடல் வங்
செய்யப்பட்ட பங்களா
மில்லியன் அமெரிக்க
திருடப்பட்டுள்ளதாக ப
மத்திய வங்கி ஊடகப்
புதன்கிழமை அறிவித்
வெளிநாட்டில் வைப்பு
இணைய ஊடுருவல்
டுள்ளாதாக மேலும்
டுள்ளது.
101 மில்லியன் டொலர்
பட்டதுடன், அதில் 81 மில்
பிலிப்பைன்சில் வைப்
மீதிப்பணம் இலங்கை
கத்தில் முதலிடப்பட்டு
விக்கப்பட்டுள்ளது.
திருட்டு பங்களாதேஷ்
ருந்து நடத்தப்பட்டுள்ள
பேச்சாளர் சுபங்கர் சஹ
மேலும், பாதுகாப்புக
யும் மீறி இந்த இணை
இடம்பெற்றுள்ளது. இ
வங்கிக் கொள்ளை எ
வும் பெயிடிது எனவும்

## தொடர் தற்கொலைகளால் கனேடிய நகரில் அவசரநிலை



ஒட்டாவோ, மார்ச் 12
கனேடிய நகரம் ஒன்றில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் கடந்த 3 மாதங்களில் 6 தற்கொலைகள் இடம்பெற்றதையடுத்து அந்தநாட்டு அரசு இந்த அவ சர நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

மேலும் 170 மாணவர்கள் தற்கொலைக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்கும் நடிவடிக்கையில் அப்பகுதி அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

வாழ்வியல் நெருக்கடிகளும், அழுத்தங்களும் தற்கொலைக்கு அவர்களைத் தூண்டியுள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. வட மனிரோபா பகுதியில் உள்ள பிமிசிமக் கிறீக்கில் தொடர் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 4 பேர் பாடசாலை மாணவர்களாவர். இந்தப் பகுதியில் 5 ஆயிரத்து 858 பேர் வசிக்கின்றனர். மாணவர்களின் இறப்பு அந்தப் பகுதியைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. நாட்டினரின் நலனும் பாதுகாப்பும் எமக்கு அவசியம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இடம்பெற்ற தொடர் தற் கொலைகளால் மக்கள் மனமுடைந்துள்ளனர். இவர்களுக்கான பாதுகாப்பையும், அனுசரணையையும் வழங்க நாம் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி4)

# கிறிஸ்தவர், சிறுபா
# இன அழிப்புச் செய்
## அமெரிக்க அமைப்பு குற்ற

வொஷிங்டன், மார்ச் 12
கிறிஸ்தவர்களுக்கும், வேறு சிறுபான்மை இனத்தவர்களுக்கும் எதிரான இன அழிப்பை ஐ.எஸ். அமைப்பு மேற்கொள்கின்றது என அமெரிக்க அவதானக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் வியாபித்துள்ள பிரதான இரு கிறிஸ்தவப் பிரிவினர், கிறிஸ்தவர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஊடகச் சந்திப்பு ஒன்றை நடத்தினர். அத்துடன் கிறிஸ்தவர்களுக்கு எதிரான இன அழிப்பு தொடர்பான ஆவணத்தை அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஜோன் கெரியிடம் கையளித்தனர்.

கிறிஸ்தவர்களும் ஏனைய சிறுபான்மையினரும் இன அழிப்புக்கு ஆளாவதாக மத ரீதியான அவதானிப்புக் குழுவினர் வொஷிங்டனில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் ஆவணப் புத்தகத்தில் 2014 ஆம் ஆண்டு யாசிடி இனத்தவர்கள், கிறிஸ்தவர்கள் மீது அதிகரிக்கும் வன்முறைச் செயல்கள் இன அழிப்புக்கு வழிகோலுகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.





## 15 தொன் ஸ்னிக்கர்ஸ் சொக்கலேட்டுகளை எரித்த ஹமாஸ்

காசா, மார்ச் 12
காசாவில் பிரபல சொக்லட் நிறுவனமான ஸ்னிக்கர்ஸ் தயாரிப்பினுள் பிளாஸ்ரிக் துண்டு இருந்ததை அடுத்து 15 தொன் சினிக்கர்ஸ் சொக்கலேட்டுகள் இஸ்லாமிய ஹமாஸ் குழுவினரால் எரிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக சொக்கலேட் நிறுவனம் தெரிவித்துள்ளது. குழி ஒன்றினுள் சொக்லேட்டுகளைப் போட்டு மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்டது. சொக்கலேட் டினுள் சிறிய பிளாஸ்ரிக் துண்டு இருந்ததை அடுத்து இந்த நடவடிக்கையை ஹமாஸ் இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர். முகாம்களில் மற்றைய குழந்தைகளிடம் வழங்கப்பட்ட சொக்கலேட்டுகளையும் பறித்து எரித்தனர்.

2007 ஆம் ஆண்டு ஹமாஸ் இயக்க கட்டுப்பாட்டினுள் காசாவின் சில பகுதிகள் வந்ததை அடுத்து இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றனர். (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களாதேஷின் 100 மில்லியன் டொலர் மரிக்கப் பெரடல் வங்கியில் திருட்டு

## ணய ஊடுருவல் மூலம் கைவரிசை

ர்ச் 12
பெரபல் வங்கியில் வைப்புச் ட பங்களாதேஷின் 100 அமெரிக்க டொலர் பணம் ள்ளதாக பங்களாதேஷின் கி ஊடகப் பேச்சாளர் கடந்த ம அறிவித்துள்ளார்.
ல் வைப்புச் செய்த பணம் ஊடுருவல் மூலம் திருடப்பட் மேலும் தெரிவிக்கப்பட் துள்ளார்.

ன் டொலர் கொள்ளை யிடப் அதில் 81 மில்லியன் டொலரை சில் வைப்பு செய்து விட்டு, இலங்கையில் சூது வர்த்த லிடப்பட்டுள்ளது என தெரி ள்ளது. மேலும் இந்தத் ளாதேஷ் வங்கி ஒன்றிலி ப்பட்டுள்ளது என ஊடகப் பங்கர் சஹா தெரிவித்தார்.
துகாப்புகள் அனைத்தை த இணைய ஊடுருவல் ள்ளது. இந்த ஊடுருவல் ள்ளை வரலாற்றில் மிக எனவும் அவர் தெரிவித்

> 101 மில்லியன் டொலர் கொள்ளையிடப்பட்டதும், அதில் 81 மில்லியன் டொலரைப் பிலிப்பைன்சில் வைப்பு செய்து விட்டு, மீதிப்பணம் இலங்கையில் சூது வர்த்தகத்தில் முதலிடப் பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தத் திருட்டு பங்களாதேஷ் வங்கி ஒன்றிலிருந்து நடத்தப் பட்டுள்ளது என ஊடகப்பேச்சாளர் சுபங்கர் சஹா தெரிவித்தார்

திருட்டைச் செய்யக்கூடிய ஊடுருவலை நிறுத்துவதற்கான அறிவுரைகள், குறித்த வங்கிக்கு அனுப்பப்பட்டிருந்தன. திருடப்பட்ட பணத்தில் 81 மில்லியன் டொலர் பணம் பிலிப்பைன்சில் பல்வேறு தரப்பட்ட பங்குகளாகப் பிரிக்கப்பட்டு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ளது. 20 மில்லியன் டொலர் இலங்கையில் பதுக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்த வங்கியில் இருந்த 870 மில்லியன் டொலர் பணத்தை அதே விதத்தில் கொள்ளையிட முயற்சிக்கப்பட்டது. ஆனால் அமெரிக்க வங்கி உடனடியாகச் சுதாகரித்துக்கொண்டதால் திருடர்களின் முயற்சி தோல்வியில் முடிந்தது. குறித்த பணத்தை எடுப்பதற்கு பங்களாதேஷிடம் இருந்து கட்டளை பிறப்பிக் கப்பட்டதாக அமெரிக்க வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

பின்னர் அமெரிக்க வங்கி பங்களாதேஷுடன் நேரடியாக தொடர்பு கொண்டதில் அவர்களிடம் இருந்து அறிவுறுத்தல்கள் பெறப்படவில்லை என அறியப்பட்டதை அடுத்து பணப்பரிமாற்றம் முடக்கப்பட்டுள்ளது.

திருட்டு குறித்து சைபர் பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கையில், மிகவும் திட்டமிட்டு உளவு பார்க்கப்பட்டு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்தனர். (த-ரி4)



# யானைகளின் விளையாட்டு போட்டிகள் பாங்கொக்கில்

பாங்கொக், மார்ச் 12

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் யானைகளின் விளையாட்டு நிகழ்வு நடைபெற்று வருகிறது. 4 நாள்கள் நடைபெறும் இந்த நிகழ்வைச் சுற்றுலாப் பயணிகள் பலர் பார்வையிட்டு வருகின்றனர். விலங்குகளைப் பராமரிப்பதற்காக நிதி திரட்டுவதற்காக இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது. வருடாந்த கிங்ஸ் கப் போட்டியில் 18 யானைகள் அவற்றின் யானைப் பாகன்களுடன் விளையாட்டில் ஈடுபட்டுள்ளன.

இந்த வருடம் போலோ விளையாட்டில், தொழில் முறை போலோ விளையாட்டு வீரர்களும் இணைந்துள்ளனர். 14 ஆவது வருடமாக இந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது. 4 ஆயிரம் யானைகளை பராமரிப்பதற்காக இந்தப் போட்டி நடத்தப்பட்டது. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் இந்தப் போட்டி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. விலங்குகளுக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-ரி4)

# ான்மையினரை

# கின்றது ஐ.எஸ்.

## றச்சாட்டு



கடந்த 2 வாரங்களாக, இவை தொடர்பான அழுத்தங்களின் மத்தியில் ஜோன் கெரி செயற்பட்டு வருகிறார். இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்பில் சிறப்பான ஆவணப்படுத்தலிலும், இன அழிப்பு தொடர்பான சட்டபூர்வமான தரப்படுத்தலிலும் ஈடுபட்டுள்ளார். ஜேன் கெரிக்குக் கையளிக்கப்பட்ட ஆவணத்தில், ஈராக்கில் 2003 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரை ஆயிரத்து 131 கிறிஸ்தவர்கள் உயிரிழந்துள்ளனர். 2014 ஆம் ஆண்டு ஐ.நாவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறைந்தது 9 ஆயிரத்து 347 இஸ்லாமியர்கள் உயிரிழந்துள்ளனர். 17 ஆயிரத்து 386 பேர் இது வரை ஐ.எஸ். அமைப்பினரின் தாக்குதல்களால் காயமடைந்துள்ளனர் என குறிப்பிட்டுள்ளது.ஐ.எஸ். அமைப்பின் இன அழிப்புக்கு எதிராக ஈராக், சிரியா, ஏமன் மற்றும் ஏனைய நாடுகளும் ஆதாரங்களைத் திரட்டியுள்ளன. கடந்த மாதம் ஐ.எஸ். அமைப்பின் இன அழிப்புக்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மா ணங்கள் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# 14 தலிபான் போராளிகள் பாகிஸ்தானில் கைதாகினர்

குயெட்டா, மார்ச் 12

பாகிஸ்தானின் குயெட்டா பகுதியில் இடம்பெற்ற திடீர் ரோந்தில் 14 தலிபான்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இராணுவப் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். இவர்களிடம் இருந்து சில பொருள்கள் கைப்பற்றப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

குயெட்டா நகரின் பாஷ்டூனாபாத் பகுதியில் ஏராளமான ஆப்கான் அகதிகள் 3 தசாப்த காலமாக வாழ்ந்து வருகின்றனர். அங்கு ஒரு வளாகத்தில் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாகப் பாகிஸ்தான் பாதுகாப்பு படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து அவர்கள் அங்கு விரைந்து சென்று, அந்த வளாகத்தைச் சுற்றி வளைத்தனர். அங்கிருந்த 14 தலிபான் தீவிரவாதிகளை அவர்கள் கைது செய்தனர். அவர்களைஒரு இரகசிய இடத்துக்குக்கொண்டு சென்று பாதுகாப்புப் படையினர் விசாரித்து வருகின்றனர். கடந்த காலத்திலும் கூட இதே பகுதியில் இருந்து ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-ரி4)


# மரண அறிவித்தல்

மலர்வு
14 . 04 . 1927



உதிர்வு
08 . 03 . 2016

## செல்லையா நடராசா (அப்பலோ நடராசா)

யாழ். புங்குடுதீவு. 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், லண்டன் Southgate ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா 08.03.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், மருதப்பு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தையல் நாயகி அவர்களின் பாசமிகு கணவரும், கண்ணதாசன் (லண்டன்), பிரேமா (சுவிஸ்), லதா (லண்டன்), ரஞ்சி (கனடா), வசந்தி (லண்டன்), லலி (லண்டன்), வனிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற வர்களான முத்துத்தம்பி, இராசம்மா, தர்மலிங்கம், சொர்ணலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரேமலதா (லண்டன்), குகதாசன் (சுவிஸ்), காந்தரூபன் (லண்டன்), கிருஷ்ணகுமார் (கனடா), வாகன் (லண்டன்), விமலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஞ்சீவன் (லண்டன்) அவர்களின் ஆசை மாமாவும், சற்குணம், காலஞ்சென்றவர்களான கிருஸ்ணன், சண்முகலிங்கம், சொர்ணலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிபர்ணா, நித்தியா, சகிதா, கிறிஸ்ரோப், கிருத்தி, சஞ்சிதா, உசாந், அனுஷா, ஜனாத், நதினா, சஞ்சீனா, ஆதிரயன், அட்சிதா, அக்ஷயன், ஆரணியா, அனோஷன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:

காந்தரூபன் (பிரித்தானியா - +447 95622 2044)
வாகன் (பிரித்தானியா - +447 95630 6054)
கண்ணதாசன் (பிரித்தானியா - +447 71268 9755)
லதா (பிரித்தானியா - +442 08361 4447)
வசந்தி (பிரித்தானியா - +442 08361 4447)
லலி (பிரித்தானியா - +442 08361 4447)
பிரேமா (சுவிட்சர்லாந்து - +413 23427 558)
ரஞ்சி (கனடா - +141 67835 861)
வனிதா (கனடா - +164 72965 665)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள்



## சிங்கம்

*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் சிங்க ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள் இன்றும் தொடர்கின்றன)*

கேதுவின் மகம் நட்சத்திரத்தில் 16.11.2016 முதல் 25.7.2017 வரை ராகுபகவான் செல்வதால் பண விடயத்தில் இறுக்கமாக இருங்கள். மின்சாரம், கத்திரிக் கோல், நக வெட்டியை கவனமாக கையாளுங்கள். முன்பின் அறியாதவர்கள் நயமாகப் பேசுகிறார்கள் என்று நம்பி குடும்ப அந்தரங்க விடயங்களையோ, உங்களது சொந்த விடயங்களையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். இக்காலக்கட்டத்தில் மகம் நட்சத்திரக்காரர்கள் முக்கிய விடயங்களை தாமாகவே நேரடியாகச் சென்று முடிப்பது நல்லது.

**மாணவ-மாணவிகளே!**
சமயோசித புத்தியைப் பயன்படுத்துங்கள். மறதி உண்டாகும். தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்ற எண்ணமிருந்தால் மட்டும் போதாது, அதற்கான உழைப்பும் இருக்க வேண்டும். உண்மையான நண்பர்களை உணர்ந்துக் கொள்ளுங்கள். போட்டித் தேர்வுகளில் சற்றே பின்னடைவு ஏற்படும். சிலர் வெளியூர் அல்லது வெளி மாநிலத்தில் விடுதியில் தங்கிப் படிக்க வேண்டி வரும்.

**கன்னிப் பெண்களே!**
பேஸ் புக், டிவிட்டரை கவனமாகப் பயன்படுத்
துங்கள். சிலர் உங்களுடைய பெயருக்கு களங்கம் விளைவிக்க முயற்சிப்பார்கள். கல்யாணம் தள்ளிப் போய் முடியும். பெற்றோரின் அறிவுரைக்கு முக்கியத்துவம் தாருங்கள். எல்லாம் எனக்குத் தெரியும் என்று மெத்தனமாக இருக்க வேண்டாம். மாதவிடாய்க் கோளாறு, ஹார்மோன் பிரச்சினைகள் வந்து செல்லும்.

**அரசியல்வாதிகளே!**
தலைமையைப் பற்றிக் குறை கூறவேண்டாம். சகாக்களிடம் உரிமையாகப் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். கோஷ்டிப் பூசலாலும், எதிர்கட்சியினராலும் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கலைத்துறையினரே!**
உங்கள் படைப்புக்கு சிலர் உரிமை கொண்டாடுவார்கள். உங்களின் புது முயற்சிகள் மூத்த கலைஞர்களின் ஆதரவால் வெற்றியடையும். உங்களைப் பற்றிய வீணான அவதூறுகளால் பதட்டமாவீர்கள்.

**விவசாயிகளே!**
அகலக் கால் வைத்து கடன் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளாதீர்கள். காட்டு வெள்ளாமை வீட்டுக்கு வரும் வரை எதுவும் நிலையில்லை என்பதை மறந்து விடாதீர்கள்.

**வியாபாரிகளே!**
வாழ்க்கையில் ஏற்ற–இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். போட்டிகளைச் சமாளிக்க கடுமையாக உழைக்க வேண்டி வரும். மற்றவர்களின் பேச்சைக் கேட்டு முன்பின் அனுபவமில்லாத தொழிலில் முதலீடுகள் செய்து சிக்கிக் கொள்ள வேண்டாம். கடையை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். வேலையாள்களை விரட்டாதீர்கள்.
அண்டை மாகாண வேலையாள்களை பணியில் அமர்த்தும் போது சிபாரிசு இல்லாமல் வேலையில் சேர்த்துக் கொள்ளாதீர்கள். அரசை எதிர்த்துக் கொள்ளாதீர்கள். அக்கம்–பக்கம் கடைக்காரருடன் சண்டை, சச்சரவுகள் வந்து நீங்கும். பழைய வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்ளுங்கள். பங்குதாரர்களுடன் சச்சரவுகள் வரும். மர வகைகள், ஊதுபத்தி, உணவு, போன்றவற்றில் இலாபமடைவீர்கள். வியாபார விடயமாக வழக்கு, நீதிமன்றம் என செல்லாமல் முடிந்தவரை பேசி தீர்ப்பது நல்லது.

**உத்தியோகத்தர்களே!**
மூத்த அதிகாரிகளைத் திருப்திபடுத்த முடியாமல் திணறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் ஆறுதலடைவீர்கள். ஆனால் எல்லா நேரமும் கண்டிப்பாக பேசாமல் கொஞ்சம் கலகலப்பாகவும் பேசக் கற்றுக்கொள்ளுங்கள். சிலர் தங்களை அறிவாளியாக காட்டிக் கொள்ள, உங்களை மட்டம் தட்டி மேலிடத்தில் சொல்லி வைப்பார்கள். அலுவலகம் சம்பந்தமாக வெளி மாநிலம், அயல் நாடு செல்ல வேண்டிவரும். எதிர்பார்த்த சலுகைகளையும், சம்பளப் பாக்கியையும் போராடிப் பெறுவீர்கள்.

(தொடரும்)

# பெண்மை இன்றி அமையாது உலகு

எஸ்.மல்லிகா

*(பெண்மை இன்றி அமையாது உலகு என்ற தலைப்பில் நேற்று வெளியான ஆக்கத்தின் தொடர்ச்சி*

பெப்ரவரி 28ஆம் திகதியைத் தேசிய பெண்கள் தினமாகக் கொண்டாட முதலில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் பின்னர் டென்மார்க்கின் கொபன்ஹேகன் நகரில் 1910இல் நடந்த சர்வதேச மாநாட் டில் பெண்கள் தினம் கொண்டாடுவது பற்றி விரிவாகப் பேசப்பட்டது. அப்போது சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடும் பல நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த வேண்டுகோளின் படி பல நாடுகள் 1911இல் மீண்டும் விவாதித்தன. முதன் முறையாகச் சர்வதேசப் பெண்கள் தினம் மார்ச் -19ஆம் திகதி கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட பல நாடுகளில் அன்றைய தினம் பிரமாண்டமான பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, பல இலட்சம் பெண்கள் பேரணியில் பங்கேற்றனர்.
அதன்பின்னர் மேற்கத்திய, ஐரோப்பிய நாடுகள் 1913இல் ஒன்றுகூடி, மார்ச்–8ஆம் திகதியைப் பெண்கள் தினமாகக் கொண்டாட முடிவு செய்தன. இதுபற்றி ஐ.நா. சபையில் விவாதிக்கப்பட்டு, சர்வதேசப் பெண்கள் தினத்தை மார்ச்–8ஆம் திகதி கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது. அன்றிலிருந்து மார்ச்–8ஆம் திகதி சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாடப்பட்டுவருகிறது. பெண்கள் தினம் நூற்றாண்டு கடந்துவிட்டாலும் அவர்களுக்கெதிரான வன்முறைகள் இன்னமும் தீரவில்லை.

**பெண்களுக்கு எதிராக வளரும் வன்முறைகள்**
நகையணிந்த நங்கையொருத்தி நள்ளிரவில் தன்னந்தனியாக வீதியில் நடமாடக்கூடிய நாள் மலர்ந்தால் தான், உண்மையில் பெண்களுக்கு விடுதலை கிடைத்துள்ளது எனக் கூறலாம் என்று பேரறிஞர் அண்ணா அன்று சொன்னார்.



ஆனால், வளர்முக நாடுகளில் இது சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது.
பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று பாரதி கண்ட கனவை நனவாக்கிச் சாதனைச் சிகரங்களை எட்டியுள்ள பெண்களை எப்படி அடக்கலாம் என்று சிந்திக்கும் ஆண்கள், அவர்களைப் பாலியல் ரீதியில் பழி வாங்குகின்றனர். இதன் மூலம் அவர்களுக்கு உளநெருக்கீடுகளைக் கொடுக்கின்றனர்.
நாளுக்கு நாள் பெண்களின் அறிவாற்றல், தலைமைத்துவம், பங்கேற்பு என்பன அதிகரித்து வந்தாலும் அவற்றுக்கெதிரான உரிமை மீறல்களும் அதிகரித்துத்தான் வருகின்றன. அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியான உரிமைகள் உலக நாடுகளில் பெண்களுக்குக் குறைந்த வீதமே கிடைக்கின்றன. காரணம், தங்களை விடப் பெண்கள் வளரக்கூடாது என்று சிந்திக்கும் ஆண்களின் வக்கிர எண்ணமே.
பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக ஐ.நா.சபையின் வியன்னா பிரகடனம்– 1993இல் இவ்வாறு கூறுகின்றது. ஒரு பெண்ணினுடைய தனிப்பட்ட அல்லது பொது வாழ்வில் உடல், உளவியல், பாலியல் ரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்துச் செயற்பாடுகளும் அல்லது அச்சுறுத்தல்களும் பெண்களுக் கெதிரான வன் முறைகளாகும் என்கிறது.
இதேவேளை, வன்முறைகளுக்கு உள்ளாகும் பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் அவற்றை வெளி உலகுக்குத் தெரிய கூடாது என்பதற்காக மூடி மறைப் பதையும் அவதானிக்க முடிகிறது. இது அநேகமாகக் கிராமப்புறங்களிலேயே இடம் பெறுகிறது. இதிலும், சிறுமிகளும் படிப்பறிவற்ற நங்கையரும் கர்ப்பிணி களுமே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

**வன்முறைகளை எப்படித் தடுக்கலாம்?**
பெண்கள் மீதான வன்முறைகளை முற்றிலுமாகத் தடுப்பதற்குக் குற்றவாளிகள் இனங்காணப்பட்டுப் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும். ஆனால், சட்டத்தின் ஓட்டைகளுக்குள்ளால் இவர்கள் இலகுவில் தப்பித்து விடுவதையே காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு நழுவிச் சென்று நாட்டில் பல ஈனச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்குப் பல்வேறு கடுமையான தண்டனைகள் கொடுக்கப்பட வேண்டும். மேலும், அதிகார மையங்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அப்போது தான் இது சாத்தியமாகும். ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் அதிக இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அங்கு 49 சத வீதத்தினர் பெண்களாக உள்ளனர். பின்லாந்து, டென்மார்க் முதலான நாடுகளில் பெண்களுக்குத் தனியான இட ஒதுக்கீடு வழங்கப்படா விட்டாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களில் 37 சத வீதத்தினர் பெண்களாக உள்ளனர். இந்நிலை, இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் வரவேண்டும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்வியோடு இணைந்த ஒழுக்கமே மாணவர்களை நல்வழிப்படுத்தும்

தனம்

அரசினால் இலவசமாக வழங்கப்படுகின்ற கல்வி, எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

கல்விக்குப் பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்று நாவலர் கூறினார். இன்றைய காலகட்டத்தில் பாடசாலைகளும், கல்வி நிறுவனங்களும் மாணவரது ஒழுக்கத்தைப் பேணிக் கொள்ள முடியாத நிலை உருவாகி வருகிறது.

இளம் தலைமுறையினரிடம் வன்முறைப்போக்கு, துர்நடத்தை, பெற்றோருக்குக் கட்டுப்படாத அடாவடித்தனம் என்பவை அதிகரித்துக் காணப்படுகின்றன. செல்லிடத்தொலைபேசி, இணையப் பாவனை, தொலைக்காட்சி ஆகியவை மாணவ சமுதாயத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றன.

இதைவிட மாணவர் மத்தியில் போதைப் பொருள் பாவனையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆன்மிகமும், கல்வியும் ஒன்று சேரும்போதுதான், சமுதாயத்தால் அன்பு, அமைதி, ஒழுக்கம், நேர்மை என்பவை நிலைத்து நிற்கும். ஆனால் இன்றைய கல்வி, ஒழுக்க விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்களையும், சான்றிதழ்களையும் சேகரித்துக் கொள்கின்ற மாணவர்கள் ஆன்மிக விழுமியங்கள் சார்ந்த போட்டிகளில் கலந்து கொள்ளத் தவறிவிடுகின்றனர்.

கௌரவமான குடும்பங்களில் பிறந்து, நற்பண்புகளுடன் வளர்க்கப்பட்டு, கல்வி நிலையங்களுக்கு அனுப்பப்படும் பிள்ளைகள்கூட தமது கல்வியை முடித்து பாடசாலையை விட்டு விலகிக் கொள்ளும்போது நல்ல பண்புகளுடன் வெளியேறுவதாகத் தெரியவில்லை.

இந்த நிலை மேலும் மோசமாகிக் கொண்டே செல்கிறது. பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல் என்று பொருள்படும். ஆன்மிகமும், கல்வியும் ஒன்று சேரும்போதுதான், மனித விழுமியங்களும் மனிதப் பெறுமானமும் பேணப்படும். கல்வியானது ஆன்மிகத்துடன் சேர்ந்து வழங்கப்படும்போதுதான், ஒரு மாணவன் முழுமை பெறுகிறான்.

> ” விழுமியம் சார் கல்வியின் ஊடாக எதிர் காலச் சந்ததியினரை நல்லவகையில் வாழ வைப்பதற்கு ஆசிரியர்கள் தமது நடத்தை உடை பாவனைகளில் முன்மாதிரியாகத் திகழ்ந்து நடைமுறையில் காட்டுதல் வேண்டும். கல்விச் செயற்பாட்டுக்காக பயன்படுத்தப்படும் உள்ளீடுகளும் அதன் பெறுபேறாகப் பெறப்படும் வெளியீடுகளும் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு உந்து சக்தியாக விளங்குபவர்கள் பெற்றோர்களும், பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் என்றால் மிகையாகாது.

மாணவ சமுதாயம் பாடசாலையை விட்டு வெளியேறும் போது மனிதத் தன்மையுடன் வெளியேற வேண்டுமென்றால் கல்வியுடன் ஆன்மிக நெறிகளின் வழிநடத்தல்களும் பாடசாலைகளில் இடம் பெற வேண்டும்.

அன்பு, நீதி, கருணை, அகிம்சை, அறம், நன்னடத்தை போன்ற விழுமியங்களினூடாக இளம் சிறார்களின் சிந்தனைகளை மேம்படுத்தி, நல்லதொரு சமுதாயத்தைக்கட்டி எழுப்ப முடியும். எனவே ஆசிரியப் பணியில் ஈடுபடுபவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு அடிப்படைக்கல்வி அறிவை ஊட்டுவதுடன் ஒழுக்கத்தையும் போதிக்க வேண்டும். ஆசிரியர் கட்டளையிடுபவராகவும், கண்டிப்பானவராகவும் மட்டுமிராது, உளவியலாளராகவும், நோய் தீர்க்கும் மருத்துவராகவும் செயற்பட வேண்டும்.

விழுமியம் சார் கல்வியின் ஊடாக எதிர்காலச் சந்ததியினரை நல்லவகையில் வாழ வைப்பதற்கு ஆசிரியர்கள் தமது நடத்தை, உடை பாவனைகளில் முன்மாதிரியாகத் திகழ்ந்து நடைமுறையில் காட்டுதல் வேண்டும். கல்விச்செயற்பாட்டுக்காக பயன்படுத்தப்படும் உள்ளீடுகளும் அதன் பெறுபேறாகப் பெறப்படும் வெளியீடுகளும் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு உந்து சக்தியாக விளங்குபவர்கள் பெற்றோர்களும், பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் என்றால் மிகையாகாது. இவர்கள் கல்வி சார்ந்த விடயங்களிலும், பாடசாலைகளின் சிரமதானப்பணிகளிலும் பங்கேற்பதுடன் ஆலோசனை வழங்குவதிலும் ஈடுபட வேண்டும். ஒரு மாணவன்தனதுபெறுபேறுகளில்பின்னடைவுகாண்கிறான் என்றால், அதுபற்றி ஆராய வேண்டும். ஆசிரியர்களோடு கலந்து பேசி தீர்வு காண்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதனை விடுத்து ஆசிரியர்களை விமர்சிப்பதாலோ, அவர்கள் மீது அவதூறுகள் பேசி அவமரியாதை ஏற்படுத்துவதாலோ பயனொன்றும் இல்லை. எத்தனையோ பாடசாலைகளில் பெற்றோர்களின் சிறந்த பங்களிப்புடன் ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். பாடசாலையும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. இதற்கு உதாரணமாக, கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையைக் கூற முடியும். பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்புடன் இந்தப் பாடசாலை வளர்ச்சிப்பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

மாணவச்செல்வங்கள் எமது நாட்டின் எதிர்காலத் தலைவர்கள். அவர்களின் கல்வி மேம்படுவதற்கு பெற்றோர்களின் பங்களிப்பு பாடசாலைகளுக்கு இருக்க வேண்டும் என்பதே யதார்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தியாவின் மந்திரக் கைக்குட்டை

தியாவுக்குச் சின்ன வயதில் இருந்தே பறவைகள் என்றால் அதிகம் பிடிக்கும். குட்டிக் குட்டிப் பறவைகள் கொஞ்சிக் கொஞ்சிக் கூவுகிற குரல் கேட்டால், அவளது மனம் இறக்கை கட்டிப் பறக்கக் கிளம்பும். அவளது வீட்டு வாசலுக்கு முன்னால் கூரையில் நிறைய மரக்கூடுகள் செய்து தொங்க விட்டிருந்தார்கள். கரிச்சான் குருவி, தவிட்டுக் குருவி, வண்ணாத்துக் குருவி, கதிர் குருவி என்று பல்வேறு வகைக் குருவிகள் அந்தக் கூடுகளைத் தேடி வந்து தங்கி விட்டுப் போகும்.

அன்றைக்கு ஒரு நாள் தியாவுக்கு ஓர் ஆசை வந்தது. அவள் அப்பாவின் முன் போய் நின்றாள். "அப்பா, அப்பா! எனக்கு வண்ணத்துப் பூச்சிகளை வளர்க்க விருப்பமாக இருக்கிறது. வாங்கித் தருவீர்களா?" என்று வாய் திறந்து கேட்டாள். அவரும் பதில் சொல்லத் தெரியாமல் திகைத் துப் போனார். வண்ணத்துப் பூச்சியின் பரிணா மம் தெரியாமல் அதை வளர்க்க விரும்புகிறாள் என நினைத்தார் தியாவோட அப்பா.

''வண்ணத்துப் பூச்சியின் முட்டைகளை விலைக்கு வாங்கலாம். ஆனால் அதுக்கு முன்னால நம்மிடம் பூந்தேன் செடிகள் தோட்டம் வேண்டும்.. நகரச் சூழலில் தோட்டம் அமைக்கிறது மிகக் கஷ்டம்"என்று சமாதானம் செய்ய முயற்சித்தார்.

அவளுக்கு, கண்கள் இரண்டிலிருந்தும் பொங்கி அழுகை வந்தது. அழுதுகொண்டு அம்மா மடியில போய் சாய்ந்து உட்கார்ந்தாள்.

அழாதே தியா! நாளைக்கு நாம் நர்சரிக்குப் போய் பூந்தேன் செடிகளை வாங்கிக் கொண்டு வரலாம். அவைகளைத் தொட்டியில வளர்க்கலாம். செடிகள் பூ பூத்ததும் வண்ணத்துப் பூச்சிகள் பூக்களைத் தேடிப் பறந்து வரும்.. இப்போது ஒரு வாய் சாப்பிடு என்று சொல்லி தியாவுக்கு சாப்பாடு ஊட்டிவிட்டார்.

அவள் அழுதுகொண்டு இருந்ததால் ஒரு கைக்குட்டைய வைத்து கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டார். பிறகு அவளைத் தூங்க வைத்தார். அந்தக் கைக்குட்டையை கட்டிலில் வைத்து விட்டுப் போய் விட்டார். தியா, கொஞ்சம் கொஞ்சமாக அழுகையை நிறுத்தினாள். கண்களைக் கசக்கி விட்டுத் தூங்கினாள்.

நடு இரவு இருக்கும். நல்ல தூக்க நேரத்தில தியாவோட கன்னத்தில் யாரோ தொட்டுத் தொட்டுப் பார்த்தார்கள். தியா கண் விழித்துப் பார்த்தாள். கண்ணுக்கு முன்னாடி ஒரு அதிசயம். உடம்பு சிலிர்த்துப் போய்விட்டது. அவளின் இரண்டு உள்ளங்கையையும் விரித்து வைத்த மாதிரி ஒரு வண்ணத்துப்பூச்சி கன்னத்தில் உட்கார்ந்திருந்தது.

"என்னோடு படுக்கை அறைக்குள் நீ எப்படி வந்தாய்?" என்றுகேள்வி கேட்பதற்குள், வா... வெளியே போகலாம்" என்று வெளியில் கூப்பிட்டது. ஆனா, தியா விளையாட்டுச் பொருள்கள் நிறைந்திருந்த அறைக்குக் கூட்டிக்கொண்டு போனாள். மறுநாள் விடியக் காலை வரையில் இரண்டு பேரும் மகிழ்ச்சியாக விளையாடினார்கள்.

வண்ணத்துப் பூச்சி தனது கதையெல்லாம் சொல்லியது. பொழுது விடிய கொஞ்ச நேரம் இருந்தது. இறக்கை இரண்டையும் மடித்து வணக்கம் சொல்லி விட்டுப் பறந்து போனது. . ''பூந்தேன் செடிகள் முளைத்து வந்ததும் வருகிறேன்" என்று சொல்லி விட்டுச் சென்றது.

அடுத்த நாள், தியாவுக்கு சளி பிடித்திருந்தது. முதல்நாள் மாலை தேம்பித் தேம்பி அழுததே அதற்கான காரணம். மூக்கைத் துடைப்பதற்காக கையில் வேறு ஒரு கைக்குட் டையை அவனது அம்மா கொடுத்தார். அந்த கைக் குட்டையைத் தனது நெஞ்சுக்கு மேல் போட்டு தியா தூங்கினாள். அன்றைக்கு இரவு ஒரு கோழிக்குஞ்சு அவளின் நெஞ்சில் ஏறி விளையாடிக் கொண்டு போனது.

இன்னொரு நாள், பொழுது சாய்ந்த பின்னர் தியா முன்னால் பச்சைக் கிளி ஒன்று உயிரோடு வந்தது.. தியாவின் பாட்டி, அவளுக்குச் சொல்லிக் கொடுத்த 'சிவப்பு மூக்கழகி' பறவைகள் எங்கிருந்து வந்தன என்று யோசிக்க ஆரம்பித்தாள். மூளையைக் குழப்பிப் பார்த்ததுதான் மிச்சம். விடை கிடைக்கவில்லை யோசித்துக் கொண்டே இருந்தாள்.

தியா மனதில் நெருப்பு பத்தினமாதிரி ஒரு விடை கிடைத்தது. உடனே ஓடிப்போய் கொடியில் காயப்போட்ட கைக்குட்டைகளைக் கூர்ந்து கவனித்தாள்.

பல்வேறு நிறங்களில் இருந்த கைக்குட்டைகளில் , அம்மா தைத்துத் தந்த பறவைகளின் உருவம் பொறித்த கைக்குட்டைகள் தொலையாமல்பத்திரமாக இருந்தன. இரவு நேரம் உயிருடன் வந்த பறவைகள் மறுநாள் காலையில் மறைந்து போன உண்மை அவளுக்கு ஓரளவு புரிய ஆரம்பித்தது.

## விடுகதைகள்

1) குண்டு முழி ராசாவுக்கு குடலெல்லாம் பல். அது என்ன?
2) ஊசி நுழையாத கிணற்றில் ஒரு ஆழாக்கு தண்ணீர். அது என்ன?
3) உயரப் பறக்கும். ஊன்றுகோலில் நிற்கும். அது என்ன?
4) நடைக்கு உவமை, நளனின் தூதுவன். அது என்ன?
5) மூடிய அரங்குக்குள் முத்துச் சிப்பிகள். அது என்ன?
6) திரவமாகப் பிறந்தான். புகையாய் மறைந்தான். அது என்ன?
7) இருட்டு வீட்டில் முரட்டுச் சிப்பாய். அது என்ன?
8) பகலில் துயிலுவான், இரவில் அலறுவான். அது என்ன?
9) பாடத் தெரிந்தவனுக்கு ஆடத் தெரியாது. ஆடத்தெரிந்தவனுக்குப் பாடத் தெரியாது. அது என்ன?
10) பதுக்கி வைத்த முத்துக்கள் எங்கே? பவள வாய் திறந்து பார்ப்போமா? அது என்ன?

### விடைகள்

1) மாதுளம்பழம்
2) இளநீர்
3) கொடி
4) அன்னம்
5) வாய், பற்கள்
6) பெட்ரோல்
7) பூட்டு
8) ஆந்தை
9) குயில், மயில்
10) பற்கள்

# வரலாற்றில் இன்றைய தினம்

1868 – இன்றைய லெசோதோ நாடாகிய பவுஸ்ரொலாந்தை ஐக்கிய ராச்சியம் தன்னுடன் இணைத்துக் கொண்டது.
1881 – உலகின் முதலாவது கறுப்பின சர்வதேச உதை பந்தாட்ட வீரராகவும், அணித் தலைவராகவும் அன்றூ வட்சன் ஸ்கொட்லாந்தில் அறிமுகம்.
1913 – ஆஸ்திரேலியாவின் எதிர்காலத் தலைநகராக கன்பரா பெயரிடப்பட்டது.
1918 – 215 ஆண்டுகளாகத் தலைநகராக இருந்த சென் பீற்றர்ஸ்பேக்குக்கு பதிலாக மொஸ்கோ மீண்டும் ரஷ்யத் தலைநகரானது.
1922 – ஆர்மேனியா, ஜோர்ஜியா மற்றும் அசெபர்ஜான் இணைந்து சோசலிஸ்ட் பெடரல் சோவியத் உருவாக்கம்.
1928 – கலிபோர்ணியாவில் சென்.பிரான்ஸிஸ் அணை உடைப்பெடுத்ததால் வெள்ளத்தில் சிக்கி 600 பேர் சாவு.
1930 – உப்பு மீதான பிரித்தானியாவின் ஏகபோக உரிமையை எதிர்த்து மகாத்மாகாந்தி 200 மைல் பாத யாத்திரையை ஆரம்பித்தார்.
1938 – ஒஸ்ரியாவை ஆக்கிரமித்து அங்கு நிலை கொண்டது ஜேர்மனி.
1942 – ஜப்பானிய முடியாட்சியிடம் நட்பு நாடுகள் சரணடைந்ததையடுத்து ஜாவாப்போர் முடிவுக்கு வந்தது.
1967 – இந்தோனேஷிய பதில் ஜனாதிபதியாக சுகார்டோ பதவியேற்றார்.
1968 – ஐக்கிய ராச்சியத்திலிருந்து மொறீஸியஸ் சுதந்திரம் பெற்றது.
1992 – பொதுநலவாய அணியில் உறுப்பு நாடாக உள்ள அதேவேளை மக்கள் குடியரசாகியது மொறீஸியஸ்.
1993 – இந்திய மும்பை தொடர் குண்டுவெடிப்பில் 300 பேர் வரை சாவு. நூற்றுக் கணக்கானோர் காயம்.
1993 – அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாகவும், தமது அணுப் பிரதேசங்களைப் பரிசோதிக்க அனுமதிக்க முடியாதெனவும் வடகொரியா தெரிவிப்பு.
1999 – முன்னைய வோர்ஷோ ஒப்பந்த உறுப்பினர்களான செக் குடியரசு, ஹங்கேரி மற்றும் போலந்து நேட்டோவில் இணைவு.
2011 – ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக புகுஷிமா டைச்சிமின் அணு உலை உருகி வெடித்ததில் கதிர்வீச்சுப் பரவியது.

# வர்ணம் தீட்டுவோம்.. வாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவிக்கு ஒரு மடல்

**பிரியமுள்ள மாணவி தமிழரசிக்கு,**

இறைவனருளால் நானிங்கு நலமாயுள்ளேன். உவ்விடம் நீயும் நலமாக வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

நீ. உந்தன் அன்புக் கரங்களால் வரைந்த கடிதத்தின் மூலம் யாவும் அறிந்து கொண்டேன். பதில் எழுதத் தாமதமானதற்காக வருந்துகின்றேன்.

உனது அன்பிற்குரிய நண்பி தமிழ்நிலாவின் பெற்றோர் தினமும் வீட்டில் கைகலப்பில் ஈடுபடுவதால், அவள் மனமுடைந்து நிற்கின்றாள் என எழுதியிருந்தாய். அவளது தந்தை வீட்டிலிருந்து வெளியேறி, தனியே வாழ்ந்து கொண்டு மணநீக்கத்திற்குச் சம்மதிக்கும்படி தாயை வற்புறுத்துவதாகவும் எழுதியிருந்தாய்.

தமிழ்நிலாவின் வீட்டில் மட்டுமல்ல, இன்று பல வீடுகளில் இவ்வாறான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. ஒருவரையொருவர் மனதார விரும்பித் திருமணபந்தத்தில் இணைந்தவர்கள், சில வருடங்களில் எதிரும் புதிருமாக நின்று ஆர்ப்பரிக்கின்றார்கள். இன்று தமது அன்புக் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய அக்கறை எதுவுமின்றிச் சந்தேகம் என்ற பேய் பின்தொடர நீதி மன்றம் வரை செல்கின்றார்கள்.

தங்களுடைய பிரச்சினைகளை, நெருக்கீடுகளை இருவரும் மனம் விட்டுப் பேசி இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பும் கடமையும் கூட. அதை விடுத்து ஒருவர் மீது ஒருவர் குற்றங் குறைகளை அடுக்கி குழந்தைகளின் முன்னாலேயே கைகலப்பில் ஈடுபடுவதும், வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதும் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடாது.

என் செல்லமே! தமிழரசி. நீயும் சிறு பெண்ணல்ல. விவரம் தெரிந்தவள். ஒவ்வொருவரின் வாழ்க்கையிலிருந்தும் பல விடயங்களை நீ கற்றுக் கொண்டு வருகிறாய்.

இன்று சிதைந்த குடும்பங்களில் வாழ்கின்ற பிள்ளைகள் அனுபவிக்கின்ற துன்பங்களில் பல, வெளியே சொல்ல முடியாதவைகளாக இருக்கின்றன.

தாய் ஒரு புறமும், தந்தை ஒரு புறமும் நின்று கொண்டு தத்தமது செயல்களுக்குக் காரணம் கற்பிக்கிறார்கள். பிள்ளைகள் நடுவில் நின்று நெருக்கீடுகளுக்கு முகம்கொடுப்பதைப்பற்றி அவர்கள் எள்ளளவேனும் சிந்திப்பதாக இல்லை. தங்களது செயல்களினால் தம் அன்பிற்குரிய பிள்ளைகளது உளநலம் பாதிப்படைவது பற்றிக்கூட அவர்கள் கவலை கொள்வதில்லை.

நல்லதொரு சமுதாயம் உருவாக வேண்டும் என்று நாளும் பொழுதும் சிந்திக்கின்ற சிலர், சமூகம் இவ்வாறு தறிகெட்டு தடுமாறிச் செல்வது கண்டு வேதனையடைகின்றனர்.

என் அன்பிற்குரிய மாணவியே! தமிழ் நிலாவுக்குஆறுதல் கூறுவாயாக. இன்று இவளைப் போல பல நிலாக்கள் எம்முடன் உலா வருகின்றார்கள்.

இவளின் பெற்றோர் விரைவில் ஒன்று சேர்ந்து பிள்ளைகளுடன் அன்பாக வாழ இறைவனைப்பிரார்த்திக்கின்றேன். இவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுவதற்காக விரைவில் உன் வீட்டுக்கு வருவேன். எப்போது வருவது சாதகமாக அமையும் என்பதைத் தெரியப்படுத்திவிடு.

உனது நண்பிகளையும், பெற்றோரையும், சகோதரர்களையும் அன்புடன் விசாரித்ததாகக் கூறிவிடு. ஆசீர்வாதத்துடன் இம்மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் மறுமடலில் சந்திப்போம்.

பிரியமுள்ள ஆசிரியை,
சி.கிருஷ்ணவேணி.

# ஜெபம் ஜெயம் தரும்




என்ன உறங்கிக் கொண்டா இருக்கிறீர்கள்? சோதனைக்குட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள். (லூக்கா 22:46)

இறை யேசுவின் பாடுகளை நினைவு கூரும் இந்தத் தவக் காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் மூன்று விடயங்களை மையமாகக் கருத்திற் கொள்கின்றோம். அவை செபம், தபம், தான தர்மம் என்பவையாகும். இதில் செபம் என்பது நாம் இறைவனிடம் உரையாடுவது ஆகும். அன்று ஜேசு ஒலிவ் மலையில் இறைவனை நோக்கிச் செபித்தார் என திருவிவிலியத்தில் லூக்கா நற்செய்தியாளர் (லூக்கா 22:39) கூறுகிறார். நாம் ஜெபம் பண்ணும் ஒவ்வொரு நொடியும் இறைவன் எமது அருகில் வருகிறார். அதாவது எங்கே இருவர்அல்லது மூவர் கூடி செபம் பண்ணுகிறீர்களோ அங்கே நான் இருப்பேன் என்கிறார் ஜேசு. நாம் பிறந்தது முதல் இன்று வரை எத்தனை முறை குடும்பங்களாக ஒன்று கூடி செபித்துள்ளோம் என, சற்று எம் வாழ்க்கையை மீளாய்வு செய்வோம். இன்று இந்த நவீன உலகில் குடும்ப செபம் என்பது அருமையாகி நெகிழ்ச்சியற்றுக் காணப்படுகிறது. பெற்றோர்கள் நாடகமும், பிள்ளைகள் திரைப்படமும் பார்ப்பதுமே இன்று நிகழ்கிறது. வீட்டில் ஒன்று கூடி செபம் செய்ய நேரம் இல்லை யென நேரம் தேடும் சமுதாயம் தான் காணப்படுகிறது. இந்த வாழ்க்கையை இன்றோடு நாம் மாற்றுவோம். எமது வாழ்க்கையை செபத்தினால் செயற்படுத்துவோம். ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர்கள், பிள்ளைகள் என அனைவரும் ஒன்று கூடி சிலமணிநேரம் செபம் பண்ணுவோம். இதுவரை நாம் வாழ்ந்த தவக்காலத்துக்கும் இத்தவக்காலத்துக்கும் இடையே வேறுபாட்டை உணர்ந்து, செபத்தினால் நிறைந்த தவக்காலமாய் மாற்றி மனம் திருந்தி மன்னித்து, மன்னிப்புப் பெற்றுத் தவக்கால நிறைவில் பாவ வாழ்வில் இருந்து இயேசுவோடு உயிர்த்தெழுவோம். செபத்தினால் நிறைந்த வாழ்க்கையை வாழ முயற்சிப்போம்.

செபிப்போம்; இறைவனில் ஒன்றித்திருப்போம்

ஜோ. றோய், திருவுளப்பணியாளர் சபை,
கொழும்புத்துறை.

# போரில் நடந்த உண்மைகளை அம்பலமாக்கும் பொன்சேகா

உண்மையை நீண்டகாலம் மூடி மறைக்க முடியாது. ஒரு நாள் அது மேல் எழவே செய்யும். அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை இதனையே பறைசாற்றுகிறது. சரத் பொன்சேகா தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி அமைச்சரான பின்னர் முதல் தடவையாக நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். எதிர்பார்க்கப்பட்டது போன்று அவரது உரை மிகவும் காரசாரமாகவே இருந்தது.

சரத் பொன்சேகா விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்நின்று நடத்தியவர். போர் முடிவுக்கு வந்தபின்பு ராஜபக்ச ஆட்சியாளர்களுடன் முரண்பட்டவர். அதனால் அவரிடமிருந்து எவ்வளவோ விடயங்கள் எதிர்பார்க்கப்பட்டன. எதிர்பார்க்கப்பட்டது போன்று பல விடங்களை அம்பலப்படுத்தியிருக்கிறார் சரத் பொன்சேகா. இவர் தெரிவித்துள்ள விடயங்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படவேண்டும்.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இவர் ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறப்பதற்கு முன்பதாகவே போர் முடிந்துவிட்டதாக மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் அறிவித்தார். போர் முடிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்ட 2009 மே மாதம் 19ஆம் திகதி அன்றும் பிரபாகரன் உயிருடனேயே இருந்தார்.

போர் உக்கிரமடைந்தபோது ஆயுதங்கள் சீனாவிடமிருந்து கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும் பல மோசடிகள் போரைக் காரணம் காட்டி இடம்பெற்றுள்ளன.

2005, 2010 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போதும் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. 2005 ஜனாதிபதித் தேர்தலின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குப் பணம் வழங்கி ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிப்பதற்கு மகிந்த செயற்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் கடற்படைக்கு கப்பல்களை மலேசியாவில் இருந்து கொள்வனவு செய்வதற்காக பசில் ராஜபக்சவால் 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன தோற்றிருந்தால் அவரைப் பழிவாங்கும் விதத்தில்சிறையில்அடைக்கத்திட்டமிட்டிருந்தார்கள்.

2 வருடங்கள் 9 மாதங்களாக சட்ட திட்டங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வந்த போரில் இறுதித் தருணத்தில் சிக்கலை ஏற்படுத்தி போர்க் குற்றங்கள் தொடர்பான விமர்சனங்கள் எழுவதற்கான நிலைமையை ஏற்படுத்தினார்கள்.

இராணுவம் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள், ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.




ஒரு டொலர் களவாடியிருந்தாலும் வயிற்றை வெட்டிக் கொள்வதாக மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார். ஒரு டொலர் அல்ல 90 மில்லியன் ரூபாவைக் களவாடியுள்ளனர். ரடா நிறுவனம் ஊடாக பணம் எமில் காந்தனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுனாமி நிதியில் ராஜபக்ச மோசடி செய்திருந்தார். அவரை விடுதலை செய்தது உதவிக்கே என எனது தேர்தல் மேடைகளில் சரத் என் சில்வா பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

137 கிலோ கிராம் தங்கம் இறுதிப் போரில் பெறப்பட்டதாகவே பதிவு உண்டு. அது தவறு. இறுதிப் போர் நிறைவடைந்த பின்னர் 320 கிலோ கிராம் தங்கத்தை நான் அனுப்பியிருந்தேன். இரு வாரங்களில் நான் களத்தில் இருந்து விலகியிருந்த நிலையில் 400 முதல் 500 வரையான கிலோ கிராம் தங்கம் மீட்கப்பட்டிருந்தது.

லசந்த, தாஜுதீன், ரவிராஜ், எக்னெலிகொட ஆகியவர்களின் மரணங்கள் ஒரு தனி நபருடனேயே தொடர்புபட்டுள்ளன. குழு ஒன்றினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்றைய ஆட்சியாளர்களுக்குத் தெரியாமல் எவ்விதமான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருக்க முடியாது.

போதுமான ஆதாரங்கள் இல்லாமல் பொன்சேகா இப்படியான குற்றச்சாட்டுக்களை வெளியிட முடியாது. ஆகவே அரசு இது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி உண்மையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிரிகளை இனம் கண்டு ஒதுங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பு மூலம் வருமானம் அதிகரிக்கும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பர். சீரான ஓய்வு, உடல்நலம் காக்க உதவும்.

**இடபம்:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். குடும்ப விவகாரத்தில் சுமுகமான தீர்வு கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் செயல் கண்டு பெருமைப்படுவர்..

**மிதுனம்:** பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**கடகம்:** பேச்சு, செயலில் தயக்கம் உண்டாகலாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். இயந்திரப் பணியாளர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. பெண்கள், ஆடம்பர எண்ணத்தைக் கைவிடுவது நல்லது.

**சிங்கம்:** வெளி வட்டாரத் தொடர்பு விரிவடையும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாரர்க விருக்கும். உறவினர் வருகையால் குடும்பச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**கன்னி:** நண்பர்கள், உங்களிடம் உதவி பெற முயல்வர். தொழில், வியாபாரத்தில், புதிய சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**துலாம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வாகனப் பயணத்தால் மகிழ்ச்சி உண்டாகும்.

**விருச்சிகம்:** குடும்பப் பிரச்சினையைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். கடின உழைப்பால் தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராகும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். விலையுயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளவும்.

**தனுசு:** நற்செயலைப் பிறர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும். பெண்களுக்கு சகோதரர்களால் உதவியுண்டு.

**மகரம்:** மனதில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து மூலம் மேலதிக வருமானம் கிடைக்கும். உறவினர் வீட்டுச் சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** குடும்பப் பெருமையை நிலைநாட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடையை முறியடிப்பீர்கள். இலாபம் உயரும். பிறர் பொருளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

**மீனம்:** மதி நுட்பத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சமூக அந்தஸ்தில் உயர்வு காண்பீர்கள். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

## கார்த்திக்கு ஜோடியாக சாய் பல்லவி



"ஓகே கண்மணி" படத்துக்குப் பிறகு, மணிரத்னம் இயக்கும் படத்தில் கார்த்தி ஹீரோவாக நடிக்கிறார். அவரது ஜோடியாக மலையாள ''பிரேமம்'' படத்தில் நடித்துள்ள சாய் பல்லவி ஒப்பந்தமாகி உள்ளார். கார்த்தி "காஸ்மோரா" படத்திலும், சாய் பல்லவி மலையாளப் படத்திலும் பிசியாக இருப்பதால், இதன் படப்பிடிப்பு ஜூலை அல்லது ஓகஸ்ட் மாதம் தொடங்குகிறது. அடுத்த வருட ஆரம்பத்தில்படத்தை வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.

''கடந்த வருடம் ஒரு கதையை உருவாக்கியிருந்தார் மணிரத்னம். அது இரண்டு ஹீரோ கதை. இப்போது அதைத் தூர வைத்துவிட்டுப் புதிய கதையை உருவாக்கி இருக்கிறார். இதுவும் ஜாலியான, இளமையான கதை" என்று படக்குழு தெரிவித்தது.

## கொஞ்சம் சிரிங்க...



நாய்க்கு
கோபம் வந்தால் என்ன
செய்யும் ?
நாய்கிட்ட தான் கேட்கணும்
அதாண்டா கேட்கிறேன் பதில்
சொல்லு!!

ஏண்டா
உன் மனைவி கரண்டி,
தட்டு எல்லாம் தூக்கி வீசிறா?
நான்தான் சொன்னேனே,
அவளுக்கு "வீசிங்" ப்ராப்ளம்
இருக்குன்னு.!!"

எறும்பு
நினைச்சா எவர்
காதையும் கடிக்கலாம்,
எவர் தான் நினைச்சாலும்
எறும்பின் காதைக் கடிக்க
முடியுமா?



என்னங்க
நமக்குக் கல்யாணம்
பண்ணி வைச்சாரே, நம்ம
சுந்தரம்---
அவர் காலமாய்ட்டாராம்----
ம்---ம்---பண்ணின பாபம்
சும்மா விடுமா?

நேற்று
ஒரு கல்யாணத்
துக்குப் போயிருந்
தேன், ஜோடின்னா அப்படி
ஒரு ஜோடி, என்னோட வாழ்க்
கையில பார்த்ததேயில்லை.
அப்படி ஒரு அழகு.
அப்புறம்
அப்புறம் என்ன........
காலிலே மாட்டிட்டு வந்
திட்டேன் !!

வாங்க...
வாங்க, இந்தத் துணி
கிழியவே கிழியாது ....
வாங்கிப் பாருங்க.
அப்போ எனக்கு இரண்டு
மீற்றர் துணி வேணுமே ....
எப்படிக் கிழிப்பே ?

நம்ம
ரீச்சருக்கு என்ன ஆச்சு ?
ஏன் கேக்கறே
திருக்குறளை போர்டுலே எழுதிட்டு,
அவங்களே இதை எழுதினது
யார்னு கேக்கறாங்க !!






## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 3 | | | 7 | |
| 2 | | | | | | 6 | | 3 |
| | | | | | | | 5 | |
| 1 | | | | | | | | 7 |
| | 9 | | 3 | 6 | | 5 | | |
| | 8 | | 9 | | 2 | | | |
| | 6 | 2 | | 1 | 7 | | | |
| 7 | | 8 | | | | | | 6 |
| | | | | | | | 1 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 1 | 4 | 6 | 8 | 2 | 3 | 5 |
| 6 | 2 | 4 | 1 | 5 | 3 | 9 | 8 | 7 |
| 8 | 5 | 3 | 9 | 2 | 7 | 6 | 4 | 1 |
| 5 | 3 | 8 | 2 | 9 | 1 | 4 | 7 | 6 |
| 4 | 9 | 2 | 8 | 7 | 6 | 1 | 5 | 3 |
| 7 | 1 | 6 | 5 | 3 | 4 | 8 | 2 | 9 |
| 2 | 6 | 5 | 3 | 4 | 9 | 7 | 1 | 8 |
| 3 | 8 | 7 | 6 | 1 | 2 | 5 | 9 | 4 |
| 1 | 4 | 9 | 7 | 8 | 5 | 3 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நாளை**
மாசி-30
ஞாயிற்றுக்கிழமை 13.03.2016
திதி: பஞ்சமி மு.இ.08.55 வரை
நட்சத்திரம்: பரணி
பி.ப.04.15 வரை
ராகுகாலம்: 04.51-06.21 வரை
சுபநேரம்: 09.21-10.51 வரை
கார்த்திகை விரதம்

## இரண்டு நிறப்புடைவை



இது புதுசு

பிளேன் டபிள் கலர் புடைவை அறிமுகமாகியுள்ளது. தங்க நிற ரிபன் போடரில் மிகவும் நாகரிகமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 3000 ரூபாவில் இருந்து 3500 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

## பருப்பை வேக வைக்கும்போது

- துவரம் பருப்பை வேக வைக்கும் போது, சிறிதளவு வெந்தயத்தையும் சேர்த்தால், சாம்பார், இரவு வரை கெடாமல் இருக்கும்.
- சாம்பாருக்கு பருப்பு வேக வைக்கும்போது, அதில், ஒரு தேக்கரண்டி சமையல் எண்ணெய் ஊற்றி வேகவைத்தால், பொங்கி அடுப்பில் வழியாது.
- பருப்பு வேகும்போது செத்தல் மிளகாயைக் கிள்ளிப் போட்டால் எளிதாக வெந்து விடும்.
- பாத்திரத்தில் பருப்பை வேக வைக்கும் முன்னரே மஞ்சள் தூளைப் போட வேண்டாம். மஞ்சள் தூள் போடுவதால், பருப்பு கடினமாகி வேக அதிக நேரம் எடுத்துக் கொள்ளும்.

## இறால் பொரியல்



**தேவையானவை:**
இறால் – 500 கிராம்
வெங்காயம் – 100 கிராம்
இஞ்சி – 2 செ.மீ.
பூண்டு – 8 பல்
காய்ந்த மிளகாய் – 6
தேங்காய் – முக்கால் மூடி
எண்ணெய் – 3 மேசைக்கரண்டி
கடுகு – தாளிக்க

**தயாரிக்கும் முறை:**
- இஞ்சி, பூண்டு, மிளகாயைச் சேர்த்து நன்கு அரைத்து உப்பைக் கலந்து இறாலுடன் சேரத்தக்கதாக பிரட்டியெடுத்து வைக்கவும்.
- தேங்காயைச் சிறு துண்டுகளாக்கி இதனுடன் சேர்க்கவும். வெங்காயத்தை மெல்லியதாக வெட்டிக் கொள்ளவும்.
- சட்டியில் எண்ணெய் காய்ந்ததும் கடுகு போட்டு தாளித்து, வெங்காயத்தைக் கொட்டி வதக்கவும்.
- வெங்காயம் சற்றே நிறம் மாறியதும் இறாலைப் போட்டு வதக்கவும். இறாலும் சிவந்த நிறத்துக்கு மாறும்.
- பின்னர், சிறிது தண்ணீர் விட்டு இறாலை வேகவிட்டு இறக்கவும்.
- தேவைப்பட்டால் கடைசியாக, இரண்டு தக்காளிப் பழங்களைச் சிறு துண்டுகளாக வெட்டிப் போட்டு வதக்கி இறக்கலாம்.

## மரக்கறி விலை நிலைவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 40 | 40 | 40 | 30 | 40 | 20 | 25 |
| கத்தரி | 100 | 90 | 90 | 100 | 100 | 100 | 80 | 75 |
| கரட் | 100 | 120 | 80 | 120 | 120 | 160 | 100 | 130 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 40 | 60 | 35 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 60 | 80 | 60 | 60 | 40 | 100 |
| பாகல் | 100 | 120 | 80 | 120 | 80 | 120 | 100 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 60 | 60 | 120 | 60 | 60 |
| பெ.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 80 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 60 | 50 | 90 | 70 | 60 |
| பூசணி | 60 | 50 | 40 | 50 | 40 | 60 | 35 | 40 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 | 30 | 40 | 20 | 30 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 50 | 40 | 40 | 45 | 30 |
| கீரை | 40 | 50 | 30 | 20 | 30 | 30 | 15 | 25 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 180 | 160 | 160 | 140 | 120 | 200 | 130 | 180 |
| புடோல் | 50 | 80 | 50 | 40 | 50 | 60 | 20 | 40 |
| கோவா | 50 | 60 | 50 | 50 | 40 | 60 | 40 | 40 |
| வெண்டி | 80 | 50 | 50 | 70 | 100 | 80 | 70 | 80 |
| போஞ்சி | 100 | 120 | 80 | 120 | 120 | 120 | 40 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 140 | 120 | 160 | 70 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 40 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 40 | 80 | 80 | 70 | 80 | 60 | 120 |
| தேசிக்காய் | 150 | 50 | 100 | 60 | 60 | 40 | 90 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 120 | 140 | 160 | 100 | 130 |
| இராசவள்ளி | 150 | 150 | 140 | 120 | 140 | 140 | 100 | 70 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 300 | 300 | 400 | 400 | 300 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 05 | – | 3 | 03 |


## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 100 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 500 | 400 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 550 | 500 | 600 | 800 | 600 | 600 | 550 |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 500 | 300 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 400 | 600 | 350 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 300 | 400 | 400 | 400 | 300 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 400 | – | 300 |
| ஓரா | 350 | 350 | – | – | 400 | – | – |
| திரளி | 200 | 200 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 150 | 200 | – | 250 | 300 | – | – |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 120 | 100 | 80 |
| ஒட்டி | 250 | 200 | 150 | 250 | 300 | – | 150 |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 300 | 300 | – |
| மதனம் | 150 | 200 | 180 | 300 | 300 | 400 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 100 | 200 | 300 | 300 | 400 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## நான்கு வர்ணங்களில் அறிமுகமாகும் எச்.ரி.சி 10

கைபேசிச் சந்தையில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ள முன்னணி நிறுவனமான எச்.ரி.சி, எச்.ரி.சி 10 எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

இந்தக் கைபேசி, 5.1 அங்குல அளவு மற்றும் 2560 x 1440 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், Qualcomm Snapdragon 820 Processor, பிரதான நினைவகமாக 4GB RAM என்பவற்றையும் கொண்டுள்ளது.

இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

இந்தக் கைபேசி, Carbon Gray, Glacier Silver உடன் கூடிய White Face, Glacier Silver உடன் கூடிய Black Face மற்றும் Topaz Gold ஆகிய நிறங்களில் அறிமுகம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஐபோனின் செயற்பாட்டு வேகத்தை அதிகரிக்க வழி

டெக்ஸ்ரொப் கணினிகளை விடவும் பல அம்சங்களை உள்ளடக்கியுள்ள ஐபோன்களுக்கு இன்று மக்கள் மத்தியில் வரவேற்பு அதிகமாக இருக்கின்றது.

எனினும் பல சமயங்களில் அவற்றின் செயற்பாட்டு வேகம் குறைவடைகின்றது. இதனால் பயனர்கள் சிரமப்பட வேண்டி இருக்கின்றது.

இதனைத் தவிர்ப்பதற்கு பல்வேறு வழிகள் கையாளப்படுகின்ற போதிலும், இந்தப் பிரச்சினைக்கு பிரதான காரணம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஐபோன்களில் பயன்படுத்தப்படும் அப்பிளிக்கேசன்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அனிமேன்களே அவற்றின் செயற்பாட்டை மந்தப்படுத்துகின்றது என்பதாகும்.

இந்த அனிமேன்களை நிறுத்துவதன் ஊடாக ஐபோன்களின் செயற்பாட்டு வேகத்தை அதிகரிக்கக்கூடியதாக இருப்பதுடன், மின்கல செயற்பாட்டு நேரத்தையும் அதிகரிக்க முடியும்.

# சிங்கர் சிறிலங்கா, பீக்கோ அனுசரணையில் மூன்று ஜோடிகள் ஸ்பெயினுக்குச் சுற்றுலா




நுகர்வோர் சாதனங்களின் விற்பனையில் நாட்டில் முன்னிலை வகித்துவருகின்ற நிறுவனமான சிங்கர் சிறிலங்கா பீஎல்சி மற்றும் ஐரோப்பாவில் முன்னணியில் திகழும் வீட்டுப் பாவனைச் சாதனங்கள் மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் உற்பத்திகளின் வர்த்தகநாமமான பீக்கோ ஆகியவற்றின் அனுசரணையில் உலகில் முன்னிலை வகிக்கும் உதைபந்தாட்டக் கழகத்தின் ஆட்டத்தை வார இறுதியில் நேரில் கண்டு களிப்பதற்குப் பிரயாணம் செய்யும் வாய்ப்பு மூன்று அதிர்ஷ்டசாலி ஜோடிகளுக்கும், கிளை முகாமைத்துவத்தில் பீக்கோ விற்பனையில் அதிகபட்ச பங்களிப்பை வழங்கியவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நாடளாவியரீதியில், தெரிவுசெய்யப்பட்ட சிங்கர் காட்சியறைகளில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்ற விசேட பீக்கோ ஊக்குவிப்பின் நிறைவில் இடம்பெற்ற மாபெரும் அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பின் மூலமாக மூன்று அதிர்ஷ்டசாலி ஜோடிகள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த வெற்றியாளர்கள் லயனல் மெஸ்ஸி, நெய்மர் மற்றும் லூயிஸ் சுவாரிஸ் போன்ற சர்வதேச உதைபந்தாட்ட நட்சத்திரங்களைக் கொண்ட உலகின் பிரபலமான ஸ்பானிய உதைபந்தாட்டக் கழகமான எவ்.சி பார்சிலோனா கழகத்தின் நேரடி ஆட்டத்தை ஸ்பெயின் பார்சிலோனா நகரிலுள்ள பிரபலமான அரங்கத்தில் கண்டுகளிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

பார்சிலோனா நகருக்கான இரு வழிப் பயண விமான டிக்கட்டுக்கள், நட்சத்திர வகுப்புத் தங்குமிட வசதி, போக்குவரத்து மற்றும் வார இறுதியில் இடம்பெறுகின்ற எவ்.சி பார்சிலோனா ஆட்டத்துக்கான நுழைவுச் சீட்டுக்கள் ஆகியவை பரிசுகளில் உள்ளடங்கியுள்ளன. இந்த அதிர்டக் குலுக்கல் சீட்டிழுப்பு, சிங்கர் சிறிலங்கா நிறுவனத்தின் முகாமைத்துவ அதிகாரிகளால் மேல் மாகாணத்தின் வருமானத் திணைக்களத்தின் அதிகாரிகள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் பீக்கோ மற்றும் எவ்.சி பார்சிலோனா கழகம் ஆகியவை தமக்கிடையில் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதுடன், இதன் கீழ் சர்வதேச வீட்டுப் பாவனைச் சாதன உற்பத்திக் குழுமம் நான்கு ஆண்டுகளுக்கு கழகத்தின் உலகளவிலான அனுசரணைப் பங்காளராக மாறியுள்ளது. கழகத்தின் தலைமை அணியினர் அனைத்துப் பருவ காலங்களிலும் ஆடுகின்ற அனைத்து ஸ்பானிய லீக் மற்றும் கிண்ண ஆட்டங்கள் மற்றும் சிநேகபூர்வ மற்றும் கோடை கால சுற்றுலா ஆட்டங்கள் அனைத்தின் போதும் அவர்கள் அணியும் சேர்ட்டுக்களின் கைப்பகுதியில் பீக்கோவின் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளமை இந்தப் பங்குடமையின் அடையாளமாகும்.

பீக்கோவின் பொதுநலவாய சுதந்திர நாடுகள், அண்டை கிழக்கு மற்றும் இந்தியாவுக்கான சந்தைப்படுத்தல் முகாமையாளரான சீஹான் சேஹான் இது பற்றிக் கூறுகையில், தனது 60 ஆவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடுகின்ற பீக்கோ வர்த்தகநாமம், தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக ஐரோப்பாவில் அதிக வளர்ச்சி வீதத்தை ஈட்டியுள்ள வர்த்தக நாமம் என்ற தரப்படுத்தலைச் சம்பாதித்துள்ளதுடன், ஐரோப்பாவில் தனித்தியங்கும் வீட்டுப் பாவனைச் சாதனங்கள் வர்த்தக நாமங்களில் தனது முதலாவது ஸ்தானத்தைத் தொடர்ந்தும் பேணிவருகின்றது. இலங்கையில் பீக்கோ கண்டு வருகின்ற வளர்ச்சி, மிகவும் ஊக்க மளிப்ப தாக அமைந்துள்ளதுடன், இலங்கையிலுள்ள மிகவும் பெரிய வீட்டுப் பாவனைச் சாதனங்கள் விற்பனை நிறுவனத்துடன் பங்காளராக இணைந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

**வணிகம்**

இந்நிகழ்வில் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட சிங்கர் ஸ்ரீ லங்கா பீஎல்சி நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் துறை பணிப்பாளரான மகேஷ் விஜேவர்த்தன, சிங்கர் சிறிலங்கா மற்றும் பீக்கோ ஆகிய நிறுவனங்களின் தனிச்சிறப்பை வெளிக் காண்பிக்கும் வகையில் தனித்துவமான, அதிசிறந்த அனுபவங்களை இந்த விசேட ஊக்குவிப்பு, பெறுமதிமிக்க எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது—என்று குறிப்பிட்டார். (த)

# ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளை தனதாக்கியுள்ள ஒமெகா லைன்



இலங்கையில் காணப்படும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட முன்னணி ஆடை உற்பத்தியகமான ஒமெகா லைன், அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வில், ஆடைத் தொழிற்றுறைப் பிரிவில் ஏற்றுமதி சிறப்புகள் விருதைத் தனதாக்கியிருந்தது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் இந்த நிகழ்வு, ஏற்றுமதியாளர்களைக் கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது. கொழும்பு தாமரைத் தடாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்றிருந்தார்.

பெண்களின் உள்ளாடைகள், காலுறைகள், இரவு ஆடைகள் மற்றும் நீச்சல் ஆடைகள் உற்பத்தியில் உலகப் புகழ் பெற்ற இத்தாலியின் கல்சிடோனியா மேற்பார்வையின் கீழ் ஒமெகா லைன் குரூப் செயற்படுகிறது. கல்சிடோனியாவின் விற்பனைக் காட்சியறைகள் ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளில் காணப்படுகின்றன.

கல்சிடோனியாவின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் [illegible] படல்கம, அல்ஃபா அப்பரல்ஸ் லிமிட்டெட், பொல்ஹாவெல, பென்ஜி லிமிட்டெட், பிங்கிரிய மற்றும் வவுனியா அப்பரல்ஸ், வவுனியா ஆகியவை அடங்கியுள்ளன. இந்த அனைத்து நிறுவனங்களிலும் 12,000 க்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்ச

அதனை எதிர்கொள்வதற்குச் சட்டத் தரணிகளைத் தயாராக வைத்துக்கொள்ளுங்கள்.

இவ்வாறு நாடாளுமன்றில் வைத்து நேற்று ராஜபக்ச படையணிக்குச் சாட்டையடி கொடுத்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க .

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது.

இதன்போது, இலங்கையில் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற பொருளாதார மாநாட்டுக்கு ஜோர்ஜ் சொரோஸ் சிறப்பு அதிதியாக அழைக்கப் பட்டுள்ளார் எனச் சுட்டிக்காட்டி, அதனுடன் தொடர்புடைய ஐந்து வினாக்களை அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவிடம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எழுப்பியிருந்தார்.

மேற்படி வினாக்கள் நேற்று (நேற்றுமுன்தினம்) தான் எனக்கு கிடைத்தன. ஆகவே, பதிலளிப்பதற்கு எனக்கு இரண்டு வாரங்கள் அவகாசம் தேவை. அத்துடன், இந்த வினாக்கள் எனது அமைச்சுக்குரிய விடயதானங்களுடன் தொடர்புடையதா எனப் பார்க்க வேண்டும் என்று கூறினார் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம.

இதன்போது, குறுக்கீடு செய்த உதய கம்மன்பில, கடந்த டிசெம்பர் மாதத்திலேயே இந்த வினாக்களைச் சமர்ப்பித்துவிட்டேன். தற்போது மாநாடும் முடிந்துவிட்டது என்று சுட்டிக்காட்டினார். இதனையடுத்து பிரதமர் எழுந்தார். கடும் சீற்றத்துடன் அவர் கருத்து வெளியிட்டார். இடையிடையே கிண்டலும் அடித்தார்.

இதன்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில்,

ஜோர்ஜ் சொறொஸை, அரசு அழைக்கவில்லை. அவர் வந்துதான் இங்கு மாநாடு நடத்தி, எனக்கும் ஜனாதிபதிக்கும் அழைப்பு விடுத்தார். நீங்கள் ஆதரவு வழங்கிய ராஜபக்ச படையணி போல், அவர்கள் திருடர்கள் அல்லர். ராஜபக்ச படையணிதான் மிகப்பெரிய திருட்டுக் கும்பல். ஆயிரம் பில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்று தெரிய வில்லை. மக்கள் வளங்களும் சூறையாடப்பட்டுள்ளன. வெட்கம் இல்லையா?

உங்கள் ஆட்சிபோன்று (மகிந்த ஆட்சி) எங்களிடம் திருட்டுப் பொருளாதாரக் கொள்கை இல்லை.

இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் திருடப்பட்டவிதம், தரவுகளை வெளிப்படுத்துவோம். சட்டத்தரணிகளை தயாராக்கிக் கொள்ளுங்கள் -என்றார். (த-வ-4)

## ஜன்னல்

நேற்று அதிகாலை 4 மணிக்குப் பார்த்தபோது, வீட்டினுள் பொருள்கள் சிதறிக் கிடந்தன. இதனால் சந்தேகப்பட்டு, உட்சென்று நகை மற்றும் பணம் வைக்கப்பட்ட அலுமாரியைச் சோதனையிட்ட போது, அங்கு அவை இல்லை.

வீட்டின் ஜன்னல் கம்பிகள் உடைத்து உள்நுழைந்துள்ள திருடர்கள், அலுமாரியிலிருந்த 28 பவுண் தங்க நகை மற்றும் 80 ஆயிரம் ரூபா பணத்தையும்திருடிச்சென்றுள்ளனர் எனக்குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நேற்று மாலை வரை குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்ற வாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (த-வ-4-21)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை அருமைநாயகம்

(ஓய்வூதியர் - யாழ்மாநகரசபை)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அருமைநாயகம் நேற்று (11.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற யோகமணிதேவியின் அன்புக் கணவரும் திருக்குமரன்(அமெரிக்கா), செந்தூர்க்குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவானி (அமெரிக்கா - முன்னாள் ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி), மகிழரசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதிரா (அமெரிக்கா), லபிநயன், அபிசன் (அமெரிக்கா), அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் மார்க்கண்டு வின் (மாங்குளம்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.03.2016) வெள்ளிக்கிழமை நடைபெற்று ஊரெழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஊரெழு மேற்கு, சுன்னாகம். (69221)(15,17) குடும்பத்தினர்.

செந்தூர்க்குமரன் - 077 2848 784
திருக்குமரன் (அமெரிக்கா) - 0014256285440

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா கணபதிப்பிள்ளை



தோற்றம்: 17.08.1931 மறைவு 11.03.2016

புற்றளை, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கம்மா கணபதிப்பிள்ளை நேற்று (11.03.2016) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஏரம்பு - வாரார்த்தப்பிள்ளை தம்பதியரின் மரு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், விஜயலட்சுமி, காலஞ்சென்ற வரலட்சுமி மற்றும் கமலாதேவி, சரஸ்வதி, ஏரம்பநாதன் (ஆசிரியர் / ஹாட்லிக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சாமிநாதன் மற்றும் தங்கவேலோன் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), காலஞ்சென்ற இரத்தினம் (கிருஸ்ணா மில் உரிமையாளர் - சாரையடி) மற்றும் மலரேஸ்வரி (ஆசிரியை - நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌரி, இளநங்கை, கோமதி, கோபிகிருஸ்ணன், கோபி சங்கர், நளினி, ரோகீசன், ரகுகரன், கோசலை, நளாயினி, நிருத்திகா, ஆரணிகா,அருந்தவராசா, ரஜீகரன், சிவானந்தன், நதியா, கபிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆனந்த், சாதுரியன், சாருஜன், சாரங்கா, சாரங்கன், மதுஷியா, மதுமிதா, அனந்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பார்வதி, லட்சுமிப்பிள்ளை ஆறுமுகம், கிருஸ்ணபிள்ளை, வீரபாகு ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
T.P: 078 739 5327 குடும்பத்தினர்.
க.ஏரம்பநாதன் (ஆசிரியர்- யா/ஹாட்லிக்கல்லூரி)

## மரண அறிவித்தல்

### மயிலு சிவநாதன்

(ஓய்வு பெற்ற இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்)

பிறப்பு 09 . 09 . 1947



இறப்பு 11 . 03 . 2016

அல்வாயைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி வூப்பெற்றாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மயிலு சிவநாதன் நேற்று (11.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு சிவக்கொழுந்து தம்பதியினரின் மூன்றாவது மகனும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேல் பாக்கியம் தம்பதியினரின் மருமகனும் கமலைநாயகியின் பாசமிகு கணவரும் சிவதர்சன், தர்சலா, யசோதினி ஆகியோரின் அன்புத்தந்தையும் பெஞ்சமின் பெர்கரின் அன்பு மாமனும் சிசிலிஅவனியாவின் பேரனும் செல்வமலர் சிவகுருநாதன் (சோதிடர்), திரவியமலர், நவநீதன், திரவியராசா(தாதியர் உத்தியோகத்தர்-பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை), ஆகியோரின் அன்புச் சகோதரனும் குரைத்தினம், பாக்கியமலர், துரைராசா, திருமலர், தேவரஞ்சினி (ஆசிரியை வடமராட்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கலாஞ்சலி, மயிலு சிவகுருநாதன் (சோதிடர்)
மனோகரா மயிலு நவநீதன்
அல்வாய். மயிலு திரவியராசா (தாதியர் உத்தியோகத்தர்- பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை)

## மரண அறிவித்தல்

மலர்வு 12 08 1926



உதிர்வு 08 03 2016

### அமரர் திருமதி.சிவசோதிப்பிள்ளை தர்மலிங்கம்


மாவிட்டபுரம் பளை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்,இந்துக்கல்லூரி வீதி, உரும்பிராய் வடக்கு, பம்பலப்பிட்டி வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சிவசோதிப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் 08.03.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவரோதயர், சின்னம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அ.தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சிவகடாட்சம்பிள்ளை, சிவபூரணபிள்ளை, மற்றும் காலஞ்சென்றவர்களான சிவதாசபிள்ளை, சிவபாலசுந்தரம்பிள்ளை, சிவசிங்காரியபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,இராங்கநாதன் (அவுஸ்திரேலியா),பார்வதி (இலங்கை), ஜமுனா (அவுஸ்திரேலியா), றூபா (லண்டன்), பவானி ( நியூசிலாந்து ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குமாரவேல் ( Former Apex Global Travels, Hotel Taprabane - GOH ), சிறீஸ்கந்தராஜா ( அவுஸ்திரேலியா), அனந்தகுமார் (லண்டன்), கமலாதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிருதுபாஷினி ( கென்யா ),அல்பிரட் செல்வராஜா( கென்யா ),லக்ஷினி ( அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும்,அனாயாமிஷாவின் ( கென்யா ) அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (12.03.2016) காலை 10.00 மணிமுதல் 4.00 மணிவரை பார்வைக்காக கல்கிசை மகிந்த மலர்சாலையில் வைக்கப்பட்டு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (13.03.2016) காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர். தொ.பேசி : 0774131153,0770712349,0773550991,0112582974

## நாகலிங்கம் மயில்வாகனம்



நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மயில்வாகனம் 09.03.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகனும், புகனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார், கிருபாநிதி, பதுமநிதி, சிவரஜினி, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரதி, சதானந்தராஜா ஆகியோரின் மாமனும், கயல்விழி, வசீகரன், யாழ்விழி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் நயினாதீவு சல்லி பரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
7 ஆம் வட்டாரம், நயினாதீவு. குடும்பத்தினர்.

தொ.பே. 021 561 1418

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் தயேந்திரன் அவர்களின்
பாசமிகு தந்தை

**நாராயணபிள்ளை திருநாவுக்கரசு**

அவர்களின் மறைவுக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிக்
கூட்டுறவுச் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி

மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் பிரதி திட்டமிடல்பணிப்பாளராக
கடமையாற்றும்
திருமதி செல்வராணி நிக்கொலஸ்பிள்ளை அவர்களின் அன்புத் தந்தை

**நாராயணபிள்ளை திருநாவுக்கரசு**

அவர்கள்
இறைபதம் அடைந்ததையிட்டு
எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன்,
அவரது குடும்பத்திற்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ் மாவட்ட செயலக நலன்புரி கழகம்**

## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம் 20 . 07 . 1950 — மறைவு 12 . 02 . 2016

அமரர்

### சின்னத்தம்பி சித்திரவழிவேல்

கடந்த 12.02.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தெய்வம் அமரர் சின்னத்தம்பி சித்திர வடிவேல் அவர்களது அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தியானது தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆற்றங் கரையில் கலக்கப்படும்.

அதனைத்தொடர்ந்து அவரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
தொண்டமானாறு.

குடும்பத்தினர்.
தொ.பே:021 321 0071

## எம்பிலிப்பிட்டிய

மீளவும் ஆரம்பித்துள்ளன.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தென்னிலங்கையில் கடந்த 2 ஆம் திகதியிலிருந்து, தொடர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. 6 துப் பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 3 பேர் உயிரிழந்திருந்தனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு, பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடுகள் அதிகரித்த மையே காரணமெனச் சுட்டிக் காட்டப்பட்டது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதனால் கடந்த நான்கு தினங் களாக எந்தவொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் பதிவாக வில்லை. இந்தநிலையில் நேற்று அதிகாலை மீளவும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம்நடைபெற்றுள்ளது. எம்பிலிப்பிட்டிய-செவனகல 700 பிரிவு வீடொன்றுக்குச் சென்ற இனந்தெரியாத நபர் கள், அங்கு துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டுள்ளனர். இதில் 49 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், அவ ரது கணவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரிலுள்ள கடை ஒன்றிற்கு வேலையாள்கள்
தேவை
சம்பளம்-:ஆண்-10,000/பெண்-8,000
**தொடர்புக்கு:0766398980**

## தவறிவிட்டது

கிருஸ்ணராசா பிரணவன் ஆகிய எனது
880622986V இலக்கமுடைய
தே.அ.அட்டை சாரதி அனுமதிப்பத்திரம்
அடங்கிய பேஸ் யாழ் நகரத்திற்கும்
அரியாலைக்கும் இடையில் தவறிவிட்டது.
**தொடர்புகளுக்கு: 077 2787223 077 0168432**

## தேவை

கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வரும் எமது நிறுவனத்திற்கு உப ஒப்பந்தகாரர்கள் ( Sub Contractors ) மேசன், கூலி மற்றும் தினக் கூலி அடிப்படையில் மேசன், கூலியாள்கள் தேவை.

**தொடர்புகளுக்கு :
077 3614638, 077 8038567**

## வேலையாள்கள் தேவை

நடமாடும் பாண் வாகனம் ஓடுவ தற்கு சாரதியும், பாண் விற்பனை செய்யக் கூடியவரும் தேவை.

**புதிய துர்க்கா வெதுப்பகம்
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,யாழ்ப்பாணம்.**

## CCTV

100% தொழில் சார்
செயன்முறை பயிற்சிநெறி



**CCTV துறையில்
வல்லுனர் ஆவதற்கு இதோ
ஓர் அரிய வாய்ப்பு**

**Job Guaranteed***
(*Conditions apply)
**Next Batch: 19 - March - 2016**

iCS EDUCATION
77, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமையில்)
021-4926222,076-7013060

## லக்கின வாசனா

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 11.03.2016 | 1953 | சிவப்பு |

மேடம்
வெற்றி இலக்கங்கள்
**08 17 24 37**

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
**ரூ 3,694,480/-**

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்புக
அழைப்பு இலக்கம் 1919

2016 மார்ச் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
அதிர்ஷ்ட டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## நியத்த ஜய

| | |
|---|---|
| வெற்றி வாரம் | 444 |
| திகதி | 11.03.2016 |
| வர்ணம் | நீலம் |

வாசி தவறாச
விஷேட வெற்றி இலக்கம்
**2569**

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
**ரூ 13,671,500/-**

வெற்றி இலக்கங்கள்: **27 46 49 61** ஆங்கில எழுத்து: **M**

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ vd ilg; nra;
1919 இற்கு அனுப்புக
Tel: 011 4 824 824

15.03.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## யூனியன் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கான விசேட பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் 13.03.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தால் 20.03.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனை வரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.**

**பழைய மாணவர்
சங்கம்**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

### நல்லையா ரூபலக்கி

(கிராம உத்தியோகத்தர்
- J/186 உடுவில்)

**கடந்த 28.01.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் நல்லையா ரூபலக்கி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.03.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**கனகசபை வீதி,
மானிப்பாய்.**

**குடும்பத்தினர்.**

(c29692) (13.17.18.20)

## S.k Broking institute

No. NAL/ DS/ 1442

**காணிகள் விற்பனைக்கு உண்டு**

யாழ் சிவலிங்கப் புளியடி ஒட்டுமடம் வீதியில் 3 1/2 பரப்பு காணியும், கோப்பாய் பெற்றோல் செற் முன் ஒழுங்கையில் 9 பரப்பு காணியும், திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியில் 7 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.
**மற்றும் எம்மிடம் வீடுகள் காணிகள் விற்பனைக்கு உண்டு.**

**தொடர்புகளுக்கு: 077 4613884, 077 1933490**

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில்
இயங்கிக்கொண்டிருக்கும் பிரபல வர்த்தக
நிறுவனத்துக்கு விற்பனை உதவியாளர்
தேவை
குறிப்பு: ஆண்கள் மட்டும்.
ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:0214923724**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **கணபதிப்பிள்ளை யோகராசா**
(பச்சிலைப்பள்ளி பிரதேசசபை ஊழியர்)



**தோற்றம் 17.01.1958**
**மறைவு 22.02.2015**
**திதி: சதுர்த்தி**

கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
ஓராண்டாய் சென்றுவிட்டீர்
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
எது செய்வது என்று தெரியாமல்
தவிக்கின்றோம்.

பெரியபளை, பளை

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலி.

உரிமையாளரிடம் கையளிக்கும் நிகழ்விலும் ஜனாதிபதி கலந்துகொள்வார்.

இதன் பின்னர், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இடம் பெறும் காணிக் கையளிப்பு நிகழ் வில் பங்கேற்பார். கடந்த டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி வலி.வடக்கில் 716 ஏக்கர் நிலப்பரப்பு மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படாமல் இருந்தது. இந்த நிலையில், இதனை உத்தியோகபூர்வாமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று கையளிக்கவுள்ளார்.

அத்துடன், காங்கேசன்துறைப் பிரதேசத்தில் மேலும் 130 ஏக்கர் நிலப் பரப்பு விடுவிக்கும் அறிவித்தலையும் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மற்றும் கங்கேசன்துறை நடேஸ்வரா கனிஸ்ட வித்தியாலயம் என்பனவும் இந்த நிகழ்வில் வைத்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் காங்கேசன்துறை வீதியில், மாவிட்டபுரம் ஆலயத்துக்குச் சற்றுத் தொலைவில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலி, பின்னகர்த்தப்பட்டு, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை அண்மித்து அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5-101)

## வலி. வடக்கில்

பலாலி விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக விஸ்தரிப்புச் செய்ய வேண்டாம். வலி.வடக்கு மக்கள், அடுத்த மாதத்துக்குள் மீள்குடியமர்த்தப்படவேண்டும் மற்றும் நலன்புரி நிலைய மக்களுக்கான வாழ்வாதாரங்களை வழங்கவேண்டும் ஆகிய 3 கோரிக்கைகளையும் முன்வைத்து குறித்த அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி, வலி. வடக்கு நலன்புரி நிலைய பொதுநிர்வாக அமைப்பினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 6 மாத காலத்துக்குள் எம்மை எமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவார் என நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்புச் செய்வோம் எனக் கூறியதன் பின்னர், ஜனாதிபதியின் வார்த்தையில் நம்பிக்கை இழந்து விட்டோம்.

அவர் 6 மாதத்துக்குள் வலி.வடக்கில் மீள்குடியேற்றம் செய்து, வலி.வடக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தருவேன் எனக் கூறினார். ஆனால், பலாலி விமான நிலையத்தைச் சர்வதேச விமான நிலையமாகப் புனரமைப்புச் செய்வதற்கு, வலி வடக்கு மக்களின் காணிகள் சுவீகரிக்கப்படுமென்றும், அதை யார் எதிர்த்தாலும், பலாலி விமான நிலையம் விஸ்தரிப்புச் செய்யப்படுமென்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ஆகியோர் தெரிவித்த கருத்துக்கள் எம்மை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

மேலும், அத்தியாவசியப் பிரச்சினைகளான, மலசல கூடங்கள் பாவிப்பதில் பிரச்சினை, குடிதண்ணீர் பிரச்சினை உட்பட இளம் பெண்களுக்குத் திருமணம் செய்வதில் பிரச்சினை, சமூக கலாசார பிரச்சினைகளை எதிர்நோக்கும் தமக்கு உடனடியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென்றும், தமது சொந்த இடத்துக்குச் சென்று தாங்கள் ஏதாவது ஒரு தொழிலை செய்து நிம்மதியான வாழ்க்கை வாழ்வோம் என்றும் நலன்புரி முகாம் மக்கள் தெரிவித்தனர்.

எனவே, சுமார் 26 வருடங்களுக்கு மேலாக, பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வரும் தம்மை, ஜனாதிபதி கருணை கொண்டு, தமது சொந்த நிலங்களில் மீள்குடியேற்றம் செய்யவேண்டுமென்றும், அவ்வாறு அடுத்த மாதம் புதுவருடத்துக்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யத் தவறினால், நாங்களாகவே சென்று மீள்குடியமர்வோம் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குறிப்பிட்டனர்.

மேலும் இன்றைய தினம் யாழ்.வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நடேஸ்வரா கல்லூரியை விடுவிக்கவுள்ளதாக அறிய முடிகின்றது. இதேபோல் எமது காணிகளையும் விடுவிப்பதாக வெறுமனே உறுதியளித்து விட்டுச் செல்லாமல், தனது நடவடிக்கைகள் மூலம் எமது காணிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, மீள்குடியேற்றம் செய்யும் வரை, நலன்புரி நிலைய முகாம்களில் வாழும் வலி.வடக்கு மக்கள், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அடையாள உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ-4-106)

## எரியூட்டப்பட்ட

இருப்பதால், இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலகக் கோஷ்டியினருக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோனின் ஆலோசனைக்கமைய, குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியஸ்டகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறுகையில்,

119 என்ற பொலிஸ் அவசர இலக்கத்துக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, தங்கொட்டுவ பிரதேசத்துக்குப் பொலிஸார் உடன் சென்றனர். அங்கு பாழடைந்த வீதியில், வான் ஒன்று எரிந்த நிலையில் இருந்தது. வானைப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அதில் 5 சடலங்கள் எரியுண்டு கருகிய நிலையில் இருந்தன.

இந்தச் சம்பவம் காரணமாகக் குறித்த பிரதேசத்தில் அசாதாரண சூழல் நிலவுகின்றது. இதன் உண்மைத் தன்மையைக் கண்டறிய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எரியுண்ட வாகனம் களுதொட பினான்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமானது என்று பொலிஸ் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. அதன் சாரதி, பன்னல பிரதேசத்தைச் சேர்ந்த கபில என்று கண்டறியப்பட்டுள்ளது. வானுக்குள் இருந்து மீட்கப்பட்ட எரியுண்ட சடலங்களை, கபிலவின் மனைவி பார்வையிட்டுள்ளார். இருந்தபோதும், அந்தச் சடலங்களுக்குள் தனது கணவரின் உடல் இருக்கின்றதா இல்லையா என்பதை அவரால் அடையாளம் காட்ட முடியவில்லை.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணிக்குத் தமக்கு தொலைபேசி ஊடாக அழைப்பை மேற்கொண்ட கபில, நண்பர்களுடன் பயணம் ஒன்று மேற்கொள்வதாகக் கூறியதாக, அவரின் மனைவி விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார். கபில மீது நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இதேவேளை, கொள்ளுப்பிட்டியில் வசித்து வரும் நபர் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு முதல் காணாமற்போயுள்ளார் என்று, அவரின் தாயார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இவரின் சடலமும் இதில் அடங்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

வாகனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வான் எரியவில்லை. ஏனெனில், அதில் எவ்விதமான கோளாறும் இல்லை. வான் எரியூட்டப்பட்டிருக்கலாம் என்றே சந்தேகிக்கின்றோம். சம்பவ இடத்தில் அதிகமான இரத்தம் காணப்பட்டதை விசாரணைகளில் கண்டறிந்துள்ளோம். அத்துடன், செருப்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இரண்டு பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று நாம் சந்தேகிக்கின்றோம் - என்று பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

எரிந்த வானிலிருந்து கூரிய கத்தி போன்ற ஆயுதம் ஒன்றும் மூன்று கைத்தொலைபேசிகளும் கிடைத்துள்ளதாக அந்த இடத்துக்கு சென்றிருந்த செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கருகிய நிலையில் மீட்கப்பட்ட சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (த-வ-5)

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
08
04
1939



**இறைவனடி**
09
03
2016

## திருமதி கமலாதேவி தர்மலிங்கம் B.Sc (Hons), Dip. in. Ed

ஓய்வுபெற்ற ஆசிரியை - கொழும்பு விவேகானந்தா ம.வி.,
வேலணை - சரஸ்வதி வித்தியாலயம்
Chundikuli Girls College - பழைய மாணவி

வேலணை கிழக்கு 'பொற்பதி' இல்லத்தைப் பிறப்பிடமாகவும், திரு-பதி இல்லத்தை வசிப்பிடமாகவும், பின்னர் கொட்டாஞ்சேனை 74, மேபீல்ட் வீதியிலும், தற்பொழுது வெள்ளவத்தை சுவிசுத்தாராம வீதியில் வசித்தவருமாகிய திருமதி. த. கமலாதேவி அவர்கள் 09.03.2016 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற அதிபர் பண்டிதர் அம்பலவாணர் பொன்னுத்துரை, ஓய்வுபெற்ற ஆசிரியை நாகரெத்தினம் பொன்னுத்துரை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் செல்லப்பா மங்கையர்கரசியின் மருமகளும், முன்னாள் ஆசிரிய ஆலோசகர் திரு. செல்லப்பா தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், Dr. சதா பானு ஜனகனின் (UK) பாசமிகு தாயாரும், திரு. பா. ஜனகனின் (UK) அன்பு மாமியும், செல்வன் ஸ்ரீஸ்கந்தனின் (UK) அருமை அம்மம்மாவும் மற்றும் செல்வி கல்யாணி எதிரிசிங்காவின் உடன் பிறவா சகோதரியும் திருமதி. தி. நாகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) திரு. கல்யாணசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்), Dr. விமலேந்திரன் (Canada), Eng. - பாலேந்திரன் (Canada), திருமதி. விமலாதேவி (ஆசிரியை - Canada), Eng. - யோகேந்திரன் (UK), திரு இரவீந்திரன் (கணக்காளர் - UK), திரு. புவனேந்திரன் (கணக்காளர் - UK), திருமதி. நிர்மலாதேவி (ஆசிரியை - Canada), காலஞ்சென்ற வத்சலாதேவி ஆகியோரின் அருமை சகோதரியும், திருமதி ராஜேஸ்வரி (ஆசிரியை - Canada), காலஞ்சென்றவர்களான செ. இராசலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), செ. சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியவர்களின் மைத்துனியுமாவார். அத்துடன் காலஞ்சென்ற கந்தையா திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற கணக்காளர்), திருமதி. க. பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி. பா. இராஜலஷ்மி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி .வி. மங்கையர்கரசி (ஓய்வுபெற்ற கணக்காளர் - Canada), திருமதி. பா. வனஜா (கணக்காளர் - Canada), திரு. விஜயகுமார் (ஓய்வுபெற்ற கணக்காளர் - Canada), Dr. யோ. வனஜா (Australia),

திருமதி. இ. உஷா (கணக்காளர் - UK), திருமதி. பு. ரஞ்சி (கணக்காளர் - UK), திரு. லோகராஜ் (Nucler Medicine, Canada), திரு. சிவலோகநாதன் (ஓய்வுபெற்ற அதிபர் - Canada), திருமதி. இ. யோகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி .சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - Australia) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக **Borella** ஜயரட்ன மலர்ச்சாலையில் 12ஆம் திகதி சனிக்கிழமையும், 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் வைக்கப்பட்டு, **இறுதிக்கிரிகைகள் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில்** நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : திரு. செ. தர்மலிங்கம் - கணவர்
**Dr. Bhanu Janagan** - மகள்
0094 [illegible]
16-4/4, Suvisuddarama Road, Colombo -06.
0044 7862226401

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி தம்பிஐயா

(ஓய்வு பெற்ற பரிசாரகர்-யாழ் போதனா வைத்தியசாலை)



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி தம்பிஐயா 11.03.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மீனாட்சி தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்ற தம்பிஐயாவின் பாரியாரும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி சடையரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, அன்னம்மா, அருமைநாயகம் ஆகியோரின் சகோதரியும் அமுதாம்பிகையின் மைத்துனியும் கமலேஸ்வரி விக்கினேஸ்வரி(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்) அருந்தவராசா(ஜேர்மன்), இராஜேஸ்வரி, சுகுணேஸ்வரி, சிவனேசராசா(ஜேர்மன்), குகதீஸ்வரி(ஜேர்மன்), சுகந்தி (ஆசிரியர்-கொட்டகல), அன்பரசி(நோர்வே), ஆகியோரின் அன்புத்தாயாரும் சுந்தரலிங்கம்(ஓய்வு பெற்ற தபால் தரம்பிரிக்கும் உத்தியோகத்தர்), கணபதிப்பிள்ளை(ஓய்வு பெற்ற வைத்தியசாலை மேற்பார்வையாளர்), புஸ்பலீலா(ஜேர்மன்), ரிஷியசிருங்கர்(ஜேர்மன்) காலஞ்சென்ற இராஜசிங்கம் மற்றும் தேவரஞ்சினி(ஜேர்மன்), விஜயஸ்ரீ(ஜேர்மன்), அபயரெட்ணபண்டார(தேயிலை தொழிற்சாலை மேற்பார்வையாளர்), வசந்தன்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியும் தர்சினி-பிரபா(ஜேர்மன்), மயூரன்-ரதி(ஜேர்மன்), வீணாகாயத்திரி-செந்திலானந்(லண்டன்), ரகுவரன்-ஜீவிதா(பிரான்ஸ்) பிரபு-கவிதா(ஜேர்மன்), அபிராமி-விஷால்(ஜேர்மன்), அனித்தா (ஜேர்மன்), யாழினி-ரதீஸ்குமார்(பாதுகாப்பு உத்தியோகத்தர்), ராஜ்பரத்(ஜேர்மன்), பிரதீபா-இராஜசேகர்(ஆசிரியர்-மட்டக்களப்பு), பிரதீகா-கௌரீஷன்(ஜனசக்தி இனசூரன்ஸ் யாழ்ப்பாணம்-உரும்பிராய்), பிரேந்ரா(ஜேர்மன்).பிரியங்கா, பிரவீன், பிரித்வி(ஜேர்மன்), லாவண்யா-தர்சன், கௌதம், சந்துரு(ஜேர்மன்), டினேஷ்(ஜேர்மன்), சுலக்ஷா, சௌமியா, சஞ்ஜேய்(நோர்வே), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரிஷி-ஹரிஷ் (ஜேர்மன்), ஆகாஷ், ஆதேஷ்(ஜேர்மன்), மிருநாழினி, கௌசித், தக்ஷிகன், சஹான் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டயாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழனி ஆண்டவர் கோயில் வீதி
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.**

**தகவல்
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவரையாளி இந்து, ஹாட்லி அணிகள் இறுதியில் மோதுவதற்குத் தகுதி பெற்றன

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதுப்பிரிவினருக்கான கால் பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி என்பன இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்துடன் தேவரையாளியின் ஆதிக்கமும் ஆரம்பமானது. ஆட்டம் பதின்ம நிமிடங்களை எட்டமுதல் முதல்கோலை பதிவு செய்தார் தேவரையாளியின் மதுசாந். இந் தக் கோலே முதல் பாதியின் ஒரே கோலாகவும் அமைந்தது.

இரண்டாம் பாதியின் 13 ஆவது நிமிடத்தில் நரேஸ்குமார் மற்றொரு கோலைப் பதிவு செய்ய தேவரையாளியின் வெற்றி கிட்டத் தட்ட உறுதியானது. நீண்ட போராட்டத்தின் பின்னர் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணியின் நிரூபன் ஒரு கோலைப் பதிவு செய்தார். இருப் பினும் முடிவில் 2:1 என்ற கோல்களின் அடிப்படையில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது தேவரையாளி இந்துக்கல்லூரி அணி.





தொடர்ந்து இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியும் பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. முதல்பாதியில் இரு அணிகளும் தமக்குக் கிடைத்த வாய்ப்புக்களை வீணாக்க கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் பெரிதான மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. நிர்ணயிக்கப் பட்ட நிமிடங் களில் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் போக சமநிலைத் தவிர்ப்பில் கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை. முடிவில் 5:4 என்ற கோல்களின் அடிப் படையில் ஹாட்லிக் கல்லூரி இறுதியாட் டத்துக்குத் தகுதி பெற்றது.

(ம-108)

# மைக்கல், வீனஸ் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறின

இமையாணன் மத்தியின் துடுப்பாட்டத் தொடரில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் மற்றும் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**மைக்கல் வி.க - திருநெல்வேலி ரி.சி.சி**

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 8 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மாலிசந்தி விளையாட்டுக் கழகமும் திருநெல்வேலி ரி.சி.சி. விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரமேஸ் 5 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 39 ஓட்டங்களையும், ரூபன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அச்சுதன் 3 இலக்குகளையும், விமல்சன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

85 ஓட்டங்கள் என்ற பெரிய வெற்றி இலக்குடன் களமிறங்கிய மைக்கல் அணி 7.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக அச்சுதன் 21 ஓட்டங்களையும், வினோத் 14 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டநாயகனாக மைக்கல் அணியின் அச்சுதன் தெரிவு செய்யப்பட்டார்.

**வீனஸ் வி.க - காமாட்சி வி.க.**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். காமாட்சி விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற காமாட்சி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி 8 பந்துப்பரிமாற்றங்களில் 43 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரோ 14 ஓட்டங்களையும், கஜதேவன் 6 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிக்சன் 3 இலக்குகளையும், பிரதாப் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து எட்டக்கூடிய இலக்குடன் களமிறங்கிய காமா ட்சி அணிக்கு வீனஸ் அணியின் பந்து வீச்சாளர்கள் பெரும் நெருக்கடி கொடுத்தனர். 2 பந்துப்பரிமாற்றங்களை வீசிய அமீர் 2 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்ற 38 ஓட்டங்களை மட்டும் பெற்றது காமாட்சி அணி. (ம-108)

# சம்பியனானது உருத்திரபுரம் வி.க.

கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல்களின் அடிப் படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)



# கரவெட்டி கபடித் தொடர்

கரவெட்டி பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கபடித் தொடர் இன்று சனிக்கிழமை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளது.(ம-422)

## சிறை வாழ்வு

ஆரம்பமாகிய, குறித்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மாணவர்கள் சுழற்சி முறையில் மாலை 5 மணி வரை முன்னெடுத்தனர்.

இதன்போது, 'நல்லிணக்க அரசே! மௌனம் சாதிப்பது ஏன்?', பதவிக்கு வரும் வரை வாக்குறுதி;வந்த பின் மௌனம்!, அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்!, சிறை வாழ்வுதான் தமிழருக்கு தலைவிதியா?, அரசியல் கைதிகளுக்கு சாவுதான் தீர்வா?' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு, அவர்கள் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த உணவு தவிர்ப்புத் தொடர்பில் அங்கு மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த அரசைப் போன்று தற்போதைய நல்லாட்சி என்று சொல்லப்பட்டு வருகின்ற அரசும் மக்களை ஏமாற்றுகின்ற செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது. அரசியல் கைதிகளை விரைவாக விடுதலை செய்வோம் என உறுதியளித்த அரசு, அந்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை.

அத்துடன் சிலர் எந்தவித குற்றமும் பதிவு செய்யப்படாமல் வருடக் கணக்காகச் சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலே அண்மைய நாள்களில் சிறைச்சாலைக்கு நேரிலே சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் ஆகியோர், விடுதலை செய்யப்படுவீர்கள் - உரிய தீர்வுகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துச் சென்றபோதும், இதுவரை அவர்களுக்கு எந்தவிதத் தீர்வுகளும் கிடைக்கவில்லை.

இது தொடர்பில் நாடாளுமன்றில் உரை நிகழ்த்தும்போதும், அரசியல் கைதிகள் உயிரிழந்தால், அதற்குத் தான் பொறுப்பேற்கிறேன் என்பதான பொறுப்பற்ற தமது செயல் நிலைகளை அரசு வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் கண்டனத்திற்குரியவை.

இதேபோன்று, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மற்றும் சர்வதேச அரங்கில், அரசியல் கைதிகள் விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பன தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் அரசு, இதுவரையில் நிறைவேற்றவில்லை. அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.இந்த விடயங்கள் நல்லாட்சி அரசு தொடர்பான அதிருப்தி நிலையையும் விசனத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றன.

எனவே அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களுக்கான தீர்வை விடுதலையாக வழங்க வேண்டும்.தீர்வுகள் முன்வைக்கப்படாத விடத்து விடுதலையை வலியுறுத்தி மிகப் பெரியளவிலான மக்கள் பங்களிப்புடன் கூடிய போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த அடையாள உணவுதவிர்ப்பு போராட் டத்தில், அனைத்துப்பீட மாணவர்களுடன் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் தமது ஒத்துழைப்பை வழங்கியதோடு, துறைசார் விரிவுரையாளர்கள்,பேராசிரியர்கள்,பல்கலைக்கழக ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(து-வ-4 - ரி2)

## தனியார்துறை

பட்ச வேதன சட்ட வரைவு ஆகிய இரு வரைவுகளையும் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதத்துக்குச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே, அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

இந்தச் சட்டத்தின் பிரகாரம் முதலாவது கட்டமாக 40 ஆயிரம் ரூபா எல்லைக்கு உட்பட்ட தொகையை மாதாந்தச் சம்பளமா கப் பெறும் வேலையாள் ஒருவர், ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்புக்கு உரித் துடையவராவார். அந்த முதற்கட்டச் சம்பள அதிகரிப்பு 2015 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதியில் இருந்து நடை முறைக்கு வந்தது.

இதன் பிரகாரம் நாளொன்றுக்கு ஆயிரத்து 600 ரூபாவிலும் குறைவான சம்பளத்தைப் பெறும் வேலையாள் ஒருவர் நாளொன்றுக்கு 60 ரூபா சம்பள அதிகரிப்புக்கு உரித்துடையவராவார். தொகுதிக் கட்டண முறைமையின் கீழ் சம்பளம் பெறும் வேலையாள் ஒருவருக்கு, 2015 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 15 சதவீத சம்பள அதிகரிப்பு வழங்கப் படுகின்றது.

வேலையாள் 40 ஆயிரம் ரூபா சம்பளம் என்ற எல்லை வரையறையில் இருக்கும் பட்சத்திலோ அல்லது 41,500 ரூபாவிலும் குறைந்த சம்பளத்தைப் பெற்றாலோ அவருக்கு ஆயிரத்து 500 ரூபா அல்லது ஆயிரத்து 500 ரூபாவுக்கும் மேற்படாத அதிகரிப்பொன்று கிடைப்பதுடன், அதன் மூலம் அவர் 41 ஆயிரத்து 500 ரூபா மாதாந்த சம்பளத்துக்கு உரித்துடையவராக இருப்பார்.

41 ஆயிரத்து 500 ரூபாவுக்கும் அதிகமான மாதாந்தச் சம்பளத்தைப் பெறும் வேலையாளர்களுக்கு மேலதிகச் சம்பள அதிகரிப்பு கிடைக்காது.

இரண்டாம் கட்டச் சம்பள அதிகரிப்பு கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் வேலையாளுக்கு ஆயிரம் ரூபா வரவு - செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு கிடைகின்றது.

அத்துடன், இந்த ஏற்பாடுகளின் பிரகாரம் தொழில் வழங்குநர்கள் முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட சம்பள அதிகரிப்புகளின் கீழான நிலுவைச் சம்பளத்தையும் வழங்க வேண்டியிருக்கும்.

சம்பள அதிகரிப்பு தொடர்பான ஏற்பாடுகளையும் உள்வாங்கிய யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தமொன்றுக்குள் உள்வாங்கப்பட்ட தொழில் வழங்குநர்கள் இருப்பின், அவ்வாறானவர்கள் இந்த வரவு - செல்வுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவை வழங்க வேண்டி வராது.

இந்த சட்ட வரைவின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேசிய குறைந்த பட்ச மாதாந்த வேதனம் 10 ஆயிரம் ரூபாவாக்கப்படுவதாகவும் அந்த விகிதாசாரத்துக்கு அமைய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் 400 ரூபாவாக இருக்கும் - என்றார். குறித்த இரண்டு சட்டவரைவுகளுக்கும் நாடாளுமன்றம் நேற்று அங்கீகாரம் வழங்கியது.

(து-வ-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏக ஆதிக்கமில்லாமல் வடக்கின் போர்
# இன்று திருப்பங்கள் ஏற்படவும் வாய்ப்பு

வடக்கின் போரில் நேற்றைய இரண்டாம் நாளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முதல் இன்னிங்ஸ் 163 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்ததுடன் யாழ். மத்திய கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கி 164-6 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணி முதல் இன்னிங்ஸுக்காகச் சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக ஜெரோசன் 51 ஓட்டங்களையும், கோமேதகன் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் சார்பாக யதுசன் 4 இலக்குகளையும், நிலோஜன் 3 இலக்குகளையும், கானமிர்தன் 2 இலக்குகளையும், கபில்ராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கியது சென்.ஜோன்ஸ். முன்வரிசை வீரர்கள் எவரும் பெரியளவு தாக்கத்தைச் செலுத்தவில்லை. முதலாம் நாள் முடிவில் சென்.ஜோன்ஸ் 4 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கபில்ராஜ் 20 ஓட்டங்களுடனும் கிசாந்துயன் 7 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். மேலதிகமாக இரு ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் கபில்ராஜ். கிசாந்துயனின் ஆட்டத்தில் தடுமாற்றம் இல்லை. கச்சிதமாக இன்னிங்ஸை கட்டமைத்தார். அணித்தலைவரான கானமிர்தன் இரட்டை இலக்கத்தை எட்டவில்லை. கிசாந்துயன் - யதுசன் இணை மத்தியின் ஓட்டங்களை எட்டும் வகையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கிசாந்துயன். யதுசன் ஓர் முனையைப் பலப்படுத்த 10ஆம், 11ஆம் நிலை வீரர்களாக நிலோஜன், ஜோசேப் ஸ்ரெலோன் முறையே 15 ஓட்டங்களையும், 18 ஓட்டங்களையும் பெற சென். ஜோன்ஸின் இன்னிங்ஸ் 163 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. யதுசன் இறுதிவரை ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.







பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரியின் சார்பாக தீபன்ராஜ் 4 இலக்குகளையும், தசோபன் 3 இலக்குகளையும், அலன்ராஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டு ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது யாழ். மத்திய கல்லூரி. அணியின் ஓட்ட எண்ணிக்கை ஒன்றாக இருந்தபொழுது நிலோஜனின் பந்துவீச்சில் ஓட்டம் எதனையும் பெறாது வீழ்ந்தார் ஜெரோசன். பிரியலக்சன், கோமேதகன் இணை மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது யாழ். மத்திய கல்லூரி அணி. கானமிர்தனின் சுழலில் 34 ஓட்டங்களுடன் சிக்கினார் கோமேதகன். 28 ஓட்டங்களுடன் போல்ட் ஆகினார் பிரியலக்சன். அலன்ராஜ் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும், கௌதமன், டினோயன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். தற்பொழுது நிலைமை 123-5. அலன்ராஜுடன் இணைந்தார் கிருபாகரன். இலக்குச் சரிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. நாள் முடிவுவரை தாக்குப் பிடித்தனர். நாளின் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அலன்ராஜ். நாள் முடிவில் மத்திய கல்லூரி 164-6. கிருபாகரன் 30 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சார்பாக கானமிர்தன், நிலோஜன் இருவரும் தலா இரு இலக்குகளையும், கபில்ராஜ், யதுசன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

(ம)

" கிசாந்துயனின் ஆட்டத்தில் தடுமாற்றம் இல்லை. கச்சிதமாக இன்னிங்ஸை கட்டமைத்தார். கிசாந்துயன் – யதுசன் இணை மத்தியின் ஓட்டங்களை எட்டும் வகையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது. "



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியா-பாகிஸ்தான் ஆட்டம் தர்மசாலாவில் இருந்து மாற்றம்?



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் தர்மசாலாவில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆட்டத்தில் பங்குபற்ற முடியாதென பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அறிவித்துள்ளதுடன், ஆட்டத்தை வேறு மைதானத்துக்கு மாற்றித்தரும்படியும் கோரிக்கையும் விடுத்துள்ளது. குறித்த ஆட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆட்டத்தை தர்மசாலாவில் நடத்துவதற்கு இமாச்சலப் பிரதேச முதலமைச்சரின் விருப்பமின்மை, அங்கு போதிய பாதுகாப்பில்லை என்று அவர் தெரிவித்தமை ஆகியவற்றின் காரணமாக, அது தொடர்பில் ஆராய்வதற்காக, 3 பேர் கொண்ட பாகிஸ்தான் தூதுக் குழுவொன்று இமாச்சலப் பிரதேசத்துக்குச் சென்றது. அங்கு ஆய்வில் ஈடுபட்ட அக்குழு, இமாச்சலப் பிரதேசத்தில் போதுமான பாதுகாப்புக் காணப்படவில்லை என அறிக்கை சமர்ப்பித்தது. இதனையடுத்தே, அங்கு விளையாட முடியாது என பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைத் தொடர்பு கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, கொல்கத்தா அல்லது மொகாலியில் அந்த ஆட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுள்ளது. (ம)

**காணி விற்பனைக்கு**
மருதனார்மடப் பகுதியில் "4" பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
**தொ.பே:0773288795**

**மொழி வகுப்புகள்**
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் - Deutsch, நெதெர்லாந்து - Dutch, French, Italian, English வகுப்புகள் நடைபெறுகின்றன.
**விவேகானந்தா அக்கடமி**
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464







செல்ரா டி விகோ அணிக்கு எதிராக கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில், ரியல் மட்ரிட் அணியின் சார்பாக நான்கு கோல்களை விளாசியதன் மூலம், அந்த அணிக்காக ஒட்டுமொத்தமாக 350 கோல்களை பதிவு செய்துள்ளார் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ றொனால்டோ.




ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியின் சீருடை. (ம)




**ஸ்ரீ மீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர (சிவன்) தேவஸ்தானம்**
**மஹோற்சவ விஞ்ஞாபனம்** மன்மத வருடம் - 2016

சிவநேயச்செல்வர்கள்!
நிகழும் மங்களகரமான மன்மத வருடம் பங்குனித்திங்கள் முதலாம் நாள் (14.03.2016) திங்கட்கிழமை ஷஷ்டி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் கூடிய தினத்தன்று பகல் 11.30 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) ஆக தொடர்ந்து பத்துத் தினங்கள் (10) காலை,மாலை விழாக்கள் நடைபெறத்திருவருள் கூடியுள்ளதால்,அடியார்கள் ஆசார சீலர்களாக வந்து தரிசித்து சிவனருளோடு சகல யோகமிக்க பெருவாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ பங்குனி முதலாம் நாள் 14.03.2016 (திங்கட்கிழமை) பகல் 11.30 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
★ பங்குனி ஒன்பதாம் நாள் 22.03.2016 (செவ்வாய்க்கிழமை) பகல் 11.00 மணிக்கு ரதோற்சவம், நண்பகல் 12.30 மணிக்கு பச்சை சாத்துதல்.
★ பங்குனி 10 ஆம் நாள் 23.03.2016 (புதன்கிழமை) பஞ்சமுகார்ச்சனை, பிராயச்சித்தாபிஷேகம், பகல் சங்காபிஷேகம், தீர்த்தத்திருவிழா

சிவன் கோயில், புங்குடுதீவு - 03

தர்மகர்த்தாவும், மகாசபையினரும்,
நிர்வாக சபையினரும்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention
Batch 1: 14.03.2016
Batch 2: 16.03.2016
Batch 3: 19.03.2016
Batch 4: 21.03.2016
No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550
Hotlines: 0770365728, 0777585913, 0777222422, 071429935
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

# என்னால் முடிந்தவரை விளையாடுவேன் ஓய்வினை வெளிப்படுத்தாத டில்சான்



சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுவது குறித்து இலங்கை வீரர் டில்சான் முன்பின் முரணான நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த பல இன்னிங்ஸ்களில் தடுமாற்றம் காட்டிய டில்சான், ஆசியக்கிண்ணத் தொடரில் இலங்கையின் இறுதி லீக் ஆட்டமான பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இர்பான் இரு பிடியெடுப்புக்களை நழுவவிட, இறுதிவரை ஆட்டமிழக்காது 75 ஓட்டங்களைக் குவித்தார். டில்சானுக்கு தற் போது 39 வயதாகிறது. இருப்பினும் அவர் தொடர்ந்து விளையாடி வருகிறார். இளம் வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் அவர் தொடர்ந்து விளையாடி வருவதாகப் பலரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்நிலையிலேயே டில்சான் தனது ஓய்வு தொடர்பாக முரணான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

டில்சான் தெரிவிக்கையில் – இன்னும் கிரிக்கெட் விளையாடுவதில் நான் மகிழ்ச்சியே அடைகிறேன். என்னால் முடிந்த அளவு நான் தொடர்ந்து விளையாடிக் கொண்டுதான் இருக்கப்போகிறேன். எனக்குப் பதிலாக புதிய வீரருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் நான் அப்போதே விலகிக்கொள்வேன். (டிக்வெலவுக்கு ஏற்கனவே வாய்ப்புக் கொடுக்கப்பட்டாயிற்று. ஆனால் டில்சான் விலகவில்லை.) டெஸ்டில் நான் நல்ல நிலையில் இருக்கும் போது தான் ஓய்வு பெற்றேன். அப்போது வரை நான் சிறப்பாகவே டெஸ்டில் செயற்பட்டேன். இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கவே விடை பெற்றேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.